
# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஜூன் 2020

**www.tnpscthervupettagam.com**



















SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ....................9
தமிழ்நாடு செய்திகள் ....................24
தமிழ்நாடு ஊரக உருமாற்றத் திட்டம் .................... 24
CICTயின் முதலாவது நிரந்தர இயக்குநர் .................... 24
ஏழைகளுக்கான நல்லெண்ணத் தூதர் .................... 24
கீழடி அகழாய்வு .................... 25
NEET (நீட்) இடஒதுக்கீடு .................... 25
NIRF தரவரிசையில் தமிழ்நாடு .................... 26
மேட்டூரிலிருந்து நீர் திறப்பு .................... 27
இடஒதுக்கீடு குறித்த அவசரச் சட்டம் .................... 27
5 மணிமண்டபங்கள் (நினைவு மண்டபங்கள்) .................... 28
அகரம் அகழாய்வு .................... 28
சிவகளை அகழாய்வு .................... 28
கொடுமணல் அகழாய்வு .................... 29
கொந்தகையில் குழந்தை எலும்பு .................... 29
தமிழ்நாட்டில் MSME .................... 30
தேசியச் செய்திகள் ....................30
தொகுதி மறுவரையறை ஆணையம் .................... 30
காடுகளின் சிறு உற்பத்திப் பொருள் .................... 31
நிசர்கா சூறாவளி (புயல்) .................... 31
ஒரு தேசம் ஒரு குடும்ப அட்டைத் திட்டம் .................... 31
MSME (சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்) வரையறை .................... 32
CHAMPIONS .................... 32
ஒரு சூரியன் ஒரு உலகம் ஒரு கட்டமைப்பு .................... 32
ராஜேஷ் பூஷன் குழு .................... 33
“SWADES” .................... 33
துலிப் (TULIP) .................... 33
மருந்தியல் ஆணையம் .................... 34
ஒரு இந்தியா, ஒரு விவசாயச் சந்தை .................... 34
சீன எல்லை உள்கட்டமைப்பு .................... 35
ஸ்டார்ட் அப் மிளிரல் சூழலமைப்புத் தரவரிசை 2020 .................... 35
2020 ஆம் ஆண்டின் ஆளில்லா விமான அமைப்பு விதிகள் .................... 35
உணவுப் பாதுகாப்புக் குறியீடு .................... 36
தக்காண ராணி இரயில் – 90 ஆண்டுகள் .................... 36
இந்திய நிலக்கரிப் பரிமாற்றச் சந்தை .................... 37
நைமிஷா 2020 .................... 37
மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் 18வது அமர்வு .................... 37
பாலைவனத் துரத்தல் நடவடிக்கை .................... 38
கழிவு நீர் உற்பத்தி அடிப்படையிலான வகைப்பாடு .................... 38

5வது தேசிய நிறுவனத் தரக் கட்டமைப்பு (NIRF) .... 38
ஒரு துளி அதிகப் பயிர் .... 39
புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு சுகாதாரக் காப்பீடு .... 40
2019-20 இன் பாதுகாப்பு பதிவு .... 40
DBO உடன் இணைப்பு .... 41
இடஒதுக்கீடு குறித்து உச்சநீதிமன்றம் .... 42
இயற்கைக் குறியீடு 2020 .... 42
"HeiQ Viroblock" .... 43
iFLOWS .... 43
பி.கே. மொகந்தி குழு .... 44
DDMA .... 44
ஆரோக்கிய பாத் .... 44
M B லால் குழு .... 44
ARJUN .... 44
ADIP முகாம் .... 45
குடிமைப் பணிகள் வாரியம் .... 45
NDRF நிதி .... 46
காணொலி வாயிலாக சுகாதார நல மற்றும் ஆரோக்கியக் கண்காட்சி 2020 .... 46
YUKTI 2.0 .... 46
விண்வெளி சார்ந்த நடவடிக்கைகளில் தனியார் துறை பங்கேற்பு .... 47
இந்தியாவில் தற்கொலைகள் .... 47
ஓபிசியின் துணை (உள்) வகைப்படுத்துதல் குறித்த ஆணையத்தின் காலநீட்டிப்பு .... 47
வருடாந்திர காசநோய் அறிக்கை .... 48
"eBLood" .... 48
புதிய நடைமுறைகளைச் செயல்படுத்துதல் .... 48
இந்தியாவில் கோதுமை உற்பத்தியாளர் .... 49
லால்–பால்–பால் (Lal-Bal-Pal) .... 49
வெட்டுக்கிளி கட்டுப்பாடு .... 49
சங்கல்ப் பார்வ் .... 50
சுரக்சித் தாதா – தாதி, நானா – நானி அபியான் .... 50
நாஷா முக்த் பாரத் : வருடாந்திர நடவடிக்கைத் திட்டம் .... 51
தபால் வாக்கு முறை .... 51
சர்வதேசச் செய்திகள் .... 52
டி10 குழு .... 52
ஆற்றல் செயல்முறை அறிக்கை .... 52
கருப்பு இனத்தவர் போராட்டம் .... 52
G7 அமைப்பின் விரிவாக்கம் .... 53
எபோலா நோய்த் தொற்று .... 54
THAAD .... 54
ஆன்டிபா .... 54
C-TAP .... 55
UNSC அமைப்பின் நிரந்தரம் அல்லாத உறுப்பினர் .... 55

WEF மாநாடு 2021 ..... 55
உலகளாவிய நோய்த் தடுப்பு மருந்து மீதான மாநாடு ..... 56
UNSCல் இந்தியா ..... 56
இயற்கைத் தன்மைக் குறியீடு ..... 56
சீனா மீதான நாடாளுமன்றங்களுக்கிடையேயான கூட்டமைப்பு ..... 56
ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 75வது அமர்வு ..... 57
பூமியின் ஆழமான பகுதியில் சீனா ..... 57
கொரியப் பிரச்சினை ..... 58
QS உலகப் பல்கலைக்கழகங்கள் தரவரிசை ..... 58
சர்வதேச மதச் சுதந்திர அறிக்கை (IRF) 2019 ..... 59
ரமோன் மகசேசே விருது ..... 60
அமெரிக்கா மற்றும் ICC ..... 60
கத்தி சல்லீவன் ..... 60
கல்வான் பள்ளத்தாக்கு ..... 61
அமெரிக்காவில் காவல்துறைச் சீர்திருத்தங்கள் ..... 61
நேபாள எல்லைப் பிரச்சினை ..... 61
உலகப் போட்டிக் குறியீடு ..... 62
வெற்றி தின அணிவகுப்பு ..... 62
பசுபதிநாத் கோயில் ..... 63
உலக முதலீட்டு அறிக்கை 2020 ..... 63
GPAI (Global Partnership of Artificial Intelligence) ..... 63
சிப்ரி (ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம்) ஆண்டுப் புத்தகம் 2020 ..... 64
எல்லைப் படைவீரர்களின் சந்திப்புப் புள்ளிகள் ..... 65
ஜின்ஜியாங் பகுதி ..... 65
ஆசிய வளர்ச்சிக் கண்ணோட்டம் (ADO) ..... 66
UNSCற்கான தேர்தல் ..... 66
போர்ப்ஸ் நிகழ்நேர செல்வந்தர்கள் பட்டியல் ..... 66
UNGAவின் தலைவர் ..... 67
2020 இந்தியக் கருத்துகள் மாநாடு ..... 67
GAFA வரி ..... 67
தேசியப் பாதுகாப்பு முகமை ..... 68
சட்டத்தின் ஆட்சிக் குறியீடு ..... 68
EAG சந்திப்பு ..... 68
அமெரிக்காவின் கருவூலப் பங்குகள் ..... 68
சீனா மற்றும் ஜப்பான் இடையேயான தீவு விவகாரம் ..... 69
ஆயுத வர்த்தக ஒப்பந்தம் ..... 69
பாகிஸ்தானின் இந்துக் கோயில் ..... 70
வியன்னா ஒப்பந்தம் ..... 70
இந்தியாவிற்கு வெளியே உள்ள உலகின் முதலாவது யோகாப் பல்கலைக் கழகம் ..... 70
உலகளாவியக் கல்விக் கண்காணிப்பு அறிக்கை ..... 71
FATF-ன் சாம்பல் நிறப் பட்டியல் - பாகிஸ்தான் ..... 71
நாசிசத்திற்கு எதிரான வெற்றி ..... 71

சரிபார்க்கப்பட்டது எனும் முயற்சி ..... 71
உலகளாவியப் போக்குகள் – 2019 ஆம் ஆண்டில் கட்டாய இடப்பெயர்வு ..... 72
குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதற்கான உலகளாவிய நிலை அறிக்கை 2020 .. 72
உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் ..... 73
தங்கத்தைப் பண மதிப்பு அடிப்படையாகக் கொண்ட உலகின் முதல் அமெரிக்க தங்க டிஜிட்டல் நாணயம் ..... 73
2020 ஆம் ஆண்டின் தொழில்நுட்ப முன்னோடிகளின் பட்டியல் ..... 73
ஐக்கிய நாடுகள் சாசனக் கையொப்பத்தின் 75வது நினைவு தினம் ..... 73
மிகப்பெரும் எத்தியோப்பிய மறுமலர்ச்சி அணை ..... 74
கோஹாலா நீர் மின் திட்டம் ..... 74
பொருளாதாரச் செய்திகள் ..... 74
8 முக்கியமான தொழிற்துறைகள் ..... 74
காரிப் பருவகாலப் பயிர்களுக்கான MSP ..... 75
பிரதான் மந்திரி சுவாநிதி திட்டம் ..... 75
சமூகப் பங்கு பரிவர்த்தனை (SSE) ..... 75
மின்னணுத் துறைகளுக்கான திட்டங்கள் ..... 76
நிகழ்நேர மின்சாரச் சந்தை ..... 76
அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955 ..... 76
தொடர் தொழிலாளர் சக்தி ஆய்வு (PLFS) ..... 77
வளமான மற்றும் ஆற்றல் திறன்மிகு கட்டிடங்கள் ..... 77
ஜெயா ஜெட்லி பணிக்குழு ..... 78
ஆன்லைன் (நிகழ்நேர) கழிவுகள் பரிமாற்றத் திட்டம் ..... 78
இந்தியாவின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு ..... 78
குங்குமப்பூ மற்றும் ஹீங்க் பொருள் உற்பத்தி ..... 79
உலகில் மிகவும் அதிகச் செலவுமிக்க நகரங்கள் ..... 79
மானிய நிதியுதவி ..... 80
கடன் தன்மையின் விற்பனை ..... 80
நாடு தழுவிய அனைவருக்குமான அடிப்படை வருமானம் (UBI) ..... 81
இந்தியாவின் அந்நியச் செலாவணி ..... 81
2020 இந்தியக் கைபேசி பணவழங்கீட்டுச் சந்தை அறிக்கை ..... 81
பலம்கூர் மற்றும் நீரா ..... 82
இந்தியாவின் ஐந்தாவது மந்தநிலை ..... 82
எரிவாயு வர்த்தகம் ..... 82
இந்திய திவால் நிலை மற்றும் நொடித்தல் வாரியம் தொடர்பான ஆலோசனைக் குழு (IBBI) ..... 82
SATYABHAMA ..... 83
கரீப் கல்யாண் ரோஜ்கர் அபியான் ..... 83
இந்தியாவில் நிலக்கரிச் சுரங்கம் ..... 84
கால்நடை வளர்ப்பு உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி ..... 84
ஆர்பிஐ வங்கிக் கட்டுப்பாட்டின் கீழ் UCBs மற்றும் MSCBs ..... 84
சர்வதேச ஒப்பீட்டுத் திட்டம் (ICP) ..... 84
வருடாந்திர வங்கியியல் புள்ளி விவரம் – 2019 ..... 85
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 86

ப்ராக்சிமா b ........ 86
AB ஆரிஜி நட்சத்திர அமைப்பு ........ 86
ஸ்கார்பியன் (தேள்) மீன் – ஸ்கார்பியனோஸ்ப்சிஸ் நெக்லெக்டா ........ 87
2019 LD2 ........ 87
ஸ்பேஸ்எக்ஸ் (Space X) ........ 88
அல்ட்ரா ஸ்வச் ........ 89
உயர் செயல்திறன் கொண்ட மெக்னீசியம் உலோகக் கலவை ........ 89
பூமிக்கு அருகில் உள்ள பொருட்கள் (NEO) ........ 89
சூரியனின் ஒளிவட்டம் ........ 90
ஆர்செனிக்கம் ஆல்பம் ........ 91
சூரிய ஒளிவட்டம் ........ 91
மாலிப்டினம் டை ஆக்ஸைடு ........ 91
காந்த கலோரிப் பொருள் ........ 92
இஸ்ரோ ஒப்பந்தம் ........ 92
இணையக் கட்டுப்பாட்டு இயந்திர மனிதன் ........ 93
வளிமக் கரைசல்களின் கதிர்வீச்சு கட்டாயப்படுத்துதல் – வெளிப்புற இமயமலை ........ 93
அரிசியின் நேரடி விதைப்பு ........ 94
கோவிட் BEEP ........ 94
ANANYA ........ 94
டைட்டன் ........ 95
மரபணு மாற்றப்பட்ட விதைகள் ........ 96
KOI - 456.04 ........ 96
கூட்டு நிலவுத் திட்டம் ........ 97
மாலத்தியான் ........ 97
பருப்பொருளின் 5ம் நிலை ........ 97
கோவிட் – 19 நோய்த்தொற்றின் மருத்துவ முறை மேலாண்மை நெறிமுறை ........ 98
2020 ஆம் ஆண்டில் சூரியக் கிரகணம் ........ 98
டெக்சாமீத்தசோன் ........ 99
இந்தியாவின் முதல் தொற்றுநோய் கண்டறியும் ஆய்வகம் ........ 99
ஆன்டிஜென் சோதனைகள் ........ 99
I Lab (I ஆய்வகம்) ........ 100
மிகியஸ் ........ 100
CIPREMI ........ 100
பெய்டோ செயற்கைக் கோள் அமைப்பு 3 (BDS - 3) ........ 101
புளோரின் கண்டறியப் படுதல் ........ 101
திரவக் குளிர்விப்பு மற்றும் வெப்பமாக்கல் ஆடை ........ 102
மாரீச் நீர்மூழ்கிக் குண்டு தடுப்பு அமைப்பு ........ 102
SPARC ........ 102
கோழிகளின் வளர்ப்பு ........ 103
புதிய மருத்துவ மேலாண்மை நெறிமுறை ........ 103
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 103
விளையாட்டு வேளாண்மை ........ 103

இந்தியாவில் சுற்றுச்சூழலின் நிலை – 2020 ..... 103
நகர் வன் திட்டம் ..... 104
சுற்றுச்சூழல் செயல்பாட்டுக் குறியீடு ..... 104
பச்சை நிற ஒட்டுப்படம் ..... 104
ஆறாவது பெரும் அழிவு ..... 105
சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் வருடாந்திர அறிக்கை ..... 106
ஆசியச் சிங்கங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு ..... 106
அயற்பண்புடைய உயிரினங்களின் இறக்குமதி ..... 107
லோனார் ஏரி ..... 108
மலபார் வழுக்குத் (Gliding) தவளை ..... 109
பவளப் பாறைகள் வெளுத்தல் ..... 109
சிச்சோதோரக்ஸ் சிகுசிருமென்சிஸ் ..... 110
இந்தியப் பகுதியின் மீதான காலநிலை மாற்றம் குறித்த முதலாவது ஆய்வு ..... 110
ஆர்க்டிக் கடற் பனி ..... 111
“தி திங்” (The Thing) ..... 111
ஸ்டெகோடான் புதை படிவம் ..... 112
இந்தியாவில் சுடர்க்கரி நீக்கல் முறை போக்குவரத்து ..... 112
தில்லாரி வனப் பகுதி ..... 113
சட்ட விரோத வனவிலங்கு வர்த்தகம் குறித்த அறிக்கை ..... 113
இந்தியாவில் புலிகள் இறப்பு ..... 113
ஓசோன் அளவுகளில் அதிகரிப்பு ..... 114
மாநிலச் செய்திகள் ..... 115
உத்தரகாண்ட் மாநிலத்தின் கோடைக் காலத் தலைநகரம் ..... 115
அதிரப்பள்ளித் திட்டம் ..... 115
தேகோ அப்னா தேஷ் தொடர் ..... 116
மஸ்தகா ஆலயம் ..... 116
இமயமலையில் மலையேற்றம் – சிறந்த அனுபவங்கள் ..... 116
பழங்குடியின விடுதிக்கு ISO சான்றிதழ் ..... 117
கும்பகர் சசாக்திகரன் யோஜனா ..... 117
முக்கிய மந்திரி ஷராமிக் ..... 117
இந்திரா ரசோய் யோஜனா (இந்திரா சமூக உணவுத் திட்டம்) ..... 117
வடகிழக்கில் நிலநடுக்கம் ..... 118
குஷிநகர் விமான நிலையம் ..... 118
தேவிகா மற்றும் புனேஜா ..... 118
ஹரிதா ஹரம் ..... 119
K.K. சைலஜா ..... 119
சிறு தொழிற்சாலைகள் - கர்நாடகா ..... 119
ஆத்ம நிர்பர் உத்தரப் பிரதேச ரோஜ்கர் யோஜனா ..... 119
கோதான் நியாய் யோஜனா ..... 119
ஆந்திர நிதிநிலை அறிக்கை - 2020/21 ..... 119
நிஷ்டா வித்யுத் மித்ரா திட்டம் ..... 120
முக்கிய மந்திரி மாத்ரு புஷ்டி உபார் ..... 120

ஒரே சொடுக்கு முயற்சி (At one click Initiaitve) ........ 120
பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ........ 120
2020 ஆம் ஆண்டின் EY உலகத் தொழிலதிபர் ........ 120
காமன்வெல்த் சிறுகதைப் பரிசு 2020 ........ 120
ரிச்சர்டு டாக்கின்ஸ் விருது ........ 121
உலக உணவு விருது 2020 ........ 121
FIFA தரவரிசை ........ 122
ஆஸ்திரேலிய ஆணை விருது ........ 122
கத்தி லியூடர்ஸ் ........ 123
ஆஸ்கர் விருதுகள் ........ 123
கிளேர் கானர் ........ 123
விளையாட்டுச் செய்திகள் ........ 124
விளையாட்டு விருதுகளுக்கான பரிந்துரை ........ 124
கேலோ இந்தியா மாநில சிறப்புமிகு மையங்கள் ........ 124
2023 ஆம் ஆண்டின் பெண்கள் உலகக் கோப்பை ........ 124
முக்கிய தினங்கள் ........ 124
உலக பால் தினம் – ஜூன் 01 ........ 124
தெலுங்கானா மாநில உருவாக்க தினம் – ஜுன் 02 ........ 125
மாதவிடாய் சுகாதார தினம் - மே 28 ........ 125
உலக மிதிவண்டி தினம் – ஜுன் 03 ........ 125
ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவிக் குழந்தைகளுக்கான சர்வதேச தினம் ஜுன் – 4 ........ 126
உலக சுற்றுச்சுழல் தினம் – ஜூன் 05 ........ 126
சட்டவிரோத, பதிவு செய்யப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன் பிடித்தலைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் – ஜுன் 05 ........ 126
இரஷ்ய மொழி தினம் – ஜுன் 06 ........ 127
உலக உணவுப் பாதுகாப்பு தினம் – ஜுன் 07 ........ 127
உலகப் பெருங்கடல் தினம் – ஜூன் 08 ........ 128
உலக மூளைக் கட்டி தினம் – ஜுன் 08 ........ 128
பவளப் பாறை முக்கோணப் பகுதி தினம் – ஜுன் 09 ........ 129
உலக அங்கீகார தினம் – ஜுன் 09 ........ 129
குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான உலக தினம் – ஜுன் 12 ........ 130
உலக இரத்த தான தினம் – ஜுன் 14 ........ 130
உலக முதியோர் கொடுமைப்படுத்தல் விழிப்புணர்வு தினம் – ஜுன் 15 ........ 131
உலகக் காற்று தினம் – ஜுன் 15 ........ 131
வெளிநாட்டிலிருந்து குடும்பத்திற்குப் பணத்தை அனுப்புதலுக்கான சர்வதேச தினம் – ஜுன் 16. 131
பாலைவனமாக்கல் மற்றும் வறட்சியை எதிர்த்துப் போராடுவதற்கான உலக தினம் – ஜுன் 17 .. 131
உலக முதலை தினம் – ஜுன் 17 ........ 132
நீடித்த அறுசுவை உணவியல் தினம் – ஜுன் 18 ........ 132
ஜூன்டீன்த் நாள் - ஜூன் 19 ........ 132
சச்சரவுகளின் போதான பாலியல் வன்கொடுமைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் – ஜுன் 19 ........ 133
உலக அரிவாள் உயிரணு (செல்) விழிப்புணர்வு தினம் – ஜுன் 19 ........ 133
பொழுதுபோக்கிற்காக நடத்தலுக்கான உலக தினம் – ஜுன் 19 ........ 133

உலக அகதிகள் தினம் – ஜுன் 20 ..... 133
சர்வதேச யோகா தினம் – ஜுன் 21 ..... 134
ஜுன் கதிர் திருப்பம் ..... 134
தந்தையர் தினம் ..... 134
உலக இசை தினம் – ஜுன் 21 ..... 134
உலக நீர்நிலையியல் தினம் – ஜுன் 21 ..... 135
குதிரைலாட நண்டு தினம் – ஜுன் 20 ..... 135
சர்வதேச ஒலிம்பிக் தினம் – ஜுன் 23 ..... 136
ஐக்கிய நாடுகள் பொதுப் பணி தினம் – ஜுன் 23 ..... 136
சர்வதேச விதவைகள் தினம் – ஜுன் 23 ..... 136
மாலுமிகளின் (கடற் பிரயாணி) தினம் – ஜுன் 25 ..... 136
உலக வெண்புள்ளி தினம் – ஜுன் 25 ..... 137
போதை மருந்து முறைகேடு மற்றும் சட்ட விரோதக் கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் – ஜுன் 26 ..... 137
சித்திரவதைக்கு உள்ளானவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான சர்வதேச தினம் – ஜுன் 26 ..... 137
தேசிய வாசிப்பு நாள் - ஜூன் 19 ..... 138
சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் (MSME) தினம் – ஜுன் 27 ..... 138
தேசியப் புள்ளியியல் தினம் – ஜுன் 29 ..... 138
சர்வதேச வெப்பமண்டல தினம் – ஜுன் 29 ..... 139
சர்வதேசக் குறுங்கோள் தினம் – ஜுன் 30 ..... 139
சர்வதேச நாடாளுமன்றவாத தினம் – ஜுன் 30 ..... 139

# TNPSC துளிகள்

- மத்தியத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகமானது டிசிஎஸ் நிறுவனத்துடன் இணைந்து தனது தேசியத் தொழில் சேவைத் திட்டத்தின் கீழ் தொழில்சார் திறன் பயிற்சியை வழங்க இருக்கின்றது.
- இந்தியாவைச் சேர்ந்த 4 விண்வெளி வீரர்கள் இந்தியாவின் ககன்யான் திட்டத்திற்கான பயிற்சியை ரஷ்யாவில் மீண்டும் தொடங்கியுள்ளனர்.
    - இத்திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விண்வெளி வீரர்களுக்கு ரஷ்யாவின் காகரின் ஆராய்ச்சி மற்றும் விண்வெளி சோதனைப் பயிற்சி மையத்தில் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது.
- அமெரிக்காவானது உலக சுகாதார அமைப்புடனான (WHO - World Health Organisation) தனது உறவை அதிகாரப்பூர்வமாக விலக்கிக் கொண்டது.
    - WHOவிற்கு வழங்கப்படும் நிதியை இதர உலகளாவிய நிறுவனங்கள் மற்றும் நிதியை எதிர்பார்க்கும் உலகளாவியப் பொதுச் சுகாதாரத் தேவைகளுக்கும் அவசரமாக நிதி தேவைப்படும் நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் என்று அமெரிக்க அதிபர் அறிவித்துள்ளார்.
- கேரளா கண்ணாடியிழை வலையமைப்புத் திட்டம் (K-FON/Kerala Fibre Optic Network) எனப்படும் கேரள மாநிலத்தின் முதன்மைத் திட்டமானது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் செயல்படுத்தப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.
    - K-Fon திட்டத்தின் கீழ் கேரள மாநில அரசானது மாநிலத்தில் உள்ள அனைத்து வீடுகளையும் அலுவலகங்களையும் கண்ணாடியிழை அமைப்புடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது இந்தியத் தேசிய சிறப்பு மாதிரியைத் தொடங்கியுள்ளது.
    - இந்த மாதிரியானது கோவிட் – 19 நோய்த் தொற்றுப் பரவலைக் கண்காணிப்பதற்காக உதவுகின்றது.
- சர்வதேச எவரெஸ்ட் தினமானது ஒவ்வொரு ஆண்டும் மே 29 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
    - நியூசிலாந்தைச் சேர்ந்த சர் எட்மண்ட் ஹில்லாரி மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த டென்சிங் நோர்கே ஆகியோர் 1953 ஆம் ஆண்டு மே 29 அன்று முதன்முறையாக எவரெஸ்ட் சிகரத்தை அடைந்ததன் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் இத்தினமானது அனுசரிக்கப் படுகின்றது. இந்த மலை உச்சியை அடைந்த முதலாவது நபர்கள் இவர்களே ஆவர்.
- ஐக்கிய நாடுகள் ஜுன் 01 ஆம் தேதியை உலகப் பெற்றோர்கள் தினமாகப் பறை சாற்றியுள்ளது.
    - ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2012 ஆம் ஆண்டு முதல் ஜுன் 01 ஆம் தேதியை உலகப் பெற்றோர்கள் தினமாக அறிவித்துள்ளது.
- "என் வாழ்க்கை என் யோகா" போட்டி என்பது ஒரு காணொளி வலைப் பதிவகப் போட்டியாகும்.
    - இது மத்திய ஆயுஷ்துறை அமைச்சகம் மற்றும் இந்தியக் கலாச்சார உறவுகள் ஆணையம் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.

- கோவிட் – 19 ஆனது நாட்டின் சட்டப்பூர்வ மற்றும் அரசியலமைப்பு நிறுவனங்களால் கையாளப்பட்ட முதலாவது தேசிய அளவிலான இந்திய உயிரியல் பேரிடராகும்.
    - பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 என்ற சட்டத்தின் கீழ் மாநிலங்கள் மற்றும் மாவட்ட நிர்வாகங்கள் மத்திய உள்துறை அமைச்சத்தினால் வழங்கப்பட்டுள்ள விரிவான அறிவுறுத்தல்களின் அடிப்படையில் தங்களுக்குத் தகுந்த விதிகளை அதற்காக வேண்டி வகுத்துக் கொள்ளலாம்.
- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை (IT - Information Tecchnology) அமைச்சகம் & IT தொழிற்துறை அமைப்பான "நாஸ்காம்" ஆகியவை இணைந்து இந்தியாவின் தேசிய செயற்கை நுண்ணறிவுத் தளத்தை உருவாக்கியுள்ளது.
    - இந்தத் தளமானது செயற்கை நுண்ணறிவை அடிப்படையாகக் கொண்ட தீர்வுகளின் வளர்ச்சிக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "PM CARES" நிதியானது தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 என்ற சட்டத்தின் கீழ் "ஒரு பொதுத் துறை ஆணையம் அல்ல" என்று பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.
    - எனவே RTI சட்டத்தின் கீழ் பிரதமர் அலுவலகம் இந்த நிதி குறித்து எந்தவொரு தகவலையும் வழங்க மறுக்கலாம்.
- இந்தியாவின் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டாளரான மத்திய மருந்துத் தர நிர்ணயக் கட்டுப்பாட்டு ஆணையமானது ஜிலெட் அறிவியல் என்ற மருந்து உற்பத்தி நிறுவனத்தின் வைரஸ் எதிர்ப்பு மருந்தான 'ரெம்டெசிவிர்' என்பதின் மீதான சந்தைப்படுத்துதல் அங்கீகாரத்திற்காக அந்நிறுவனத்திற்கு அனுமதி வழங்கி உள்ளது.
    - ரெம்டெசிவிர் மருந்தானது எபோலா நோய்ப் பாதிப்பின் போது பயன்படுத்தப் பட்டது.
- வரும் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் கோவாவில் நடத்தத் திட்டமிடப் பட்டிருந்த 36வது தேசிய விளையாட்டுப் போட்டிகளானது தற்பொழுது கோவிட் தொற்றுநோய் வெடிப்பின் காரணமாக கால வரையறையின்றி ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.
    - இந்தப் போட்டியின் 35வது பதிப்பானது 2015 ஆம் ஆண்டில் கேரளாவில் நடத்தப் பட்டது.
- சீன நாடானது பல பில்லியன் டாலர் மதிப்பு கொண்ட சீனா-பாகிஸ்தான் பொருளாதாரப் பெருவழிப் பாதைக் கட்டமைப்பின் கீழ் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் பாயும் ஜீலம் நதியின் மீது 1124 மெகா வாட் திறன் கொண்ட ஒரு ஆற்றல் திட்டத்தை அமைக்க இருக்கின்றது.
    - இந்த மிகப்பெரிய ஆற்றல் திட்டமானது கொஹாலா நீர்மின் திட்டம் என்று அழைக்கப் படுகின்றது.
- மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரான கிரண் ரிஜ்ஜூ இந்திய சமூகப் பயிற்சி மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
    - இந்தத் திட்டமானது பள்ளிகளில் விளையாட்டுக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதற்காகத் தொடங்கப் பட்டுள்ளது.
- சர்வதேச பாலியல் தொழிலாளர்கள் தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஜீன் 02 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமானது ஆனது சென்னையில் உள்ள கோயம்பேட்டில் காலால் இயக்கப்படும் ஒரு மின் தூக்கியைச் செயல்முறைக்கு கொண்டு வந்துள்ளது.
    - இது இந்தியாவிலேயே இம்மாதிரியில் முதல் முறையிலான மின் உயர்த்திப் பொறிநுட்பமாகும்.

- முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி ஏ.கே.சிக்ரி டெல்லியில் தகராறுகளைத் தீர்த்து வைக்கும் இந்திய மையத்தைத் திறந்து வைத்துள்ளார்.
    - இது காகிதமற்ற முறையில் தகராறுகளைத் தீர்த்து வைக்கும் ஒரு சூழலை ஏற்படுத்தித் தருகின்றது.
- ஆர்.ஸ்ரீலேகா கேரளாவின் முதல் பெண் தலைமைக் காவல்துறை இயக்குனராகப் பொறுப்பேற்க உள்ளார்.
- இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ஜெனீவாவுக்கு வருகை தந்ததை நினைவில் கொண்டு சுவிட்சர்லாந்து அரசானது மே 26 ஆம் தினத்தை அறிவியல் தினமாக அறிவித்துள்ளது.
- அமெரிக்காவின் கார்மென் ரெய்ன்ஹார்ட் என்பவர் இரண்டு வருடக் காலத்திற்கு உலக வங்கியின் துணைத் தலைவராகவும் அதன் தலைமைப் பொருளாதார நிபுணராகவும் நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்துஜா குழும நிறுவனங்களை நடத்தி வரும் ஸ்ரீசந்த் மற்றும் கோபிசந்த் ஆகியோர் ஐக்கிய இராச்சியத்தின் செல்வந்தர் பட்டியல் 2020 என்ற பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளனர்.
    - அறிவியலாளர் சர் ஜேம்ஸ் டைசன் முதல் முறையாக சண்டே டைம்ஸ் செல்வந்தர் பட்டியல் 2020 என்ற பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.
- பெண்கள் ஆரோக்கியத்திற்கான சர்வதேச நடவடிக்கை தினம் என்பது 1987 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மே 28 அன்று அனுசரிக்கப்படும் ஒரு சர்வதேச நிகழ்வாகும்.
    - இது மகப்பேறு உரிமைகளுக்கான பெண்களின் உலகளாவிய வலையமைப்பு என்ற அமைப்பால் (WGNRR - Women's Global Network for Reproductive Rights) ஒருங்கிணைக்கப் படுகிறது.
- அமெரிக்காவைச் சேர்ந்த உலகின் மிகப்பெரிய மின்சார விமானமான செஸ்னா கேரவன் அதன் முதல் வெற்றிகரமான பயணத்தை மேற்கொண்டு நிறைவு செய்துள்ளது.
    - இந்த மின்சார விமானத்தின் பொறி இயந்திரம் (என்ஜின்) மேக்னிக்ஸ் என்ற நிறுவனத்தால் தயாரிக்கப் பட்டுள்ளது.
- ஃபோர்ப்ஸின் பத்திரிக்கையின் வருடாந்திர பட்டியலின் படி சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் முதல்முறையாக உலகின் அதிக சம்பளம் பெறும் ஒரு தடகள விளையாட்டு வீரரராக குறிப்பிடப் பட்டுள்ளார்.
    - ஜப்பானின் நவோமி ஒசாகா என்பவர் அதிக சம்பளம் பெறும் பெண் தடகள வீரராக உருவெடுத்துள்ளார். தனது சக டென்னிஸ் வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸை முந்திய முதல் பெண் விளையாட்டு வீரர் இவர் ஆவர்.
- ரஷ்யா அணுசக்தியால் இயங்கும் தனது ஸ்கிஃப் என்ற ஏவுகணையைச் சோதனை செய்து வருகிறது. இது 6,000 மைல் தொலைவில் உள்ள இலக்கைத் தாக்கும் திறன் கொண்டதாகும்.
    - இது உலகின் மிகப்பெரிய அழுக்கு “சர்வநாசகார குண்டு” (டூம்ஸ்டே - உலகத்தை முடிவிற்குக் கொண்டு வரும் நாள்) என்று அழைக்கப் படுகிறது.
- உலக செரிமான சுகாதார தினமானது ஒவ்வொரு ஆண்டும் மே 29 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.
    - 2020 ஆம் ஆண்டுப் பிரச்சாரத்தின் கருப்பொருள் ஆனது "குடல் நுண்ணுயிர்க் கட்டு (Gut Microbiome): ஓர் உலகளாவியப் பார்வை" என்பதாகும்.

- கொல்கத்தா துறைமுகத்தின் பெயரை ஷியாமா பிரசாத் முகர்ஜி துறைமுக அறக் கட்டளை என்று பெயர் மாற்றுவதற்கு வேண்டி மத்திய அமைச்சரவை தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
  - முன்னதாக, இந்தப் பெயர் மாற்ற அறிவிப்பானது கொல்கத்தா துறைமுகத்தின் 150வது ஆண்டு நினைவு தினக் கொண்டாட்டங்களின் போது வெளியிடப்பட்டது.
- அனுபவ் என்பது "SPIC MACY" என்ற அமைப்பால் நடத்தப்படும் ஒரு வாரக் கால நிகழ்நேரத் திட்டமாகும். இது இந்தியக் கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் மாய மற்றும் பன்முகத் தன்மை கொண்ட கோணங்களில் பங்கு பெறும் இளைஞர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
  - இளைஞர்களிடையே இந்தியப் பாரம்பரிய இசை, மற்றும் கலாச்சார ஊக்குவிப்பிற்கான சமூகம் என்பதே "SPIC MACAY" (Society for the Promotion of Indian Classical Music And Culture Amongst Youth) ஆகும்.
- இந்திய அரசானது பால் ஒன்றியங்கள் மற்றும் பால் உற்பத்தி நிறுவனங்களுடன் பணியாற்றும் 1.5 லட்சம் பால் பண்ணை விவசாயிகளுக்காக வேண்டி கிசான் கடன் அட்டைத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
  - இது ஆத்ம நிர்பர் பாரத் அபியான் என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- மத்தியத் தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறையின் கீழ் செயல்படும் திரைப்பட ஊடகத்தின் பகுப்பாய்வு குறித்த பீமல் ஜூல்கா குழுவானது திரையுலகத் தொழிற் துறையின் வளர்ச்சிக்காக தனது அறிக்கையை அந்த அமைச்சகத்திடம் சமர்ப்பித்து உள்ளது.
- இந்தியப் பிரதமர் மோடி ஆஸ்திரேலியப் பிரதமரான ஸ்காட் மோரிசனுடன் காணொலி மூலம் இருதரப்புச் சந்திப்பை மேற்கொள்ள இருக்கின்றார்.
  - இந்தியாவினால் மேற்கொள்ளப்பட இருக்கும் முதலாவது காணொலி வழியிலான இருதரப்புச் சந்திப்பு இதுவேயாகும்.
- சமீபத்தில் உலக வங்கியானது உலகப் பொருளாதார வாய்ப்புகள் அறிக்கை, 2020 என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
  - வளர்ந்து வரும் சந்தை நாடுகள் மற்றும் வளர்ந்து வரும் பொருளாதார நாடுகள் அதிக அளவில் பாதிப்பிற்கு உள்ளாகும் என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- மத்திய அரசானது புதிய அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கக் கொள்கையின் உருவாக்கத்திற்காக ஆலோசனை செயல்முறைகளைத் தொடங்கி உள்ளது. இது இந்த வரிசையில் 5வது கொள்கையாகும்.
  - இந்தச் செயல்முறையானது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை மற்றும் இந்திய அரசிற்கான முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் ஆகியவற்றினால் இணைந்து கூட்டாகத் தொடங்கப்பட்டுள்ளது.
- "LGBTQAI+" பணியாளர்களின் சேர்க்கையை ஊக்கப் படுத்துவதற்காக, மஹிந்தரா லாஜிஸ்டிக்ஸ் (போக்குவரத்து) நிறுவனமானது ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை வெளியிட்டுள்ளது.
  - இது செயல்திறன் மிக்க மக்களைப் பணியில் அமர்த்துதலையும் அதே பாலினத்தைச் சேர்ந்தவர்களுக்கான பலன்களை நீட்டித்தலையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேசிய துருவ மற்றும் கடல் ஆராய்ச்சி மையமானது 2021 ஆம் ஆண்டில் அமெரி பனித் தட்டு எல்லையானது 2016 ஆம் ஆண்டின் நிலையில் 24% அதிகரிக்கும் என்றும் 2026 ஆம் ஆண்டில் மேலும் அது 24% விரிவடையும் என்றும் கணித்து உள்ளது.
  - அமெரி பனித்தட்டு என்பது அண்டார்டிகாவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள

உலகின் மிகப்பெரிய பனிப்பாறை வடிகால் படுகைகளில் ஒன்றாக விளங்குகின்றது.

- ❖ நீண்ட தூர ஓட்டப்பந்தய வீரரான கிரண்ஜீத் கவுர் என்பவர் பரிசோதனையில் தடை செய்யப் பட்ட ஒரு பொருளை (எனோபோசாரம்) உட்கொண்டதற்கான அறிகுறிகள் தென்பட்டதனால், உலகத் தடகளப் போதை மருந்து தடுப்பு அமைப்பினால் 4 ஆண்டுக் காலத்திற்கு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிக்கப் பட்டுள்ளார்.
- ❖ மத்திய விளையாட்டுத் துறை அமைச்சரான கிரண் ரிஜ்ஜூ மற்றும் மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சரான அர்ஜுன் முண்டா ஆகியோர் நெடுந் தொலைவுகளில் வாழும் விளையாட்டு வீரர்களுக்கு ஆன்லைன் (நிகழ்நேர) பயிற்சி மற்றும் அது குறித்தக் கல்வியை வழங்குவதற்காக கேலோ இந்தியா மின்னணு - பாதசாலா என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
  - ○ இந்தத் திட்டமானது சமீபத்தில் தேசிய விளையாட்டுக் கூட்டமைப்புகளுடன் இணைந்து இந்திய விளையாட்டு ஆணையத்தினால் தொடங்கப் பட்டுள்ளது.
- ❖ இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் தளவாடப் பொருட்கள் உதவிக்கு வேண்டி இராணுவத் தளங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிப்பதற்காக "பரஸ்பர தளவாடப் பொருட்கள் உதவி ஒப்பந்தம்" (MLSA - Mutual Logistics Support Agreement) என்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுள்ளன.
- ❖ மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரான நிதின் கட்கரி "நெடுஞ்சாலைகளில் மனிதர்கள் மற்றும் விலங்குகளின் இறப்புகளைத் தடுத்தல்" எனப்படும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளார்.
  - ○ இந்தப் பிரச்சாரமானது சாலை விபத்துகளின் விகிதத்தைக் குறைப்பதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ 2022 ஆம் ஆண்டு மகளிர் ஆசியக் கோப்பைப் போட்டியை இந்தியா நடத்தும் என்று ஆசியக் கால்பந்துக் கூட்டமைப்பு உறுதி செய்துள்ளது.
  - ○ 1979 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதன்முறையாக இந்தியா இந்தப் போட்டியை நடத்துகின்றது.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது ரூ.500 கோடி நிதியுடன் பண வழங்கீட்டு உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதியத்தை உருவாக்கியுள்ளது.
  - ○ இந்த நிதியானது நாட்டில் விற்பனை முனைய உள்கட்டமைப்பு மற்றும் இதர டிஜிட்டல் பணவழங்கீட்டு உள்கட்டமைப்பை அதிகரிப்பதற்காக உருவாக்கப் பட்டுள்ளது.
- ❖ அம்பர்நயா நதியில் எண்ணெய் கொட்டப்பட்டதை அடுத்து அவசர நிலையை ரஷ்யா அறிவித்துள்ளது.
  - ○ அம்பர்நயா நதியானது சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த ஆர்க்டிக் கடலிற்குள் பாய்கின்றது.
- ❖ மத்திய மின்துறை அமைச்சரான R.K. சிங் உலக சுற்றுச்சூழல் தினத்தை அனுசரிப்பதற்காக "#icommit" என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
  - ○ இந்த முன்னெப்பானது எதிர்காலத்தில் வலுவான மற்றும் தாங்கும் சக்தி கொண்ட ஆற்றல் அமைப்பை உருவாக்குவதற்காக ஆற்றல் திறன், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் நீடித்த தன்மை குறித்து தொடர்ந்து பணியாற்றுவதற்காக அனைத்துப் பங்காளர்கள் மற்றும் தனிநபர்களை அழைக்கின்றது.
- ❖ தமிழ்நாடு மாநிலத் தலைமைச் செயலாளரான K. சண்முகத்தின் பதவிக் காலமானது அடுத்த 3 மாதத்திற்கு, அதாவது அக்டோபர் 31 ஆம் தேதி வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.

- மத்திய அரசனாது இந்தப் பதவி நீட்டிப்பிற்கான தனது ஒப்புதல் குறித்து மாநில அரசிடம் கூறியுள்ளது.

❖ சமீபத்தில் சத்தீஸ்கர் மாநிலமானது ஸ்பந்தன் என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.

- இந்தப் பிரச்சாரமானது காவல் துறையினரிடையே சகோதரச் சண்டை மற்றும் தற்கொலை ஆகியவற்றைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ மத்தியப் பிரதேச மாநிலத்தில் வனப் பரப்பை அதிகரிப்பதற்காக "Thank Mom" (நன்றி அன்னை) என்று பெயரிடப்பட்ட ஒரு மரம் நடும் இயக்கமானது தொடங்கப் பட்டுள்ளது.

❖ கிருஷ்னேந்து மஜும்தர் என்பவர் பிரிட்டிஷ் திரைப்பட மற்றும் தொலைக்காட்சி கலை நிறுவனத்தின் (BAFTA - British Academy of Film and Television Arts) புதிய தலைவராக உருவெடுத்துள்ளார்.

- BAFTAயின் 73 ஆண்டு கால வரலாற்றில் புகழ்பெற்ற இப்பதவிக்கு நியமிக்கப்படும் முதலாவது உலகளாவிய இந்தியர் இவராவார்.

❖ தமிழ்நாடு நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த 1999 ஆம் ஆண்டு பிரிவு இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான பிரஜேந்திர நவநீத் என்பவரை உலக வர்த்தக அமைப்பின் இந்தியாவிற்கான புதிய தூதராக இந்தியா நியமித்துள்ளது.

- பிரதமர் தலைமையிலான நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது குஜராத் நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த 1996 ஆம் ஆண்டு IAS அதிகாரியான ராஜீவ் தப்னோ என்பவரை அடுத்த 3 ஆண்டுக் காலத்திற்கு உலக வங்கியின் செயல் இயக்குநருக்கான ஒரு மூத்த ஆலோசகராக நியமித்துள்ளது.

❖ கூகுள் நிறுவனமானது "சோடர்" என்ற ஒரு புதிய செயலியை உருவாக்கியுள்ளது.

- இது நோய்த் தொற்று உள்ள ஒரு நபர் அந்தச் செயலியின் பயனாளியை நெருங்கும் போது, அப்பயனாளிக்கு அது குறித்த தகவலைத் தெரிவிக்கும்.

❖ ஜம்மு காஷ்மீரின் துணைநிலை ஆளுநரான கிரிஷ் சந்திரா முர்மு "மேரா வெட்டன்" என்ற பெயரில் ஜம்மு காஷ்மீர் மாநிலப் பணியாளர்களின் ஊதியக் கண்காணிப்பு குறித்த கைபேசிச் செயலியைத் தொடங்கி வைத்துள்ளார்.

❖ உலகப் பூச்சி தினமானது பூச்சி மேலாண்மையானது எவ்வாறு வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாக்க உதவும் என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 06 அன்று அனுசரிக்கப் படுகின்றது.

- இந்தத் தினமானது சீனப் பூச்சிக் கட்டுப்பாட்டு மன்றத்தினால் தொடங்கப் பட்டு உள்ளது.

❖ சீனாவானது கோவிட் – 19 நோய்த் தொற்றிற்கு எதிரான போராட்டம் குறித்து தனது வெள்ளை அறிக்கையை வெளியிட்டுள்ளது.

- இந்த அறிக்கையானது "கோவிட் - 19ற்கு எதிரான போராட்டம் : சீனாவின் நடவடிக்கை" என்ற தலைப்பைக் கொண்டுள்ளது.

❖ நியூசிலாந்து நாடானது தனது கடைசி கோவிட் – 19 நோயாளி குணமடைந்ததைத் தொடர்ந்து கோவிட் – 19 தொற்று நோயற்ற நாடாக தன்னை அறிவித்துக் கொண்டது.

❖ பாகிஸ்தான் நாடானது 2020 ஆம் நிதியாண்டில் உலகின் மிக உயரிய பணவீக்கத்தைக் கண்டுள்ளது.

❖ ஜி20 குழுவில் உள்ள உறுப்பு நாடுகள் கோவிட் – 19 நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடுவதற்காக வேண்டி 21 பில்லியன் அமெரிக்க டாலரை வழங்க உறுதி பூண்டுள்ளன.

- இந்திய விமானப்படை தனிமைப்படுத்தப்பட்ட முறையிலான ஒரு போக்குவரத்திற்காக வேண்டி ஒரு வான்வழி மீட்பு விமானத்தை வடிவமைத்து உருவாக்கித் தயாரித்துள்ளது.
- அசாமில் ஓர் எரிவாயுக் கிணற்றிலிருந்து இயற்கை எரிவாயுவானது ஒரு நிலவெடிப்பிற்குப் பிறகு தொடர்ந்து வெளியேறி வருகின்றது.
  - அசாமின் தின்சுகியா மாவட்டத்தில் உள்ள ஆயில் இந்தியா நிறுவனத்தின் பாக்ஜன் எரிவாயுக் கிணற்றில் ஏற்பட்ட வெடிப்பிற்குப் பின் இது நடந்திருக்கின்றது.
- துகள் உலோகத்திற்கான மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சி மையமானது மெக்கின்ஸ் தொழில் நிறுவனத்துடன் இணைந்து கோவிட் – 19 நோயாளிகளுக்கு வேண்டிய கிருமிநாசினிக்காக புற ஊதாக் கதிரை அடிப்படையாகக் கொண்ட சிற்றறை அல்லது கேபினெட்டை உருவாக்கியுள்ளது.
- இந்திய அரசானது இதுவரை 2020-21 ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.1,01,500 கோடி ரூபாயை ஒதுக்கி உள்ளது.
  - இந்தத் திட்டம் தொடங்கியதிலிருந்து இதற்காக ஒதுக்கப்பட்ட மிக அதிக அளவிலான நிதி இதுவாகும்.
- அதானி பசுமை ஆற்றல் நிறுவனமானது மத்திய அரசால் நிர்வகிக்கப்படும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆணையமான இந்திய சூரிய ஒளி ஆற்றல் கழகத்திடமிருந்து (Solar Energy Corporation of India) 6 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு மதிப்புள்ள உலகின் மிகப்பெரிய சூரிய ஒளி ஆற்றல் ஏலத்தில் வென்று உள்ளது.
  - இந்தத் திட்டத்தின் கீழ், இந்தக் குழுமமானது 8000 மெகாவாட் திறன் கொண்ட ஒரு மின்னழுத்த ஆற்றல் ஆலையை அமைக்க இருக்கின்றது. மேலும் இது 2000 மெகா வாட் திறன் கொண்ட உள்நாட்டு சூரிய ஒளித் தகடுகள் அடங்கிய ஒரு ஆலையையும் அமைக்க இருக்கின்றது.
- உத்தரகாண்ட் மாநில அரசானது உலக சுற்றுச்சூழல் தினத்தன்று ஹால்ட்வானியில் தனது மிகப்பெரிய பல்லுயிர்ப் பெருக்கப் பூங்காவைத் திறந்துள்ளது.
  - இந்தப் பூங்காவில் பல்வேறு தாவர இனங்களானது உத்தரகாண்ட்டின் நிடி மானா பள்ளத்தாக்கு போன்ற பல்வேறு நிலப்பரப்புகளிலிருந்து கொண்டு வரப்பட்டு உள்ளது.
- கைவினைப் பொருட்களுக்கான ஏற்றுமதி ஊக்குவிப்பு ஆணையமானது ஏறத்தாழ 200 இந்திய ஏற்றுமதியாளர்களுக்காக 4 நாட்கள் கால அளவுள்ள காணொளி வழியிலான ஒரு கண்காட்சியை நடத்தியுள்ளது.
  - இது இந்தியாவின் முதலாவது காணொளி வழியிலான வர்த்தகக் கண்காட்சி ஆகும்.
- மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்கத் துறை வாரியமானது பெங்களூரு மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் தூரந்த் சுங்கம் என்ற தனது தனித்துவமானத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
  - இந்தத் திட்டத்தின் கீழ், இறக்குமதியாளர்கள் இறக்குமதித் துறைமுகத்திற்கு வெளியே அமைந்துள்ள சுங்கத் துறை அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் ஒரு நேரடியாக அல்லாத ஆய்விற்குப் பின்னர், தங்களதுப் பொருட்களுக்கு வர்த்தக அனுமதியைப் பெற இருக்கின்றனர்.
- தேசியத் திறன் வளர்ச்சிக் கழகமானது (NSDC - National Skill Development Corporation) தனது பயிற்சிப் பங்காளர்களுக்கு டிசிஎஸ் iON டிஜிட்டல் கண்ணாடி அறை வசதிகளை

அணுகுவதற்கு வேண்டி டாடா ஆலோசக நிறுவனத்துடன் இணைந்து உள்ளது.

- NSDC மற்றும் டிசிஎஸ் ஆகிவற்றிற்கிடையேயான இந்தப் புதிய ஒருங்கிணைப்பானது "eskill இந்தியா" என்ற NSDCயின் ஆன்லைன் (நிகழ்நேர) ஒருங்கிணைப்புத் தளத்தை வலுப்படுத்த உதவ இருக்கின்றது.

❖ இந்தியப் பளுதூக்குதல் வீரரான K சஞ்சிதா சனு என்பவர் சர்வதேசப் பளுதூக்குதல் கூட்டமைப்பினால் (IWF - International Weightlifting Federation) நடத்தப்பட்ட ஊக்கமருந்துச் சோதனையில் வெற்றியடைந்துள்ளார்.

- IWF ஆனது இந்த முடிவை உலகப் போதை மருந்து தடுப்பு ஆணையத்தின் (WADA - World Anti-Doping Agency) பரிந்துரையின் அடிப்படையில் எடுத்துள்ளது.

❖ வங்க தேச அரசானது "சோகோஜோதா" என்ற ஒரு நிகழ்நேர அமைப்பைத் தொடங்கியுள்ளது.

- இது அந்நாட்டில் கொரானா வைரசிற்காகச் சிகிச்சைப் பெற்று வருபவர்கள் மற்றும் கோவிட் – 19 நோய்த் தொற்றிலிருந்து மீண்டவர்கள் ஆகியோருக்கு இடையே பிளாஸ்மா பரிமாற்றத்தை மேற்கொள்ள வழிவகை செய்கின்றது.

❖ தனியார் துறை நிறுவனங்கள் தங்களது திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்காக இஸ்ரோ அமைப்பின் வசதிகள் மற்றும் அதன் இதர சொத்துகளைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி அளிக்கப்பட இருக்கின்றது.

❖ சௌராஷ்டிரா – நர்மதா அவதாரன் நீர்ப்பாசனத் திட்டத்தின் இரண்டாம் நிலையானது ஆகஸ்ட் – 15 ஆம் தேதிக்குள் முடிவடையும் என்று குஜராத் மாநில முதல்வர் விஜய் ரூபானி கூறியுள்ளார்.

- இந்தத் திட்டமானது நர்மதை நதியின் நீரை வைத்து சௌராஷ்டிரா மற்றும் கட்ச் ஆகிய பகுதிகளின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்ய இருக்கின்றது.

❖ 2021–22 ஆம் நிதியாண்டில் முடிக்கத் திட்டமிடப்பட்டிருந்த பாரத்மாலா பரியோஜனா என்ற திட்டமானது தற்பொழுது 2025-26 ஆம் ஆண்டில் முடிக்கத் திட்டமிடப்பட்டு இருக்கின்றது.

- இந்தத் திட்டமானது இந்தியாவில் சாலைக் கட்டுமானத்திற்காகத் தொடங்கப் பட்டுள்ளது.

❖ கிழக்குக் கடற்படைக் கட்டுப்பாட்டகமானது விசாகப்பட்டினத்தில் ஆழ்கடல் நீர்மூழ்கி மீட்பு வாகன வளாகத்தைத் தொடங்கி வைத்துள்ளது.

❖ தமிழ்நாடு முதல்வரான எடப்பாடி கே. பழனிசாமி சேலத்தில் 7.87 கிலோ மீட்டர் நீளமுடைய ஈரடுக்கு கொண்ட ஒரு மேம்பாலத்தைத் திறந்து வைத்தார். இது இம்மாநிலத்தின் மிக நீண்ட மேம்பாலமாக விளங்குகின்றது.

- இந்த மேம்பாலம் 'புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா ஈரடுக்கு மேம்பாலம்' என அழைக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

❖ தமிழ்நாடு மாநில அரசானது தமிழ்நாடு முழுவதும் உள்ள 1018 சிறு நகரங்கள் மற்றும் பெரு நகரங்களின் பெயரை, அவற்றின் தமிழ் உச்சரிப்பிற்கு ஏற்றவாறு மாற்றிப் பெயரிட்டுள்ளது.

- இது தமிழ்நாடு அரசின் மாநிலத் தமிழ் அலுவல் மொழி, தமிழகக் கலாச்சாரம் மற்றும் தொல்லியல் துறை அமைச்சகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ மத்திய உள்துறை அமைச்சகமானது சுதந்திரப் போராட்ட வீரர்களின் நலன்களை ஆய்வு செய்வதற்கான குழு ஒன்றினைத் திரும்பவும் மாற்றியமைத்துள்ளது.

- இது மத்திய உள்துறை இணையமைச்சரான G. கிஷன் ரெட்டி என்பவரைத் தலைவராகக் கொண்டும், நாடு முழுவதிலுமிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட 9

தலைசிறந்த விடுதலைப் போராட்ட வீரர்களை அதன் உறுப்பினர்களாகக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது.

- ❖ கழிவு மேலாண்மையில் தலைசிறந்து விளங்கும் டிஜிட்டல் தொழில்நுட்ப நிறுவனமான "ரெசிக்கல்" என்ற நிறுவனமானது நீடித்த நெகிழிக் கழிவு மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இந்துஸ்தான் கோகோ-கோலா குளிர்பான நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்துள்ளது.
  - ○ இது இந்திய அளவிலான பங்களிப்பாக "பிரித்திவி திட்டம்" என்று அழைக்கப் படுகின்றது.
- ❖ கேரளாவின் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த விண்வெளி வல்லுநரான ரஞ்சித் குமார் என்பவருக்கு நாசாவின் புகழ்பெற்ற சேவை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
  - ○ இது நாசாவின் சேவை விருதைப் போன்றே ஆனால் அரசு சாராத வல்லுநர்களுக்கு வழங்கப்படும் ஒரு விருதாகும்.
- ❖ மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் தேசியக் கூட்டுறவு வளர்ச்சி ஒத்துழைப்பினால் தொடங்கப்பட்ட ஒரு முன்னெடுப்பான "சஹாக்கர் பித்ரா : உள்ளிருப்புப் பயிற்சித் திட்டம்" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
  - ○ இந்தத் திட்டமானது இளம் தொழில் நிபுணர்களின் புத்தாக்கக் கருத்துகளை அணுக வேண்டி கூட்டுறவு நிறுவனங்களுக்கு உதவுவதற்காகத் தொடங்கப் பட்டுள்ளது.
- ❖ இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை வளர்ச்சி ஆணையமானது மருத்துவக் காப்பீட்டுக் கொள்கைகளின் கீழ் தொலைதூர முறையிலான மருத்துவத்தைச் சேர்ப்பதற்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- ❖ இந்தியாவின் 800 மீ ஓட்டப்பந்தய வீரரான கோமதி மாரிமுத்து என்பவருக்கு, ஊக்க மருந்து உட்கொண்டதற்காக 4 ஆண்டுக் காலத்திற்கு தடகளப் போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிக்கப் பட்டுள்ளது.
  - ○ கடந்த ஆண்டில் ஆசியத் தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் இவர் வென்ற தங்கப் பதக்கம் இவரிடமிருந்துப் பறிக்கப்பட இருக்கின்றது.
- ❖ இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது முழுவதும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட முதலாவது உள்கட்டமைப்புத் துறை அமைப்பாக உருவெடுத்து உள்ளது.
  - ○ இது தரவு தளம் (Data Lake) மற்றும் திட்ட மேலாண்மை என்ற மென்பொருளின் மூலம் முழுமையாக நிகழ்நேரத் தளத்திற்கு மாறியுள்ளது.
- ❖ சமீபத்தில் இமாச்சலப் பிரதேச மாநில முதல்வரான ஜெய் ராம் தாக்கூர் அம்மாநிலத்தின் கிராமப் பகுதிகளில் உள்ள மூத்தக் குடிமக்களுக்காக வேண்டி பஞ்சவதி யோஜனா என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளார்.
  - ○ இந்தத் திட்டமானது மூத்தக் குடிமக்கள், அவர்களது ஓய்வு நேரங்களில் தோட்டங்கள் மற்றும் பூங்காக்களில் செலவிட உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ சமீபத்தில் ஆந்திரப்பிரதேச மாநில முதல்வரான ஜெகன் மோகன் ரெட்டி "ஜெகனன்னா செடோடு" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளார்.
  - ○ இந்தத் திட்டமானது முடி திருத்துபவர்கள், தையல்காரர்கள், சலவை செய்பவர்கள் ஆகியோருக்கு ரூ.1000 நிதியுதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- மின்னணு வணிக நிறுவனமான அமேசான் நிறுவனமானது காவல் துறையினால் பயன்படுத்தப்படும் "Rekognition" என்ற தனது மென்பொருள் பயன்பாட்டிற்குத் தடை விதித்துள்ளது.
    - இந்த மென்பொருளானது காவல்துறையின் தரவு தளங்களில் உள்ள சுமார் ஆயிரக்கணக்கான புகைப்படங்களை விரைவாக ஒப்பிட்டுப் பார்க்கப் பயன்படுத்தப் படுகின்றது.
- முதலாவது இந்தியக் காட்டெருமைக் கணக்கெடுப்பானது (Indian Bison) பிப்ரவரி மாதத்தில் நீலகிரி வனப்பகுதியில் மேற்கொள்ளப் பட்டது.
    - இந்தக் கணக்கெடுப்பில் 300 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் சுமார் 2000 இந்தியக் காட்டெருமைகள் வசிப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது.
- சர்வதேச வெளிறல் தன்மை தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 13 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
    - இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "பிரகாசித்தலை ஏற்படுத்துதல்" என்பதாகும்.
- சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு மற்றும் யுனிசெப் ஆகியவை குழந்தைத் தொழிலாளர் குறித்த ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளன.
    - இந்த அறிக்கையானது "கோவிட் – 19 மற்றும் குழந்தைத் தொழிலாளர் : நெருக்கடிக் காலம், செயல்படுவதற்கான நேரம்" என்ற தலைப்பின் கீழ் வெளியிடப் பட்டுள்ளது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது "Germiklean" என்ற ஒரு கிருமிநாசினி அறையை உருவாக்கியுள்ளது.
    - இது பாதுகாப்புப் படை மற்றும் காவல்துறை அதிகாரிகளின் சீருடைகள் மேல் கிருமிநாசினி பயன்படுத்துவதற்காக உபயோகப்படுத்தப்படும் ஒரு கிருமிநாசினி அறையாகும்.
- கடந்த 5 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் மிக அதிகமாக அமேசான் பகுதியில் காடுகளின் அழிப்பானது நடைபெற்றுள்ளதாக தேசிய விண்வெளி ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.
    - 2019 ஆம் ஆண்டில் அந்நாட்டின் அதிபராக ஜெய்ர் போல்சனரோ பதவியேற்ற பிறகு இந்தப் பகுதியில் காடுகளின் அழிப்பானது அதிகரித்துள்ளது.
- நியூசிலாந்து, பிஜி, மோன்டிங்க்ரோ, தான்சானியா, வாடிகன், செசல்ஸ், பப்புவா நியூ கினியா, திமோர்-லெஸ்டி, செயின்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ் போன்ற நாடுகள் தங்களை கோவிட் – 19 நோய்த் தொற்றற்ற நாடுகளாக அறிவித்துள்ளன.
- பஞ்சாப் மாநில அரசானது கோவிட் – 19 நோய்த் தொற்றை ஒழிப்பதற்கு வேண்டி வீடுகளுக்கேச் சென்று ஆய்வை மேற்கொள்வதற்காக "கர் கர் நிகரானி" என்ற ஒரு கைபேசிச் செயலியைத் தொடங்கியுள்ளது.
- ஐஐடி – கரக்பூரைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பொது இடங்களில் சமூக விலகலைக் கண்காணிப்பதற்காக செயற்கை நுண்ணறிவை அடிப்படையாகக் கொண்ட இணைய வழியிலான ஒரு நேரடிக் கண்காணிப்பு முறையை உருவாக்கியுள்ளனர்.
- சமீபத்தில் மிகவும் புகழ்பெற்ற முதுபெரும் உருதுக் கவிஞரான ஆனந்த் மோகன் சூட்சி "குல்சர்" தெஹ்லவி என்பவர் காலமானார்.
    - இந்திய அரசினால் உருது மொழியில் வெளியிடப்படும் ஒரே அறிவியல் பத்திரிக்கையான "சயின்ஸ் கீ துனியா" என்பதின் ஆசிரியர் குல்சர் ஆவார்.

- சமீபத்தில் ஜம்மு காஷ்மீர் அரசானது வளர்ப்புப் பறவைகள் (கோழி) கொள்கை, 2020 என்ற கொள்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.
- சிலி மற்றும் அர்ஜென்டினாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பட்டகோனியப் பகுதியில் "மகலன்டோன் பைகாஷ்கென்க்" என்று அழைக்கப்படும் ஒரு உயிரினத்தின் பற்களைக் கண்டறிந்துள்ளனர்.
    - இது 74 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு பாலூட்டி வகையைச் சேர்ந்ததாகும்.
- இந்தியாவின் மூன்றாவது மிகப்பெரிய கடன் வழங்கும் வங்கியான "பரோடா வங்கியானது" தனது கடன் வழங்கும் நடவடிக்கைகளை முழுவதும் டிஜிட்டல் மயமாக்க முடிவு செய்துள்ளது.
- உத்தரப் பிரதேச மாநில அரசானது, அம்மாநிலத்தில் உள்ள குழந்தைத் தொழிலாளர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக "பால் சிராமிக் வித்யா யோஜனா" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- பெப்சிகோ என்ற அமைப்பானது "வாட்டர் எய்டு" என்ற நிறுவனத்துடன் இணைந்து மேற்கு வங்காளம் மற்றும் மகாராஷ்டிராவில் அதிக அளவு நீர்ப் பற்றாக்குறை அபாயமுள்ள பகுதிகளில் பெண்களுக்கு உதவுவதற்காகவும் வேளாண் சமூகத்தினருக்குப் பாதுகாப்பான குடிநீர் அணுகலை உறுதி செய்வதற்காகவும் முதலீடு செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது.
- கர்நாடக மாநில அரசானது சிராவதி உப்பங்கழிப் பகுதியில் உள்ள ஒரு மனிதர்கள் வாழாத தீவில் குரங்குப் பூங்கா ஒன்றை அமைக்க முடிவு செய்துள்ளது.
- "யக்சகானா" நாடகக் கலையின் ஒரு வகையான "தாலமாடல்" என்ற ஒரு பாரம்பரியக் கலை என்பது கர்நாடகா மற்றும் கேரளாவின் காரவலி மற்றும் மலநாடு பகுதியில் நடைபெறும் உரையாடல் கலை மற்றும் விவாதக் கலை போன்றவற்றில் ஒரு பாரம்பரிய வடிவமாகும்.
- ராஜ பிரபா திருவிழாவானது ஒடிசாவில் கொண்டாடப்பட்டது.
    - இது பூமித் தாய் (பூமி தேவி) மற்றும் தாய்மார்களுக்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- புனேவில் உள்ள சீரம் இந்தியா நிறுவனமானது குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு நிமோனியா தடுப்பு மருந்தை விநியோகம் செய்ய இருக்கின்றது.
    - இது தடுப்பு மருந்துகள் மற்றும் ஏமவுயிரியல் மருந்துகளை உற்பத்தி செய்யும் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக விளங்குகின்றது.
- தில்லி மாநில அரசானது ராதா சுவாமி ஆன்மீக மையத்தை கோவிட்-19 நோய்த் தொற்றுக்கான ஒரு சிறப்பு மையமாக மாற்ற முடிவு செய்துள்ளது.
    - இந்த மையமானது உலகில் உள்ள மிகப்பெரிய கோவிட்-19 சிறப்பு மையமாக விளங்க இருக்கின்றது.
- மத்திய ஆயுஷ் துறை அமைச்சகமானது 2020 ஆம் ஆண்டின் சர்வதேச யோகா தினத்தை அனுசரிப்பதற்காக "வீட்டிலேயே யோகா, குடும்பத்துடன் யோகா" என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- சமீபத்தில் கேரள மாநில அரசானது "முதல் மணி" (First Bell) என்ற ஒரு மெய்நிகர் பள்ளி வகுப்பு முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.
- ஒடிசா மாநில அமைச்சரவையானது "பந்தே உத்கல் ஜனனி" என்ற பாடலுக்கு மாநிலப் பாடல் அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

- இது கண்டகபி லட்சுமிகாந்த் மோகபத்ரா என்பவரால் எழுதப்பட்ட ஒரு தேசப் பற்று மிக்கக் கவிதையாகும்.

❖ மேற்கு வங்காள மாநிலமானது கோவிட் – 19 நோய்த் தொற்றின் காரணமாக அம்மாநிலத்திற்கு மீண்டும் திரும்பியுள்ள தகவல் தொழில்நுட்பத் துறைப் பணியாளர்களுக்காக வேண்டி "கர்மபூமி" என்ற ஒரு வேலைவாய்ப்புத் தளத்தைத் தொடங்கி உள்ளது.

❖ தெலுங்கானாவில் ஹைதராபாத் நகரக் காவல் துறையானது "இவள் மரியாதை, சமத்துவம் மற்றும் அதிகாரம் அளித்தல் ஆகியவற்றின் மூலம் வெல்வாள்" (STREE - She Triumphs through Respect, Equality, and Empowerment) என்று அழைக்கப்படும் ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

- இது குடும்ப வன்முறை மற்றும் கொடுமைப்படுத்தலுக்கு ஆளான பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் உதவி செய்வதற்காகத் தொடங்கப் பட்டுள்ளது.

❖ சர்வதேச சுற்றுலா தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 18 அன்று அனுசரிக்கப் படுகின்றது.

❖ வரலாற்று அறிஞரான தின்யார் படேல் "நௌரோஜி : இந்திய தேசியவாதத்தின் முன்னோடி" என்ற ஒரு வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தை எழுதியுள்ளார்.

❖ கோவிட் – 19 நோய்த் தொற்றுக்கான தடுப்பு மருந்துகளை முன்னுரிமை அடிப்படையில் அணுக (வாங்க) இருப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது.

- இந்த முன்னுரிமை அடிப்படையிலான உள்ளூர்ச் சந்தையானது "தடுப்பு மருந்து மீதான தேசிய வாதம்" என்று அழைக்கப்படுகின்றது.

❖ ஜூன் 23 அன்று நடக்கவிருந்த ஒடிசாவில் உள்ள பூரி ஜகன்நாதர் ஆலயத்தின் வருடாந்திர ரத யாத்திரைக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.

- இந்த ஆண்டின் ரத யாத்திரையை அனுமதித்தால் ஜகன்நாத கடவுள் கூட நம்மை மன்னிக்க மாட்டார் என்று இந்திய உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

❖ நாணய மதிப்பில், மும்பையை மையமாகக் கொண்ட இந்தியப் பன்னாட்டு நிறுவனமான ரிலையன்ஸ் தொழிற்துறை நிறுவனத்தின் மதிப்பானது 150 பில்லியன் அமெரிக்க டாலர் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

- ரூ.11 லட்சம் கோடிக்கும் மேல் சந்தை மதிப்பை அடைந்த முதலாவது இந்திய நிறுவனம் இதுவாகும்.

❖ சரி செய்யப்பட்ட நிகர வருமானம் (AGR - Adjusted Gross Revenue) என்பது மத்திய தொலைத் தொடர்புத் துறையினால் தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு விதிக்கப் படும் ஒரு பயன்பாட்டு மற்றும் உரிமக் கட்டணமாகும்.

❖ லக்னோவில் உள்ள மத்திய மருந்து ஆராய்ச்சி மையமானது வைரஸ் எதிர்ப்பு மருந்தான யுமிபெனோவிர் என்பதின் மீதான மூன்றாவது கட்டச் சோதனையை மேற்கொள்வதற்கு அனுமதி பெற்றுள்ளது.

- யுமிபெனோவிர் மருந்தானது வைரஸ்கள் மனித உயிரணுக்களுக்குள் செல்வதைத் தடை செய்கின்றது. இது நோய் எதிர்ப்பு அமைப்பை அதிகரிப்பதன் மூலம் திறம்படச் செயல்படுகின்றது.

❖ சமீபத்தில், வங்கதேசத்திலிருந்து மேற்கொள்ளப் படும் ஏற்றுமதியில் 97% பொருட்களுக்கு வரி விலக்கு அளிப்பதாக சீனா அறிவித்துள்ளது.

- எஸ்ஐடிபிஐ வங்கியானது மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சக வழிகாட்டுதலின் கீழ் பிரதான் மந்திரி சுவாநிதி திட்டத்தைச் செயல்படுத்த இருக்கின்றது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநரான உர்ஜித் படேல் தேசியப் பொது நிதி மற்றும் கொள்கை நிறுவனத்தின் தலைவராக அடுத்த 4 ஆண்டுக் காலத்திற்கு நியமிக்கப் பட்டுள்ளார்.
  - இது பல்வேறு கொள்கைச் சீர்திருத்தங்கள் குறித்து அரசாங்கத்துடன் நெருங்கிப் பணியாற்றும் வகையில் தில்லியில் உள்ள ஒரு கொள்கை வகுப்பு நிறுவனம் ஆகும்.
- கர்நாடக மாநில அரசானது முகக் கவசத்தின் பயன்பாடு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஜுன் 18 ஆம் தேதியை "முகக் கவச தினமாக" அனுசரித்தது.
- சமீபத்தில் புதிய கொரானா வைரஸ் சார்ஸ் Cov-2 நோய்த் தொற்றானது நெதர்லாந்தில் மென் பயிர்த் தோல் கொண்ட ஒரு சிறிய விலங்கில் பரவத் தொடங்கியுள்ளது.
  - ஒரு நுண்ணுயிரி மனிதர்களிடமிருந்து விலங்குகளுக்குப் பரவினால், அது தலைகீழ் நிலையிலான விலங்கு வழிப் பரவும் நோய் என்று அழைக்கப் படுகின்றது.
- திரிபுரா மாநில அரசானது பள்ளிக் குழந்தைகளுக்காக ஒரு திட்டத்தைத் தொடங்க முடிவு செய்துள்ளது.
  - இந்தத் திட்டமானது "ஏக்து கேலோ, ஏக்து பதோ" – "கொஞ்சமாக விளையாடு, கொஞ்சமாக படி" என்ற பெயர் கொண்ட ஒரு திட்டத்தைக் கொண்டு இருக்கின்றது.
- அஸ்ஸாமின் குவஹாத்தியில் உள்ள காமக்கியா ஆலயத்தில் 1565 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வரும் அம்புபாச்சி மேளா என்ற திருவிழாவானது தற்பொழுது முதன்முறையாக நடத்தப் படாது.
  - காமக்கியா ஆனது 51 சக்தி பீடங்களில் ஒன்றாக விளங்குகின்றது.
- கொரானா வைரஸின் சிகிச்சை முறைக்காக வேண்டி மருந்து நிறுவனங்களால் இந்தியாவில் 3 மருந்துகள் (பேபி ப்ளு, சிப்ரெமி, கோவிபோர்) அறிமுகப் படுத்தப் பட்டுள்ளன.
  - கிளென்மார்க் மருந்து நிறுவனமானது சாதாரணது முதல் கடுமையான கொரானா வைரஸ் சிகிச்சைக்காக பேபிப்ளு என்று பெயரிடப்பட்ட ஒரு வைரஸ் எதிர்ப்பு மருந்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- நொய்டா மெட்ரோ இரயில் நிலையத்தின் 50வது பகுதியானது நொய்டா மெட்ரோ இரயில் கழகத்தினால் திருநர் சமூகத்திற்காக வேண்டி அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- லாரன்ட் பொக்கிலெட் என்பவர் உலகளாவிய வளர்ச்சியின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளதாக உலகத் தடகள அமைப்பு அறிவித்துள்ளது.
- ஆர்ஐசி/RIC (ரஷ்யா – இந்தியா – சீனா / Russia – India - China) நாடுகளின் சந்திப்பானது இரண்டாம் உலகப் போரின் 75வது நினைவு தினத்தை அனுசரிப்பதற்காக நடத்தப் பட்டது.
- பதஞ்சலி நிறுவனமானது "கொரொனில்" "சவசரி வாத்தி" மற்றும் அனு தைலம் என்ற தனது ஆயுர்வேத மருந்துகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - இந்த மருந்தின் மூலம் கோவிட் – 19 நோய்த் தொற்றிற்குச் சிகிச்சை அளிக்க முடியும் என்று அந்நிறுவனம் உரிமை கோருகின்றது.

- கோவிட் – 19 நோய்த் தொற்றின் காரணமாக ஹஜ் புனித யாத்திரையானது “குறைந்த அளவிலான நபர்களைக் கொண்டே நடத்தப்படும்” என்று சவுதி அரேபியா அறிவித்துள்ளது.
    - மெக்கா புனித நகரில் நடத்தப்படும் ஹஜ் புனித யாத்திரையானது முஸ்லீம்கள் தங்களது வாழ்வில் ஒரு முறையாவது கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்று கட்டாயப் படுத்துகின்றது.
- அமெரிக்க அரசானது அந்த நாட்டுப் பணிகளைப் பாதுகாக்கும் ஒரு முயற்சியாக 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை “பச்சை அட்டை” மற்றும் புலம்பெயர்ந்த பணி நுழைவு இசைவை ரத்து செய்ய முடிவு செய்துள்ளது.
- “அண்டர்டேக்கர்” என்று வெகுவாக அறியப்படும் மார்க் வில்லியம் காலவே என்பவர் ஒரு அமெரிக்கத் தொழில்சார் மல்யுத்த வீரராவார்.
    - இவர் உலக மல்யுத்தப் போட்டியிலிருந்து தனது ஓய்வை அறிவித்துள்ளார்.
- அமெரிக்க அதிபரான டொனால்டு ட்ரம்ப் இந்திய-அமெரிக்க விஞ்ஞானியான டாக்டர் சேதுராமன் பஞ்சநாதன் என்பவரை தேசிய அறிவியல் நிறுவனத்தின் இயக்குநராக நியமித்துள்ளார்.
    - சுப்ரா சுரேஷ் என்பவருக்குப் பிறகு இந்தப் புகழ்பெற்ற அறிவியல் பதவிக்கு நியமிக்கப்பட்ட இரண்டாவது இந்திய-அமெரிக்கர் இவராவார்.
- கோவிட் – 19 பிரச்சினைக்கு மத்தியில் 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஐரோப்பாவில் தேசிய அளவிலான தேர்தலை நடத்திய முதலாவது நாடு செர்பியா ஆகும்.
- இந்தியாவானது அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு தூரக் கிழக்கில் உள்ள பாலஸ்தீனிய அகதிகளுக்காக ஐக்கிய நாடுகள் நிவாரணம் மற்றும் பணிகள் நிறுவனத்திற்கு 10 மில்லியன் அமெரிக்க டாலரை வழங்க உறுதி அளித்துள்ளது.
- தமிழ்நாடு முதல்வரான எடப்பாடி கே. பழனிசாமி நாமக்கலில் ஒரு அழுத்தப்பட்ட உயிரி எரிவாயு ஆலையைத் திறந்து வைத்தார்.
    - இந்த ஆலையானது 25 கோடி செலவில் இந்திய எண்ணெய்க் கழகத்தினால் அமைக்கப் பட்டுள்ளது.
- நோபல் பரிசு பெற்றவரான அமர்த்தியா சென் 2020 ஆம் ஆண்டிற்கான ஜெர்மன் புத்தக வர்த்தகத்தின் புகழ்பெற்ற அமைதிப் பரிசை வென்றுள்ளார்.
- எம்எஸ்டிஇ – ஐபிஎம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியானது அதிக எண்ணிக்கையிலான வேலை தேடுபவர்களை அடைவதற்காகவும் இந்தியாவில் வணிக முதலாளிகளுக்கு புதிய வளங்களை அளிப்பதற்காகவும் வேண்டி “திறன் கட்டமைப்பை வளர்த்தல்” என்ற ஒரு இலவச டிஜிட்டல் கற்றல் இணைய தளத்தை வெளியிட்டுள்ளன.
- ஈரானின் இஸ்லாமியப் புரட்சிகர பாதுகாப்புப் படையானது அடுத்த ஆண்டின் மார்ச் மாதத்தில் இந்தியப் பெருங்கடல் பகுதியில் தனது நிரந்தர இராணுவ தளத்தை அமைக்க இருக்கின்றது.
- ஓஎன்ஜிசி விதேஷ் நிறுவனத்திற்கு “Shwe எண்ணெய் மற்றும் எரிவாயுத் திட்டத்தின்” மேம்பாட்டிற்காக மத்திய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
    - இந்த “Shwe எண்ணெய் மற்றும் எரிவாயு திட்டமானது” மியான்மரில் அமைந்து உள்ளது.

- கிராண்ட் மாஸ்டரான P. ஹரிகிருஷ்ணா என்பவர் 1,50,000 அமெரிக்க டாலர் மதிப்பு கொண்ட சதுரங்க மாஸ்டர்களைக் கொண்ட குழுவில் இணையும் முதலாவது இந்திய வீரராக உருவெடுத்துள்ளார்.
- மகாராஷ்டிர மாநில அரசானது தொழிற்துறைகளுக்கான புதிய முதலீடுகளைக் கவர்வதற்காக வேண்டி "மகா பர்வானர்" என்ற திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது.
- நாசாவானது வாஷிங்டன் டி.சியில் உள்ள தனது தலைமையகக் கட்டிடத்திற்கு அதன் முதலாவது ஆப்பிரிக்க-அமெரிக்க பெண் பொறியாளரான மேரி W. ஜாக்சன் என்பவரது பெயரை வைத்துள்ளது.
- வினி மகாஜன் என்பவர் பஞ்சாப் மாநிலத்தின் முதலாவது பெண் தலைமைச் செயலாளராக உருவெடுத்துள்ளார்.
- 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ள இருக்கும் விண்வெளி நடைபயணத்திற்காக வேண்டி முதலாவது சுற்றுலாப் பயணியை விண்வெளிக்குக் கொண்டு செல்ல இருப்பதாக ரஷ்யா அறிவித்துள்ளது.
- ஐரோப்பியக் கால்பந்து விளையாட்டுப் போட்டியில், லிவர் பூல் அணியானது முதன்முறையாக 2019/20 ஆண்டுப் பதிப்பின் ஆங்கிலப் பீரிமியர் லீக் பட்டத்தை வென்றுள்ளது.
- பெங்களூருவில் உள்ள கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையமானது, உள்நாட்டிலேயே மேம்படுத்தப் பட்ட விமான வானிலைக் கண்காணிப்பு அமைப்பை (Aviation Weather Monitoring System) பெறும் இந்தியாவின் முதல் விமான நிலையமாக திகழ்கிறது.
- உலகின் மிகப்பெரிய தேர்த் திருவிழா யாத்திரையானது ஒடிசாவின் கடற்கரை மாவட்டமான பூரி எனும் மாவட்டத்தில் உள்ள ஜெகந்நாதர் கோயிலில் நடைபெற்றது.
- இன்போசிஸ் நிறுவனம் 2040 ஆம் ஆண்டிற்குள் நிகர-சுழிய கார்பன் நிலையை அடைய அமேசான் மற்றும் குளோபல் ஆப்டிமிஸம் ஆகிய நிறுவனங்களுடன் காலநிலை உறுதிமொழியில் கையெழுத்திட்ட முதல் இந்திய நிறுவனமாக மாறியது.
- இந்திய ரயில்வேயின் மத்திய ரயில்வே மண்டலமானது தன்னியக்க பயணச் சீட்டுச் சரிபார்ப்பு மற்றும் நிர்வாக அணுகல் (Automated Ticket Checking & Managing Access) இயந்திரத்தை நாக்பூர் ரயில் நிலையத்தில் நிறுவியுள்ளது.
- HDFC எர்கோ மற்றும் ஐக்கியப் பேரரசைச் சேர்ந்த தொழில்நுட்ப நிறுவனமான ட்ரோபோகோ ஆகிய இரண்டும் கூட்டாக 'பறக்கும் போது பணம் செலுத்துங்கள்' (pay as you fly) எனும் இந்தியாவின் முதல் ஆளில்லா விமானங்களுக்கான காப்பீட்டை அறிமுகப் படுத்தியுள்ளன.
- 2020 ஆம் ஆண்டில், பசுமை மிசோரம் தினமானது ஜூன் 11 அன்று இந்தியாவில் மிசோரம் மாநிலம் முழுவதும் அனுசரிக்கப் பட்டது.
- ஒவ்வொரு வருடமும் ஜூன் 30 ஆம் தேதி உலக சமூக ஊடக தினம் அனுசரிக்கப் படுகின்றது.
  - இத்தினம் முதலில் 2010 ஆம் ஆண்டில் மாஷபில் என்ற நிறுவனத்தால் அனுசரிக்கப் பட்டது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு ஊரக உருமாற்றத் திட்டம்

- தமிழ்நாடு ஊரக உருமாற்றத் திட்டத்தின் கீழ் 1.4 லட்சம் மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் ரூ 300 கோடி அளவிற்கு கோவிட் -19 நிதியுதவித் தொகுப்பைத் தமிழ்நாடு அரசு ஒதுக்கி உள்ளது.
- இந்த திட்டத்திற்கான நிதியை உலக வங்கி அளிக்கிறது. இதை முதலமைச்சர் எடப்பாடி கே பழனிசாமி அறிவித்துள்ளார்.
- பொது முடக்கத்தின் போது கிராமப்புற நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள விநியோகச் சங்கிலி இடைவெளியை இது குறைக்கும்.
- இது விவசாயிகள், உற்பத்தியாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு உதவும்.
- இந்த மாநிலத்தில் தங்கள் சொந்த தொழிலைத் தொடங்க விரும்பும் புலம்பெயர்ந்தோருக்கு இந்த நிதி மிகுந்த நம்பிக்கையை அளிக்கும்.

## CICTயின் முதலாவது நிரந்தர இயக்குநர்

- R. சந்திரசேகரன் சென்னையில் உள்ள மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் (CICT - Central Institute of Classical Tamil) முதலாவது நிரந்தர இயக்குநராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- CICT என்பது 2006 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒரு தனிச்சுதந்திர உயர் ஆராய்ச்சி நிறுவனமாகும்.
- இது முன்னதாக செம்மொழித் தமிழுக்கான சிறப்புமிகு மையம் (CECT - Centre of Excellence for Classical Tamil) என்றறியப் பட்டது.
- இது மைசூரில் உள்ள இந்திய மொழிகளுக்கான மத்திய மையத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்தது.
- 2008 ஆம் ஆண்டு மே மாதத்தில், CECT ஆனது சென்னைக்கு மாற்றப்பட்டு, CICT என அதற்குப் பெயர் மாற்றப்பட்டது.
- குறள் பீடம் விருது என்ற ஒரு விருதினை வழங்கும் நிறுவனம் இதுவாகும்.

## ஏழைகளுக்கான நல்லெண்ணத் தூதர்

- மதுரையைச் சேர்ந்த 13 வயது நிரம்பிய “M. நேத்ரா” என்ற சிறுமி வளர்ச்சி மற்றும் அமைதிக்கான ஐக்கிய நாடுகள் மன்றத்தினால் (UNADAP - United Nations Association for Development and Peace) ஏழைகளுக்கான நல்லெண்ணத் தூதராக (GWA - 'Goodwill Ambassador) நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்த UNADAP அங்கீகாரமானது நியூயார்க் மற்றும் ஜெனீவாவில் நடைபெற இருக்கும் ஐக்கிய நாடுகள் கருத்தரங்கில் சிவில் (பொது) சமூக மன்றங்களில் உரையாற்றுவதற்கான ஒரு வாய்ப்பை அச்சிறுமிக்கு வழங்குகின்றது.

## கீழடி அகழாய்வு

- சங்க காலத்தைச் சேர்ந்தது என்று நம்பப்படும் உலை போன்ற ஒரு அமைப்பானது மணலூரில் கண்டெடுக்கப் பட்டுள்ளது.
- மனித எலும்புகளைக் கொண்ட முதுமக்கள் தாழியானது கீழடித் தொகுப்பில் உள்ள கொந்தகை கிராமத்தில் கண்டெடுக்கப் பட்டுள்ளது.
- ஏற்கெனவே 6 முதுமக்கள் தாழியானது கொந்தகை கிராமத்தில் மார்ச் மாதத்தில் கண்டெடுக்கப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.
- கொந்தகையானது கீழடியின் உடல் அடக்கம் செய்யப்படும் இடம் என்று நம்பப் படுகின்றது.
- மேலும் தொல்லியலாளர்கள் கெடாத வகையில் இருக்கும் விலங்கின் ஒரு முதுகெலும்பையும் கண்டெடுத்துள்ளனர்.

***பின்னணி***

- சிவகங்கையில் உள்ள கீழடியில் 6வது கட்ட தொல்லியல் ஆய்வானது மீண்டும் தொடங்கியது.
- இந்த ஆய்வு கீழடியானது 2600 ஆண்டுகள் அளவிற்குப் பழமையான நாகரிகத்தைக் கொண்டது என்பதை வெளிப்படுத்தியுள்ளது.
- தமிழ்நாடு மாநிலத் தொல்லியல் துறையானது கீழடியில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது.
- இந்தக் கீழடித் தொகுப்பானது அதனருகில் உள்ள கொந்தகை, அகரம் மற்றும் மணலூர் ஆகிய கிராமங்களை உள்ளடக்கியுள்ளது.
- கீழடியானது சிவகங்கை மாவட்டத்தில் வைகை நதிக்கரையில் அமைந்துள்ளது.
- முதல் 3 கட்ட அகழாய்வுகள் (2014-15, 2015-16, 2016-18) இந்தியத் தொல்லியல் துறையினால் மேற்கொள்ளப் பட்டன.
- மாநிலத் தொல்லியல் துறையானது 4வது (2018-19) மற்றும் 5வது (2019) கட்ட அகழாய்வுகளை மேற்கொண்டது.



## NEET (நீட்) இடஒதுக்கீடு

- நீட் நுழைவுத் தேர்வின் மூலம் மருத்துவக் கல்லூரிச் சேர்க்கையில் கிடையக முறையின் மூலம் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 10% உள்ளக இட ஒதுக்கீட்டை வழங்க தமிழ்நாடு அரசினால் நியமிக்கப்பட்ட ஆணையமானது பரிந்துரைத்துள்ளது.

- இந்த ஆணையமானது ஓய்வுபெற்ற நீதிபதியான கலையரசன் என்பவரால் தலைமை தாங்கப்பட்டது.
- கல்வித்துறையில் எஸ்சி/எஸ்டி/ஓபிசி/பொதுப் பிரிவினர்களுக்கு இருக்கும் செங்குத்து இடஒதுக்கீட்டிற்குள் கிடையக இடஒதுக்கீடானது நன்கு பயனளிக்கக் கூடியதாக இருக்கும்.

## NIRF தரவரிசையில் தமிழ்நாடு

- முதல் 50 இடங்களில் ஏறத்தாழ அனைத்துப் பிரிவுகளிலும் அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்களுடன் தமிழ்நாடு மாநிலமானது இந்திய உயர் கல்வியில் அதிகப் பங்களிக்கும் ஒரு முன்னிலை மாநிலமாக உருவெடுத்துள்ளது.
- தமிழ்நாடு மாநிலமானது இந்தியாவின் முதல் 100 பொறியியல் கல்லூரிகளில் ஐந்தில் ஒரு பங்கு கல்லூரிகளுடன் பொறியியல் கல்லூரிப் பட்டியலில் ஒரு தலைமை மாநிலமாகத் திகழ்கின்றது.
- 2020 ஆம் ஆண்டின் தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்புத் தரவரிசையின்படி, (NIRF – National Institutional Ranking Framework) நாட்டின் முன்னிலையில் உள்ள 100 பொறியியல் கல்லூரிகளில் 18 கல்லூரிகள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவையாகும்.
- தொடர்ந்து 5வது முறையாக நாட்டின் சிறந்த பொறியியல் கல்லூரி என்ற அங்கீகாரத்துடன் நாட்டின் முன்னிலையில் உள்ள ஒரு கல்வி நிறுவனமாக ஐஐடி-மதராஸ் திகழ்கின்றது.
- திருச்சிராப்பள்ளியில் உள்ள தேசியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது தமிழ்நாட்டில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 இதர பொறியியல் கல்லூரிகளிடையே 9வது இடத்தில் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.
- கல்லூரிகளின் தரவரிசையில் இந்தியாவில் உள்ள முதல் 100 மானுடவியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்றில் ஒரு பங்கு கல்லூரிகளைத் தமிழ்நாடு கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு தரவரிசையில், தமிழ்நாட்டில் இருந்து 35 கல்லூரிகள் இடம் பெற்றன. இந்த ஆண்டில் மொத்தமுள்ள 100 கல்லூரிகளில் 32 கல்லூரிகள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவையாகும்.
- முதன்முறையாக இந்த ஆண்டின் முன்னிலை பெற்ற மருத்துவக் கல்லூரிகளில் மதராஸ் மருத்துவக் கல்லூரியானது 12வது இடத்தில் தரவரிசைப்படுத்தப் பட்டு உள்ளது.

**NIRF 2020**

| Name | City | Total Score | Rank |
|---|---|---|---|
| Anna University | Chennai | 58.71 | 12 |
| Bharathiar University | Coimbatore | 58.3 | 13 |
| University of Madras | Chennai | 52.55 | 22 |
| Alagappa University | Karaikudi | 49.22 | 36 |
| Bharathidasan University | Tiruchirappalli | 46.41 | 53 |
| Madurai Kamaraj University | Madurai | 45.58 | 60 |
| Periyar University | Salem | 41.09 | 83 |
| The Gandhigram Rural Institute | Gandhigram | 40.65 | 91 |

## மேட்டூரிலிருந்து நீர் திறப்பு

- தமிழ்நாடு முதல்வரான எடப்பாடி கே பழனிசாமி குறுவை நீர்ப் பாசனப் பயன்பாட்டிற்காக மேட்டூர் அணையிலிருந்து டெல்டாப் பகுதிக்கு நீரினைத் திறந்து விட்டார்.
- வழக்கமான ஜுன் 12 ஆம் தேதியன்று மேட்டூர் அணையிலிருந்து நீர் திறக்கப் படுவது தற்பொழுது 17வது முறையாகும்.
- மேட்டூர் அணை வரலாற்றில் 16 முறை (ஆண்டுகள்) மேட்டூர் அணையிலிருந்து வழக்கமான ஜுன் 12 ஆம் தேதியன்று நீர் திறக்கப்பட்டுள்ளன.
- இதற்கு முன்பு 2008 ஆம் ஆண்டில் (12 ஆண்டுகளுக்கு முன்பு) மேட்டூர் அணையிலிருந்து நீரானது வழக்கமான ஜுன் 12 அன்று திறந்து விடப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 13 ஆம் தேதியிலிருந்து தற்பொழுது வரை (2020 ஜுன் 12) இந்த அணையானது கடந்த 305 நாட்களாக 100 கன அடி நீரைக் கொண்டுள்ளது.
- 2005-06 ஆம் ஆண்டில், 427 நாட்களாக மேட்டூர் அணையின் நீரின் அளவானது 100 கன அடிக்குக் கீழே செல்லவில்லை.
- இதன் மூலம், சேலம், நாமக்கல், ஈரோடு, திருச்சி, கரூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் நாகப்பட்டினம் உள்ளிட்ட 12 டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த 16.05 லட்சம் ஏக்கர் வேளாண் நிலங்கள் நீர்ப்பாசன வசதியைப் பெற இருக்கின்றன.




## இடஒதுக்கீடு குறித்த அவசரச் சட்டம்

- தமிழ்நாடு மாநில அமைச்சரவையானது மருத்துவப் படிப்பில் உள் இடஒதுக்கீடு வழங்குவதற்கான ஓர் அவசரச் சட்டம் இயற்றுவதற்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- இந்த உள் இடஒதுக்கீடானது 7.5 முதல் 10%ற்குள் இருக்கும்.
- இது இந்தக் கல்வியாண்டிலிருந்து மருத்துவப் படிப்புகளின் சேர்க்கைகளுக்காக வேண்டி நீட் தேர்வில் தேர்ச்சி பெற்ற அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட இருக்கின்றது.
- இது குறித்த நீதிபதி P. கலையரசன் தலைமையிலான குழுவின் பரிந்துரையைத் தொடர்ந்து இந்த முடிவானது எடுக்கப்பட்டுள்ளது.

## 5 மணிமண்டபங்கள் (நினைவு மண்டபங்கள்)

- தமிழ்நாடு மாநில முதல்வரான எடப்பாடி கே பழனிசாமி தலைவர்களுக்கு மரியாதை செலுத்துவதற்காக வேண்டி 5 மணி மண்டபங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.
- அரசர் பெரும்பிடுகு முத்தரையர், நீதிக் கட்சித் தலைவர் A.T. பன்னீர் செல்வம், தமிழ்த் திரையுலக நட்சத்திரமான MKT தியாகராஜ பாகவதர் ஆகியோரது நினைவு மண்டபங்கள் திருச்சி மாவட்டத்தில் உள்ள K. அபிஷேகபுரத்தில் அமைய இருக்கின்றது.
- கவிஞர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் நினைவு மண்டபம் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தோவாளையில் அமைக்கப்பட இருக்கின்றது.
- அல்லால இளைய நாயக்கர் மணி மண்டபம் நாமக்கல் மாவட்டத்திற்கு அருகில் உள்ள ஜேடர்பாளையத்தில் அமைக்கப்பட இருக்கின்றது.

## அகரம் அகழாய்வு

- தமிழ்நாடு தொல்லியல் துறையைச் சேர்ந்த தொல்லியல் அறிஞர்கள் கீழடி அகழாய்வுத் தொகுதியின் ஒரு பகுதியான அகரம் அகழாய்வின் போது ஒரு தங்க நாணயத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- கி.பி. 17வது நூற்றாண்டைச் சேர்ந்த இந்த நாணயமானது "வீர ராயன் நாணயம்" என்று அழைக்கப் படுகின்றது.
- இதற்கு முன்பு தஞ்சாவூரில் பல்வேறு வகையான "வீர ராயன் நாணயங்கள்" கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.



## சிவகளை அகழாய்வு

- தூத்துக்குடிக்கு அருகில் உள்ள ஆதிச்சநல்லூரில் 6 ஆம் கட்ட அகழாய்வானது தொடங்கியுள்ளது.
- மேலும் இது "பண்டையத் தமிழ் நாகரிகத்தின் தொட்டில்" என்று அழைக்கப் படுகின்றது.
- தூத்துக்குடி மாவட்டத்தில் ஏரல் நகருக்கு அருகில் உள்ள சிவகளையில் முதுமக்கள் தாழி போன்ற பல்வேறு பண்டைய காலப் பொருட்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

## கொடுமணல் அகழாய்வு

- சமீபத்தில் சென்னையில் உள்ள தமிழ்நாடு தொல்லியல் துறையானது தமிழ்நாட்டில் உள்ள கொடுமணல் அகழாய்வுத் தளத்தில் 250 வட்டவடிவ நில அடையாளக் கற்குவைகளை அடையாளம் கண்டுள்ளது.
- இந்தத் தளத்திலிருந்து 10 பானைகள் மற்றும் கிண்ணங்கள் ஆகியவை கண்டெடுக்கப் படுவது இதுவே முதல்முறையாகும்.
- மேலும் இந்தத் தளத்திலிருந்து விலங்கு மண்டை ஓடு, மணிகள், செப்பு உருக்கு அலகுகள், பட்டறைகளின் ஈர மண் சுவர்கள், மட்பாண்டங்கள் மற்றும் தமிழ் பிராமி எழுத்து வடிவம் ஆகியவையும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இது பெருங்கற்காலக் கலாச்சாரத்தில் வாழ்விற்குப் பிறகான நிலை (இறப்பு) மற்றும் அடக்கம் செய்யப் படுவதற்கான சடங்குகள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தி உள்ளது.
- பெருங்கல் என்பது தனியாக ஒரு கல் அல்லது பல்வேறு கற்களுடன் சேர்த்து ஒரு அமைப்பு அல்லது நினைவுச் சின்னத்தைக் கட்டமைக்கப் பயன்படுத்தப்படும் ஒரு மிகப்பெரிய வரலாற்றுக்கு முந்தைய காலக்கட்டத்தைச் சேர்ந்த கல்லாகும்.
- கொடுமணல் என்பது தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு கிராமமாகும்.
- இது காவிரி ஆற்றின் துணையாறான நொய்யல் ஆற்றின் வடக்கு நதிக்கரையில் அமைந்துள்ளது.
- இது ஒரு காலத்தில் கொடுமணம் என்ற பெயரில் வளர்ந்து வரும் ஒரு பண்டைய வர்த்தக நகரமாக குறிப்பிடப் பட்டுள்ளது. இது சங்க இலக்கியமான பதிற்றுப்பத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.
- இது கி.மு. 5 ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 1 ஆம் நூற்றாண்டு வரை வர்த்தக மற்றும் தொழில்வள நகரமாகச் செயல்பட்டது.



## கொந்தகையில் குழந்தை எலும்பு

- பழங்காலத்தைச் சேர்ந்த கீழடி என்ற இடத்தில் தற்பொழுது நடைபெற்று வரும் 6வது கட்ட அகழாய்வின் போது கொந்தகை கிராமத்திலிருந்து ஒரு குழந்தையின் எலும்பு மிச்சங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.
- சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கொந்தகையில் தமிழ்நாடு மாநில தொல்லியல் துறையைச் சேர்ந்த தொல்லியல் துறை வல்லுநர்கள் பணியாற்றுவது இதுவே முதல்முறையாகும்.



### தமிழ்நாட்டில் MSME

- மத்திய அரசானது சிறு, குறு, மற்றும் நடுத்தர தொழிற்துறையை மீட்டெடுப்பதற்காக வேண்டி தமிழ்நாடு மாநிலத்திற்கு ரூ. 4125 கோடியை ஒதுக்கியுள்ளது.
- இது அத்திட்டத்தின் ஒட்டு மொத்த நிதியில் 10% ஆகும். இது தமிழ்நாட்டில் சிறப்பான முறையில் செயல்படுத்தப் படுகின்றது.

## தேசியச் செய்திகள்

### தொகுதி மறுவரையறை ஆணையம்

- வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசத்தின் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தொகுதிகளை மறுவரையறை செய்யும் குழுவிற்கு உதவுவதற்காக ஜம்மு காஷ்மீர், அசாம், மணிப்பூர், நாகாலாந்து மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகியவற்றைச் சேர்ந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்களை தொகுதி மறுவரையறை ஆணையத்தின் இணை உறுப்பினர்களாக மக்களவை நியமித்துள்ளது.
- சமீபத்தில் மத்திய அரசானது உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியான ரஞ்சனா பிரகாஷ் தேசாய் என்பவரது தலைமையில் தொகுதி மறுவரையறை ஆணையத்தை அமைத்திருந்தது.
- இது ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசம் மற்றும் அசாம், அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர் மற்றும் நாகாலாந்து ஆகிய வடகிழக்கு மாநிலங்களின் மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்ய இருக்கின்றது.
- தொகுதி மறுவரையறை என்பது சட்டமன்றத்தைக் கொண்ட ஒரு மாநிலத்தின் நிலப்பரப்புத் தொகுதிகளின் வரம்புகள் (அ) எல்லைகளை வகுக்கும் ஒரு செயல்முறையாகும்.
- இந்த ஆணையங்கள் 1952, 1963, 1973, மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளில் 4 முறை அமைக்கப் பட்டுள்ளன.

## காடுகளின் சிறு உற்பத்திப் பொருள்

- குறைந்தபட்ச ஆதார விலையில் கூடுதலாக காடுகளின் 23 சிறு உற்பத்திப் பொருட்கள் (MFP - Minor Forest Produce) சேர்க்கப் பட்டுள்ளதாக மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- இந்திய வனச் சட்டம், 1927 என்ற சட்டம் வன உற்பத்திப் பொருளை வரையறுக்கின்றது.
- எனினும், MFP ஆனது 2007 ஆம் ஆண்டில் தான் வரையறுக்கப்பட்டது.
- இது வன உரிமைகள் சட்டம் அல்லது பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் இதரப் பாரம்பரிய வனப் பொருட்கள் சேகரிப்பாளர்கள் (வன உரிமைகளை அங்கீகரித்தல்) சட்டம், 2006 என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்தியதின் மூலம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- MFP என்பது மரம் அல்லாத தாவரம் சார்ந்த அனைத்து வன உற்பத்திப் பொருள் என வரையறுக்கப் படுகின்றது.
- மூங்கில், சிறு கிளைகள், அடிக்கட்டை, பிரம்புகள், துசர், பட்டுக்கூடு, தேன், மெழுகுகள், அரக்கு, டென்டு/கெண்டு இலைகள், மருத்துவக் குணம் பொருந்திய தாவரங்கள், மூலிகைகள், வேர்கள், கிழங்குகள் ஆகியவை MFPயில் உள்ளடங்கி உள்ளன.
- ஆகவே காடுகளின் சிறு உற்பத்திப் பொருளின் வரையறையில் மூங்கில் மற்றும் பிரம்புகளும் உள்ளடங்கியுள்ளன.

## நிசர்கா சூறாவளி (புயல்)

- இந்திய வானியல் ஆய்வு மையமானது (IMD - Indian Meteorological Department) அரபிக் கடலில் ஒரு காற்றழுத்தம் உருவாகியுள்ளதாக அறிவித்துள்ளது.
- இது குஜராத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலக் கடற்கரைகளை நோக்கி நகர்கின்றது.
- இந்தப் புயலிற்கான பெயரானது வங்க தேசத்தினால் வைக்கப் பட்டதாகும்.
- IMD ஆனது அரபிக் கடல் மற்றும் வங்காள விரிகுடா உள்ளிட்ட வட இந்தியப் பெருங்கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்கும் பணியை மேற்கொள்கின்றது.

## ஒரு தேசம் ஒரு குடும்ப அட்டைத் திட்டம்

- சிக்கிம், ஒடிசா மற்றும் மிசோரம் ஆகிய மேலும் 3 மாநிலங்களும் ஒருங்கிணைந்தப் பொது விநியோக அமைப்பு (PDS - Public Distribution System) மேலாண்மை முறையில் சேர்ந்துள்ளதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சரான ராம் விலாஸ் பஸ்வான் அறிவித்துள்ளார்.
- ஒருங்கிணைந்த PDS மேலாண்மை முறையின் மூலம், இந்திய அரசானது தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் பயன்களைக் கொண்டு சேர்க்க முயற்சித்து வருகின்றது.
- இந்தத் திட்டமானது நாட்டில் எந்தவொரு இடத்திலும் வசிக்கும் இந்தியக் குடிமக்களுக்கு உணவு தானியங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதுவரை இந்தத் திட்டமானது 17 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் செயல்படுத்தப் பட்டுள்ளது.
- வரும் ஆகஸ்ட் மாதத்தில் மணிப்பூர், உத்தரகாண்ட் மற்றும் நாகாலாந்து ஆகிய 3 மாநிலங்களும் இந்தத் திட்டத்தில் இணைய இருக்கின்றன.

## MSME (சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்) வரையறை

- MSME மீதான வரையறையில் ஏற்படுத்தப்பட உள்ள மாற்றங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- 2006 ஆம் ஆண்டில் MSME மேம்பாட்டுச் சட்டம் நடைமுறைக்கு வந்து 14 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்பொழுது இது திருத்தியமைக்கப் பட்டுள்ளது.
- புதிய வரையறையின்படி, ரூ. 1 கோடி மற்றும் 5 கோடி முதலீடு கொண்ட MSMEகள் குறு நிறுவனங்கள் என்று வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- ரூ.10 கோடி மற்றும் ரூ.50 கோடி என்ற அளவில் வருடாந்திர விற்று முதல் கொண்ட MSMEகள் சிறு நிறுவனங்கள் என்று வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- ரூ.50 கோடி மற்றும் அதற்கு மேல் என்ற அளவில் வருடாந்திர விற்று முதல் கொண்ட MSMEகள் நடுத்தர நிறுவனங்கள் என்று வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- நாட்டில் 60 மில்லியனுக்கும் மேற்பட்ட MSMEகள் உள்ளன.
- இவை இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 29% என்ற அளவிற்குப் பங்களிக்கின்றன. இவை 110 மில்லியன் (அ) 11 கோடி வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன.
- இவை நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் பாதிக்கும் மேற்பட்ட ஏற்றுமதிக்குப் பங்களிப்பு செய்கின்றது.

## CHAMPIONS

- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி "CHAMPIONS" என்று அழைக்கப்படும் ஒரு தொழில்நுட்பத் தளத்தை தொடங்கியுள்ளார்.
- "CHAMPIONS" என்பது "அதிகரித்து வரும் உற்பத்தி மற்றும் நாட்டின் வலிமைக்கான நவீனச் செயல்பாடுகளின் உருவாக்கம் மற்றும் உணர்வுமிக்க செயல்பாடு" என்பதைக் குறிக்கின்றது.
- இது தொழில்நுட்பத்தால் செயல்படுத்தப்படும் ஒரு கட்டுப்பாட்டு அறை மற்றும் மேலாண்மைத் தகவல் அமைப்பாகும். இது நவீனத் தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பக் கூறுகளைப் பயன்படுத்துகின்றது.
- இந்த முழு இணைய தளமும் தேசியத் தகவல் மையத்தினால் உருவாக்கப் பட்டு உள்ளது.

## ஒரு சூரியன் ஒரு உலகம் ஒரு கட்டமைப்பு

- அண்மையில், ஒரு சூரியன் ஒரு உலகம் ஒரு கட்டமைப்பு என்ற திட்டத்தை வெளியிடுவதற்கு வேண்டி இந்த திட்டத்தில் பங்கேற்க விரும்பும் நாடுகளுக்கு இந்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.
- இதன் பின்னணியில் உள்ள நோக்கம் 'சூரியன் ஒருபோதும் மறைவதில்லை' என்பதாகும்.
- இது உலக வங்கியின் தொழில்நுட்ப உதவித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இந்த முயற்சியின் மூலம் மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமானது மேற்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் பரவியிருக்கும் 140க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள சூரிய ஒளி வளங்களைப் பகிர்ந்து கொள்வது குறித்து ஒரு உலகளாவிய ஒருமித்த கருத்தை உருவாக்க திட்டமிட்டு உள்ளது.

## ராஜேஷ் பூஷன் குழு

- ❖ ராஜேஷ் பூஷண் தலைமையில் மருந்துப் பொருள் மீதான ஒழுங்குமுறையைச் சீர்திருத்தும் பணியை மேற்கொள்ள இருக்கும் ஒரு குழுவை அமைச்சரவைச் செயலாளர் நியமித்திருக்கின்றார்.
- ❖ இரசாயன மற்றும் உரத்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள மருந்துத் துறையானது மருந்தியல் தொழில்துறையை (Pharma industry) நிர்வகித்து வருகின்றது.

## "SWADES"

- ❖ மத்திய அரசானது வெளிநாடுகளில் இருந்து இந்தியா திரும்பும் இந்தியப் பணியாளர்களின் திறன்களைக் கணக்கிடுவதற்காக வேண்டி "SWADES" என்ற ஒரு திட்டத்தின் கீழ் திறன் மதிப்பீட்டு நடவடிக்கையை நடத்த இருக்கின்றது.
- ❖ "SWADES" (Skilled Workers Arrival Database for Employment Support) என்பது வேலைவாய்ப்பு உதவிகளுக்காக வேண்டி திறனுள்ள பணியாளர்களின் வருகை குறித்த தரவுத் தளம் என்பதைக் குறிக்கின்றது.
- ❖ இது இந்தியக் குடிமக்களின் அனுபவங்கள் மற்றும் திறன்களின் அடிப்படையில் தகுதி வாய்ந்த இந்தியக் குடிமக்களின் தரவுத் தளத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது மத்தியத் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவுத் துறை அமைச்சகம், மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் மற்றும் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.

## துலிப் (TULIP)

- ❖ மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சகம் மற்றும் மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் ஆகியவை இணைந்து "துலிப்" (TULIP) என்றழைக்கப்படும் உள்ளுறைக் கற்றல் பயிற்சித் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளன.
- ❖ இந்தத் திட்டமானது பட்டப்படிப்பை நிறைவு செய்யும் புதிய பொறியியல் பட்டதாரிகளுக்காகத் தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தத் திட்டத்தின் கீழ், இவர்கள் இந்தியாவில் உள்ள 4400 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் 100 பொலிவுறு நகரங்களுடன் இணைந்துப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற இருக்கின்றனர்.
- ❖ இந்த உள்ளுறைப் பயிற்சியானது ஓராண்டுக் காலம் என்ற அளவிற்கு நடத்தப்பட இருக்கின்றது.



## மருந்தியல் ஆணையம்

- மத்திய ஆயுஷ் துறை அமைச்சகத்தின் கீழ், உள்ள இந்திய மருந்து மற்றும் ஹோமியோபதிக்கான மருந்தியல் ஆணையத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கு வேண்டி மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்த ஆணையமானது இந்திய மருத்துவத்திற்கான மருந்தியல் ஆய்வகம் மற்றும் ஹோமியோபதி மருந்தியல் ஆய்வகம் ஆகியவற்றை ஒன்றிணைப்பதன் மூலம் ஏற்படுத்தப் படுகின்றது.
- இது ஆயுர்வேதா, சித்தா, யுனானி மற்றும் ஹோமியோபதி ஆகிய மருத்துவத்திற்கான மருந்துகளின் தரக் கட்டுப்பாட்டை மேம்படுத்துவதையும் அவற்றின் ஒழுங்குமுறைகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த ஆணையம் மத்திய ஆயுஷ் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒரு தனிச் சுதந்திர அமைப்பாகும்.
- மருந்தியல் என்பது மருந்து உற்பத்தி செய்தலைக் குறிக்கின்றது.

## ஒரு இந்தியா, ஒரு விவசாயச் சந்தை

- மத்திய அமைச்சரவையானது "ஒரு இந்தியா, ஒரு விவசாயச் சந்தை" என்பதின் உருவாக்கத்திற்கு வழிவகை செய்யும் ஓர் அவசரச் சட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி உள்ளது.
- இது வேளாண் உற்பத்திப் பொருளைத் தடையற்ற வகையில் வர்த்தகம் செய்வதை உறுதி செய்வதற்காக "வேளாண் உற்பத்திப் பொருள் வர்த்தகம் மற்றும் வணிகம் (ஊக்குவிப்பு மற்றும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல்) அவசரச் சட்டம், 2020" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இந்த அவசரச் சட்டமானது விவசாய உற்பத்திப் பொருள் சந்தையிடல் குழுவிற்காக இயற்றப் பட்ட மாநிலச் சட்டங்களின் கீழ் அறிவிக்கப் பட்டுள்ள சந்தை வளாகங்களுக்கு வெளியே மாநிலங்களுக்கிடையேயான மற்றும் மாநிலத்திற்குள் நடைபெறும் தடையற்ற வர்த்தகம் வர்த்தகத்தை ஊக்குவிக்க இருக்கின்றது.
- இது விவசாயிகள் மற்றும் வர்த்தகர்கள் இருதரப்பினரும் தாங்கள் விரும்பிய வேளாண் உற்பத்திப் பொருளை வாங்குதல் மற்றும் விற்றலுக்கான ஒரு சூழலமைப்பை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மின்னணு முறையில் அதிக எண்ணிக்கையிலான அளவில் வர்த்தகம் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக நிதிப் பரிமாற்றத் தளத்தில் ஒரு மின்னணு வர்த்தக முறையைப் பரிந்துரை செய்துள்ளது.
- இந்தச் சட்டத்தின் கீழ் விவசாயிகளின் வேளாண் பொருட்கள் மீதான விற்பனைக்கு எந்தவொரு செஸ் (வரி மீதான வரி) அல்லது கட்டணம் எதுவும் விதிக்கப்பட மாட்டாது.
- மேலும் மத்திய அமைச்சரவையானது விவசாயிகள் (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாப்பு) விலை உத்தரவாதம் மற்றும் வேளாண் பணிகள் குறித்த ஒப்பந்தம் அவசரச் சட்டம், 2020 என்ற சட்டத்திற்கும் ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்த நடவடிக்கையானது சுரண்டல் குறித்த எந்தவொரு பயமும் இல்லாமல் ஒரு சமமான போட்டி கொண்ட தளத்தில் பொருட்களைச் சேமித்து வைத்திருப்பவர்கள், தயாரிப்பாளர்கள், மிகப்பெரிய சில்லறை விற்பனையாளர்கள், மொத்த வியாபாரிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களுடன் விவசாயிகள் பங்கு கொள்வதை உறுதி செய்ய இருக்கின்றது.




## சீன எல்லை உள்கட்டமைப்பு

- சீன எல்லைப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான புதிய வழிகாட்டுதல்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இது மத்திய அரசால் நிதியளிக்கப்படும் திட்டத்தின் 10% நிதியை லடாக், அருணாச்சலப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட் மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்களில் உள்ள திட்டங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வழிவகை செய்கின்றது.

## ஸ்டார்ட் அப் மிளிரல் சூழலமைப்புத் தரவரிசை 2020

- ஸ்டார்ட் அப் மிளிரல் என்ற நிறுவனமானது ஆனது ஸ்டார்ட் அப்களின் எண்ணிக்கை, அவற்றின் தரம் மற்றும் வர்த்தகச் சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் இருக்கும் சூழலைமைப்பை அளவிடுகின்றது.
- இந்தக் குறியீட்டின் படி, இந்தியா 2019 ஆம் ஆண்டிலிருந்த 17வது இடத்திலிருந்து 6 இடங்கள் சரிவடைந்து 23வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இந்தியா மூன்றாவது மிகப்பெரிய ஸ்டார்ட் அப் சூழலமைப்பைக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.
- இந்தத் தரவரிசையில் அமெரிக்கா முதல் இடத்திலும் ஐக்கிய இராஜ்ஜியம் 2வது இடத்திலும் இஸ்ரேல் 3வது இடத்திலும் உள்ளன.
- முதல் 100 ஸ்டார்ட் அப் நிறுவனங்களில், 4 இந்திய நகரங்கள் மட்டுமே "ஸ்டார்ட் அப் சூழலமைப்பிற்கான உலகளாவியத் தரவரிசையில் 2020 ஆண்டின் நகரங்கள்" பெயரிடப் பட்டுள்ளன.
- பெங்களூரு, புதுதில்லி, மும்பை மற்றும் ஹைதராபாத் ஆகியவை இந்த 4 நகரங்களாகும்.

## 2020 ஆம் ஆண்டின் ஆளில்லா விமான அமைப்பு விதிகள்

- இது மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறையினால் வெளியிடப் பட்டு உள்ளது.
- இந்த விதிகள் ஆளில்லா விமான (UA - Unmanned Aircraft) அமைப்புகள் மற்றும் குட்டி விமானங்களின் உற்பத்தி, இறக்குமதி, வர்த்தகம், உரிமை மற்றும் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- விபத்து ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை ஏற்கும் வகையில் தகுதியுடைய மூன்றாம் நபர் காப்பீட்டுக் கொள்கை இருந்தாலொழிய எந்தவொரு UAயும் இந்தியாவில் செயல்பட அனுமதிக்கப் படமாட்டாது.

- 250 கிராம் அல்லது அதற்குக் குறைவான எடை கொண்ட நானோ ஆளில்லா குட்டி விமானங்கள் ஆளில்லா குட்டி விமானத்திற்கான விமானி ஓட்டுனர் உரிமம் எதுவும் இல்லாமல் கூட செயல்பட அனுமதிக்கப்படும்.

## உணவுப் பாதுகாப்புக் குறியீடு

- இந்தியாவின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது இரண்டாவது ‘மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீட்டின்’ முடிவுகளைப் பகிர்ந்து உள்ளது.
- இந்தியாவின் உணவுப் பாதுகாப்புக் குறியீட்டில் பெரிய மாநிலங்களிடையே குஜராத் முதலிடத்திலும் ஒன்றியப் பிரதேசங்களிடையே சண்டிகர் முதலிடத்திலும் உள்ளன.
- இந்தக் குறியீட்டில் சிறிய மாநிலங்களிடையே கோவா முதலிடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீட்டில் பெரிய மாநிலங்களிடையே குஜராத் மாநிலத்தைத் தொடர்ந்து தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களும் சிறிய மாநிலங்களிடையே கோவாவைத் தொடர்ந்து மணிப்பூர் மற்றும் மேகாலயா ஆகிய மாநிலங்களும் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- இந்தக் குறியீட்டில் ஒன்றியப் பிரதேசங்களிடையே சண்டிகரைத் தொடர்ந்து தில்லி மற்றும் அந்தமான் நிக்கோபர் தீவுகள் ஆகியவை தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

fssai FOOD SAFETY AND STANDARDS AUTHORITY OF INDIA
Inspiring Trust, Assuring Safe & Nutritious Food

## தக்காண ராணி இரயில் – 90 ஆண்டுகள்

- இது “தக்காணத்தின் ராணி” என்று அழைக்கப் படுகின்றது.
- இது மும்பை மற்றும் புனேவிற்கு இடையே இயக்கப் படுகின்றது.
- இது 1930 ஆம் ஆண்டு ஜுன் 01 ஆம் தேதி அன்று தனது செயல்பாட்டைத் தொடங்கியது.
- இந்தியாவின் முதலாவது அதிவேக இரயில், மின்சாரத்தால் இயக்கப் படும் முதலாவது நீண்ட தொலைவு கொண்ட இரயில், முன்கூட அறையைக் கொண்ட முதலாவது இரயில், பெண்கள் மட்டும் உள்ள பெட்டியைக் கொண்ட முதலாவது இரயில், உணவக வசதியைக் கொண்ட முதலாவது இரயில் உள்ளிட்ட பல சாதனைகளை இந்த ரயில் கொண்டுள்ளது.



## இந்திய நிலக்கரிப் பரிமாற்றச் சந்தை

- நிலக்கரித் துறையில் வணிக ரீதியில் சுரங்கத் துறையை மேம்படுத்துவதற்கு வேண்டி இந்தியா விரைவில் நிலக்கரி வர்த்தகத் தளத்தை அமைக்கவுள்ளது.
- இந்த திட்டத்தின் கீழ், நாட்டில் உற்பத்தி செய்யப்படும் முழு நிலக்கரியும் 'நிலக்கரிப் பரிமாற்றச் சந்தை' என்ற தளத்தில் வர்த்தகம் செய்யப்படும்.
- நிலக்கரிப் பரிமாற்றம் ஒரு இணையவழி நிலக்கரி வர்த்தகத் தளமாக இருக்கும். அதில் விலை என்பது தேவை மற்றும் வழங்கல் அடிப்படையில் ஒரு வெளிப்படையான முறையில் நிர்ணயிக்கப் படும்
- இந்தியாவின் முதல் நிலக்கரி வர்த்தகத் தளத்தை அமைப்பது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். ஏனெனில் இது நிலக்கரித் துறையில் மிகுதியான அளவில் அதனை வாங்குபவர்களும் விற்பவர்களும் நுழைவதற்கு வழிவகுக்கிறது.
- இந்தியாவில் நிலக்கரி ஒழுங்கான முறையில் விற்பனை செய்வதற்கான ஒரே வர்த்தகத் தளமாக நிலக்கரிப் பரிமாற்றம் இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## நைமிஷா 2020

- புது தில்லியின் நவீன கலைக்கான தேசியக் கலைக்கூடமானது இணையவழியாக நைமிஷா 2020 எனும் ஒரு கோடைக்கால கலை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய உள்ளது.
- இது கலைஞர்களிடமிருந்துப் பங்கேற்பாளர்களுக்கும் கலை ஆர்வலர்களுக்கும் கலையை உருவாக்குவதற்கும் மற்றும் அதனைக் கற்றுக் கொள்வதற்கும் தேவையான வாய்ப்பை வழங்குவதற்கான ஒரு முயற்சியாகும்.
- இந்த நிகழ்ச்சியிலிருந்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட கலைப் படைப்புகளின் ஒரு கண்காட்சி நவீன கலைக்கான தேசியக் கலைக்கூடத்தின் கலை ஊடகத் தளமான சோஹாமில் காட்சிப் படுத்தப்படும்.
- நவீன கலைக்கான தேசியக் கலைக்கூடமானது 1954 ஆம் ஆண்டில் புது தில்லியின் ஜெய்ப்பூர் மாளிகையில் நிறுவப் பட்டது.
- இது இந்திய அரசாங்கத்தின் கலாச்சார அமைச்சகத்தின் கீழ் ஒரு துணைநிலை அலுவலகமாக நடத்தப்பட்டு நிர்வகிக்கப் படுகிறது.




## மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் 18வது அமர்வு

- சமீபத்தில் இந்திய அரசானது லடாக் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசங்களுக்காக மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் (CAT - Central Administrative Tribunal) 18வது அமர்வைத் தொடங்கி வைத்துள்ளது.
- இந்தத் தீர்ப்பாயமானது பொதுப் பணியாளர்களின் பணிநிலைமைகள் தொடர்பான புகார்கள் குறித்து விசாரிக்க இருக்கின்றது.

- CAT ஆனது ஒரு உயர்நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளதைப் போன்றே தனது அதிகாரத்தைப் பயன்படுத்த அதிகாரமளிக்கப் பட்டுள்ளது.
- இது நிர்வாகத் தீர்ப்பாயச் சட்டம், 1985 என்ற சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## பாலைவனத் துரத்தல் நடவடிக்கை

- சமீபத்தில் இராஜஸ்தான் காவல் துறையானது ராணுவ நுண்ணறிவுத் தகவல்களின் அடிப்படையில் ஜெய்ப்பூரில் 2 குடிமக்கள் பாதுகாப்புப் பணியாளர்களைக் கைது செய்துள்ளது.
- இந்தத் தகவல்கள் பாலைவனத் துரத்தல் நடவடிக்கை என்பதின் கீழ் பெறப் பட்டுள்ளன.
- இது 2019 ஆம் ஆண்டில் ராணுவ நுண்ணறிவுப் பிரிவினால் தொடங்கப்பட்ட ஒரு உளவு எதிர்ப்பு நடவடிக்கையாகும்.
- இவர்கள் அலுவல்சார் ரகசியச் சட்டம், 1923 என்ற சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டுள்ளனர்.
- துபாக் நடவடிக்கை என்பது, பாகிஸ்தானின் ISI (Inter-Service Intelligence – பணிகளுக்கு இடையேயான நுண்ணறிவு) என்ற அமைப்பால் தொடங்கப்பட்ட ஒரு ராணுவ நுண்ணறிவு நடவடிக்கையாகும்.
- இந்த நடவடிக்கையானது இந்தியாவைச் சிதைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கழிவு நீர் உற்பத்தி அடிப்படையிலான வகைப்பாடு

- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியமானது ரயில் நிலையங்களில் உற்பத்தியாகும் கழிவு நீரின் அளவைப் பொறுத்து, அவற்றை சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை என்ற நிறங்களாக வகைப்படுத்தியுள்ளது.
- சிவப்பு : ஒரு நாளைக்கு 100 கிலோ லிட்டர்கள் (KLD - KiloLitres per Day) (அ) அதற்குச் சமமான அளவில் கழிவு நீர் உற்பத்தியாகும் ரயில் நிலையங்கள்.
- ஆரஞ்சு : 10 KLD என்ற அளவிற்கும் அதிகமாக அதே சமயம் 100 KLD என்ற அளவிற்கும் குறைவாகக் கழிவுநீர் உற்பத்தியாகும் ரயில் நிலையங்கள்.
- பச்சை : 10 KLD என்ற அளவிற்கும் குறைவாக கழிவு நீர் உற்பத்தியாகும் ரயில் நிலையங்கள்.

## 5வது தேசிய நிறுவனத் தரக் கட்டமைப்பு (NIRF)

- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களுக்காக தேசிய நிறுவனத் தரக் கட்டமைப்பை (NIRF- National Institutional Ranking Framework) வெளியிட்டுள்ளது.
- இதில் ஐஐடி-மதராஸ் முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்த இடத்தில் ஐஐஎஸ்சி-பெங்களூரு தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இதில் மூன்றாவது இடத்தை ஐஐடி-தில்லி கைப்பற்றியது.
- ஐஐடி-மதராஸ் ஆனது சிறந்த பொறியியல் கல்லூரியாக உருவெடுத்துள்ளது.
- பல்கலைக்கழகப் பிரிவில், ஐஐஎஸ்சி-பெங்களூரு முதலிடத்தைப் பிடித்துள்ளது. இதில் தில்லியின் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் 2வது இடத்தையும், பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் 3வது இடத்தையும் பிடித்துள்ளன.

- முதலாவது NIRF தரவரிசையானது 2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- NIRF ஆனது பொறியியல், பல்கலைக்கழகம், மேலாண்மை, கல்லூரி, மருத்துவம், மருந்தகம், சட்டம், பல்மருத்துவம் மற்றும் கட்டிடக்கலை ஆகிய 10 பிரிவுகளின் கீழ் கல்வி நிறுவனங்களைத் தரவரிசைப்படுத்துகின்றது.
- முதன்முறையாக, இந்த ஆண்டின் பட்டியலில் பல் மருத்துவக் கல்லூரிகள் சேர்க்கப் பட்டுள்ளன.




## ஒரு துளி அதிகப் பயிர்

- 2020-21 ஆம் ஆண்டிற்கான பிரதான் மந்திரி கிருஷி சிஞ்சாய் யோஜனாவின் ஒரு துளி அதிகப் பயிர் என்ற திட்டத்தின் கீழ் இந்திய அரசானது ரூ4,000 கோடியை ஒதுக்கியுள்ளது.+
- பிரதான் மந்திரி கிருஷி சின்சாயி யோஜனாவின் ஒரு துளி அதிகப் பயிர் என்ற திட்டத்தின் கீழ் தெளிப்பு மற்றும் சொட்டு நீர்ப் பாசனம் மூலம் திறன்மிகு நீர்ப் பயன்பாட்டை இது மையமாகக் கொண்டுள்ளது.
- உரப் பயன்பாடு, தொழிலாளர் செலவுகள் மற்றும் உள்ளீட்டுச் செலவுகளைக் குறைப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இத்துடன், நபார்டு (வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டிற்கான தேசிய வங்கி) வங்கியுடன் இணைந்து ரூ. 5 ஆயிரம் கோடி நுண்பாசன நிதிய மூலதனத்தை உருவாக்குவது குறித்தும் இந்திய அரசு தகவல் தெரிவித்துள்ளது.




## புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு சுகாதாரக் காப்பீடு

- இந்திய அரசு தனது முதன்மைத் திட்டமான பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா (ஆயுஷ்மான் பாரத்) திட்டத்தைப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் சேர்த்து விரிவுபடுத்தியுள்ளது.
- இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் தேசியச் சுகாதார ஆணையமானது இந்தத் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்படும் தகுதியான புலம்பெயர்ந்தோருக்கு அவர்களுக்கான மின்னணு அட்டைகளை வழங்கும்.
- திரும்பி வரும் தொழிலாளர்கள் கிராமப்புற இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பதே இதற்கு முக்கியக் காரணம் ஆகும்.
- மேலும் ஆயுஷ்மான் பாரதத்தின் பயனாளிகளில் குறைந்தது 80% பயனாளிகள் கிராமப்புற இந்தியாவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா என்பது காகிதமில்லா மற்றும் பணம் செலுத்த தேவையில்லா வசதியினைக் கொண்டுள்ள ஒரு திட்டமாகும், இது ஆண்டிற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் வரையிலான சுகாதாரப் பாதுகாப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## 2019-20 இன் பாதுகாப்பு பதிவு

- இரயில் விபத்துக்களால் ஏற்படும் பயணிகள் இறப்பானது பூஜ்ஜியம் என்ற அளவில் கடந்த ஆண்டு இந்திய ரயில்வேத் துறை தனது சிறந்த பாதுகாப்புச் செயல்திறனைப் பதிவு செய்துள்ளது.
- ஏப்ரல் 2019 முதல் மார்ச் 2020 வரை ரயில்வேத் துறையானது ஒரு மிகச் சிறந்த பாதுகாப்புச் சாதனையைப் பதிவு செய்துள்ளது.
- இந்த ஆண்டு ஏப்ரல் 1 முதல் ஜூன் 8 வரையிலான எந்தவொரு ரயில் விபத்திலும் கூட இரயில் பயணிகளின் உயிரிழப்பு என்று எதுவும் இல்லை.
- 166 ஆண்டுகளுக்கு முன்பு 1853 ஆம் ஆண்டில் இந்தியாவில் ரயில்வே அமைப்பு அறிமுகப்படுத்தப் பட்ட பின்னர், 2019-2020 ஆம் ஆண்டில் தான் முதல் முறையாக இந்த இலக்கு அடையப் பட்டுள்ளது.




## DBO உடன் இணைப்பு

- 255 கி.மீ நீளமுள்ள தர்புக்-ஷியோக்-தௌலத் பெக் ஓல்டி (DS-DBO - Darbuk-Shyokh-Daulat Beg Oldie) என்ற அனைத்து வானிலைக்கும் ஏற்ற சாலை நிர்மாணிக்கப்படுவது என்பதற்கான உடனடிக் காரணம் இந்திய ராணுவத்திற்கும் சீன ராணுவத்திற்கும் இடையிலான மோதலே ஆகும் என்று கூறப்படுகிறது.
- பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் எல்லைச் சாலைகள் அமைப்பால் கட்டப்பட்ட இந்தச் சாலையானது உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டிற்குக் கிட்டத்தட்ட இணையாகச் செல்கின்றது. மேலும் இது லே பகுதியை DBO பகுதியுடன் இணைக்கிறது.
- லடாக்கில் இருந்து இந்தியப் பகுதியின் வடக்கு திசையின் எல்லையில் டி.பி.ஓ பகுதி உள்ளது.
- இது உலகின் மிக உயர்ந்த விமான ஓடுதளத்தைக் கொண்டுள்ளது. இது முதலில் 1962 ஆம் ஆண்டுப் போரின் போது கட்டப்பட்டது.
- 2008 ஆம் ஆண்டில், இந்திய விமானப் படையானது உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியுடன் சேர்த்து மிகுந்த அளவில் இருக்கும் தனது மேம்பட்ட இறங்குதள மைதானங்களில் ஒன்றாக இதை மேம்படுத்திப் புதுப்பித்தது.



## இடஒதுக்கீடு குறித்து உச்சநீதிமன்றம்

- இடஒதுக்கீடு குறித்த உரிமையானது ஓர் அடிப்படை உரிமையல்ல என்று இந்திய உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.
- இது தமிழ்நாட்டின் மருத்துவக் கல்லூரியில் ஒபிசி பிரிவினருக்கு (இதர பிற்படுத்தப்பட்டப் பிரிவினர்) இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பான பல்வேறு வழக்குகளை ஒன்றாகச் சேர்த்து விசாரித்து வருகின்றது.
- இடஒதுக்கீட்டு உரிமையானது ஓர் அடிப்படை உரிமை என்று எவரும் கோர முடியாது என்று இந்திய உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. எனவே இடஒதுக்கீட்டுப் பயன்கள் அளிக்கப்படாதது எந்தவொரு அரசியலமைப்பு உரிமையின் மீதான விதிமீறலும் அல்ல என்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- ஒரு பொதுப் பிரச்சினைக்காக தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து வந்திருப்பதை உச்சநீதிமன்றம் பாராட்டியுள்ளது.
- உச்சநீதிமன்றமானது மதராஸ் உயர்நீதிமன்றத்தை அணுகி மேல்முறையீடு செய்து அங்கேயே இதற்குரிய நிவாரணத்தைப் பெறுமாறு மனுதாரர்களிடம் கூறியுள்ளது.
- இந்த மனுக்கள் 2020-21 ஆம் ஆண்டில் இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் தொடர்பான பாடப் பிரிவுகளுக்கு அகில இந்திய இடஒதுக்கீட்டிற்கு வேண்டி தமிழ்நாட்டினால் வழங்கப்பட்ட இடங்களில் 50% இடங்கள் ஒபிசி பிரிவினருக்கு இடஒதுக்கீடாக வழங்க வேண்டும் என்று கூறுகின்றது.
- தமிழ்நாட்டில் ஒபிசி, எஸ்சி மற்றும் எஸ்டி பிரிவினருக்கு 69% இடஒதுக்கீடும் அதற்குள் ஒபிசி பிரிவினருக்கான இடஒதுக்கீடு 50%ற்கும் மேல் உள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது.

## இயற்கைக் குறியீடு 2020

- இயற்கைக் குறியீடு என்பது ஆசிரியருடனான தொடர்புகள் மற்றும் நிறுவன உறவுகளைக் கொண்ட ஒரு தரவு தளமாகும்.
- இந்தத் தரவு தளமானது ஜெர்மனியில் உள்ள அமெரிக்க ஜெர்மனியக் கல்விப் பிரசுரிப்பு நிறுவனமான "ஸ்பிரின்ஞர் நேச்சர்" என்ற ஒரு சர்வதேச அறிவியல்சார் பிரசுரிப்பு நிறுவனத்தின் ஒரு பிரிவான "நேச்சர் ரிசர்ச்" என்ற பிரிவினால் தொகுக்கப் பட்டுள்ளது.
- இதில் முதல் 5 இடங்கள் அமெரிக்கா, சீனா, ஜெர்மனி, ஐக்கிய இராஜ்ஜியம், ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளன.
- இந்தக் குறியீட்டில் இந்தியா ஒட்டுமொத்தமாக 12வது இடத்தில் உள்ளது. இந்தியாவைச் சேர்ந்த முன்னிலையில் உள்ள 3 நிறுவனங்கள் பின்வருமாறு:
    - அறிவியல்சார் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றம்
    - இந்திய அறிவியல் தொழில்நுட்பம்
    - டாடா அடிப்படை ஆராய்ச்சி மையம்
- இந்திய அரசின் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் 3 தனிச்சுதந்திர நிறுவனங்கள் முதல் 30 இந்திய நிறுவனங்களிடையே இடம் பிடித்துள்ளன.
- அவையாவன:
    - கொல்கத்தாவில் உள்ள இந்திய அறிவியல் வளர்ச்சிக் கழகம் - 7வது இடம்
    - பெங்களூருவில் உள்ள ஜவஹர்லால் நேரு மேம்படுத்தப்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மையம் – 14வது இடம்

- கொல்கத்தாவில் உள்ள எஸ்என் போஸ் தேசிய அடிப்படை அறிவியல் மையம் - - 30வது இடம்.

| Institution | Count | Share |
|---|---|---|
| 1. Council of Scientific and Industrial Research (CSIR) | 158 | 95.95 |
| 2. Indian Institute of Science (IISc) | 209 | 81.28 |
| 3. Tata Institute of Fundamental Research (TIFR) | 214 | 63.38 |
| 4. Homi Bhabha National Institute (HBNI) | 196 | 57.17 |
| 5. Indian Institute of Technology Bombay (IIT Bombay) | 113 | 50.37 |
| 6. Indian Association for the Cultivation of Science (IACS) | 78 | 45.01 |
| 7. Indian Institute of Science Education and Research Kolkata (IISER Kolkata) | 66 | 43.35 |
| 8. Indian Institute of Technology Guwahati (IIT Guwahati) | 68 | 37.45 |
| 9. Indian Institute of Technology Madras (IIT Madras) | 145 | 34.31 |
| 10. Indian Institute of Technology Kanpur (IIT Kanpur) | 57 | 29.95 |

## "HeiQ Viroblock"

- "அரவிந்த்" என்று ஜவுளி நிறுவனமானது தனது நெய்யப்பட்ட துணி மற்றும் ஆடைப் பொருட்களுக்காக ஒரு வைரஸ் எதிர்ப்பு ஜவுளித் தொழில்நுட்பத்தைத் தொடங்கியுள்ளதாக அறிவித்துள்ளது.
- "HeiQ Viroblock" என்ற தொழில்நுட்பத்துடன் பயன்படுத்தப்படும் ஆடைகள் துடிப்பான வகையில் வைரஸ்களைத் தடுத்து அதன் மூலம் தொடர்பில் இருக்கும் வைரஸ்களைக் கொல்கின்றன. மேலும் அந்த ஆடைகளின் உற்பத்தியின் மூலம் நோய்க் கிருமிகளின் மறுபரிமாற்றத்திற்கான சாத்தியக் கூறைக் குறைக்க இது உதவுகின்றது.
- "HeiQ Viroblock NPJO3" என்பது ஜவுளி உற்பத்தி நடைமுறைகளின் இறுதி நிலையின் போது நெசவு செய்யப்பட்ட ஆடையுடன் சேர்க்கப்படும் சுவிஸ் நாட்டின் ஒரு நுண்ணறிவு ஜவுளித் தொழில்நுட்பமாகும்.
- இது மேம்படுத்தப்பட்ட வெள்ளி மற்றும் சிறுமேடு அல்லது வெசிசில் என்ற தொழில்நுட்பத்தின் ஒரு சிறப்புக் கலவையாகும்.

## iFLOWS

- iFLOWS என்பது வெள்ளம் ஏற்படும் பகுதிகளில் வெள்ள எச்சரிக்கையை வழங்கும் ஒரு அமைப்பாகும்.
- இது மும்பையில் தொடங்கப் பட்டுள்ளது.
- iFLOWS என்பது ஒருங்கிணைந்த வெள்ள முன்னெச்சரிக்கை அமைப்பாகும்.



## பி.கே. மொகந்தி குழு

- இந்திய ரிசர்வ் வங்கியானது தனியார் துறை வங்கிகளின் உரிமை குறித்த வழிகாட்டுதல்களை மறு ஆய்வு செய்வதற்காக உள்ளகப் பணிக் குழு ஒன்றை அமைத்துள்ளது.
- இந்தக் குழுவானது இந்திய ரிசர்வ் வங்கியின் செயல் இயக்குநரான P.K. மொகந்தி அவர்களால் தலைமை தாங்கப்பட இருக்கின்றது.
- இது கூட்டுறவு முறைமையின் மூலம் அல்லாத நிதியியல் சொத்துக்களை வைத்துள்ள நிறுவனம் மூலமாக துணை நிதியியல் நிறுவனங்களை வைத்திருப்பதற்கான விதிமுறைகளை ஆய்வு செய்ய இருக்கின்றது.

## DDMA

- தில்லி துணை நிலை ஆளுநரான அனில் பைஜால் தில்லி பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு (DDMA - Delhi Disaster Management Authority) அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக ஒரு வல்லுநர் ஆலோசகக் குழுவை அமைத்துள்ளார்.
- பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 என்ற சட்டமானது தேசிய, மாநில, மாவட்ட அளவில் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் விரிவான சட்டப்பூர்வச் செயல் திட்டங்களை வழங்குகின்றது.
- மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையமானது மாநில முதலமைச்சரால் தலைமை தாங்கப் படுகின்றது.
- ஆனால் தில்லியைப் பொறுத்தவரை, தில்லி துணைநிலை ஆளுநர் தில்லி பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் ஆவார். தில்லியின் முதலமைச்சர் இந்த ஆணையத்தின் துணைத் தலைவர் ஆவார்.

## ஆரோக்கிய பாத்

- அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றமானது "ஆரோக்கிய பாத்" என்ற தேசிய சுகாதார விநியோகச் சங்கிலி தளத்தைத் தொடங்கியுள்ளது.
- இது நிகழ்நேரத்தில் சுகாதார நல விநியோக மருந்துகளின் இருப்புத் தன்மை குறித்த தகவலை அளிக்கும்.

## M B லால் குழு

- 2009 ஆம் ஆண்டில், இந்திய அரசானது ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் உள்ள ஐஓசிஎல் நிறுவனத்தின் முனையத்தில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து M B லால் குழு என்ற ஒரு குழுவை அமைத்திருந்தது.
- அசாமின் பாக்ஜன் எண்ணெய் வயலில் ஏற்பட்ட மிகப்பெரிய தீ விபத்தானது கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இது அக்குழுவின் பரிந்துரைகளை நினைவு கூர்ந்துள்ளது.

## ARJUN

- சமீபத்தில் மத்திய ரயில்வேயின் கீழ் இயங்கும் ரயில்வே பாதுகாப்புப் படையானது "கேப்டன் அர்ஜுன்" என்று அழைக்கப்படும் ஒரு இயந்திர மனிதனைத் வெளியிட்டு உள்ளது.

- "ARJUN" (Always be Responsible and Just Use to be Nice) என்பது எப்பொழுதும் பொறுப்புடையதாக இருப்பது மற்றும் பயன்படுத்துவற்கு மென்மையானது என்பதைக் குறிக்கின்றது.



## ADIP முகாம்

- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகமானது முதல் ADIP (Assistance to Disabled Persons for purchasing and fitting of aids) முகாமை ஏற்பாடு செய்துள்ளது.
- மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிக் கருவிகளை வாங்குவதற்கும் அதைப் பொருத்துவதற்கும் வேண்டிய உதவி வழங்குவதை ADIP நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- பஞ்சாபின் ஃபிரோஸ்பூர் மாவட்டத்தில் ADIP திட்டத்தின் கீழ் திவ்யாங்ஜான்களுக்கு (மாற்றுத் திறனாளிகளுக்கு) இலவச உதவிக் கருவிகளை விநியோகிக்க இந்த முகாமானது நடத்தப் பட்டது.
- இந்த முகாமை சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் அலிம்கோ (இந்தியாவின் செயற்கைக் கால்கள் உற்பத்தி நிறுவனம்) நிறுவனமானது ஏற்பாடு செய்துள்ளது.

## குடிமைப் பணிகள் வாரியம்

- கடந்த வாரத்தில் பஞ்சாப் மாநில அரசானது அம்மாநிலத்தில் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளின் பணியிட மாற்றங்கள் மற்றும் பணியமர்த்துதல் குறித்து முடிவு செய்வதற்காக 3 உறுப்பினர்கள் கொண்ட குடிமைப் பணிகள் வாரியத்தை அமைத்துள்ளது.
- இந்திய உச்ச நீதிமன்றமானது 2013 ஆம் ஆண்டில் குடிமைப் பணிகள் வாரியத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் அமைக்க வேண்டும் என்ற அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.
- இது அரசியல் இடையீடுகளிலிருந்து குடிமைப் பணி அதிகாரிகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப் படுகின்றது. இது அரசியல் தலைவர்களினால் மேற்கொள்ளப் படும் தொடர் இடம் மாற்றல் நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கின்றது.

- இது மாநிலத்தில் உள்ள தலைமைச் செயலாளரால் தலைமை தாங்கப்படுகின்றது.

## NDRF நிதி

- தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் நேரடியாக தேசியப் பேரிடர் நிவாரண நிதிக்கு (NDRF - National Disaster Relief Fund) பங்களிக்க அனுமதிக்கும் வகையிலான ஒரு பரிந்துரைக்கு மத்திய நிதித்துறை அமைச்சகமானது ஒப்புதல் வழங்கியுள்ளது.
- NDRF ஆனது பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 என்ற சட்டத்தின் கீழ் அமைக்கப் பட்டுள்ளது.
- இது எந்தவொரு அச்சுறுத்தும் பேரிடர் சூழ்நிலைச் சமயத்திலும் "அவசரகால மீட்பு, நிவாரணம், புனர்வாழ்வு" ஆகியவற்றிற்கான செலவுகளுக்குப் பயன்படுத்தப்படும் நிதியாகும்.
- இது மாநிலங்களின் மாநிலப் பேரிடர் நிவாரண நிதிகளுக்கு உதவி புரிவதற்காக (கூடுதலாக) அமைக்கப் பட்டுள்ளது.
- இது "வட்டி ஏதும் பெறப்படாத ஒதுக்கப்பட்ட நிதியம் என்பதின் கீழ் இந்திய அரசின் பொதுக் கணக்கில்" வைக்கப் பட்டுள்ளது.
- பிரதான் மந்திரி பாதுகாப்பு நிதியம் அல்லது பிரதம மந்திரி தேசிய நிவாரண நிதியானது ஒரு பொது அமைப்பு அல்ல. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்நிதி குறித்து தகவல் எதுவும் பெற முடியாது.

## காணொலி வாயிலாக சுகாதார நல மற்றும் ஆரோக்கியக் கண்காட்சி 2020

- இது காணொலி வாயிலாக மத்திய இரசாயனங்கள் மற்றும் உரத்துறை இணை அமைச்சரான மன்சுக் மண்டாவியாவால் தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்தியாவில் காணொலி வாயிலாக நடத்தப்படும் முதலாவது கண்காட்சி இதுவாகும்.
- இது இந்திய வணிக மற்றும் தொழிற்துறைக் கூட்டமைப்பினால் நடத்தப்பட்டது.




## YUKTI 2.0

- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சரான ரமேஷ் பொக்ரியால் "YUKTI 2.0" என்ற இணையதள முன்னெடுப்பைத் தொடங்கி வைத்துள்ளார்.
- "YUKTI" என்பது இளைய இந்தியாவானது அறிவு, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றைக் கொண்டு கோவிட்-19 நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடுகின்றது என்ற அர்த்தத்தைக் கொண்டு உள்ளது.

- இது தற்சார்பு இந்தியாவை உருவாக்கும் திட்டத்தின் வரிசையில் அமைந்துள்ளது.
- "YUKTI 2.0" இணையதளமானது புதுதில்லியில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களுக்கான ஒரு தளமாகும்.




## விண்வெளி சார்ந்த நடவடிக்கைகளில் தனியார் துறை பங்கேற்பு

- மத்திய அமைச்சரவையானது இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையத்தை (IN-Space - Indian National Space Promotion and Authorization Centre) அமைப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- மத்திய அமைச்சரவையானது பல்வேறு விண்வெளி சார்ந்த நடவடிக்கைகளில் தனியார் துறையின் பங்கேற்பிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- IN-SPACE ஆனது பல்வேறு விண்வெளி சார்ந்த நடவடிக்கைகளில் தனியார் துறையை வழிநடத்தும் பணியை மேற்கொள்ள இருக்கின்றது.
- அரசிற்குச் சொந்தமான புதிய விண்வெளி இந்திய நிறுவனமானது 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தொடங்கப் பட்டது.

## இந்தியாவில் தற்கொலைகள்

- கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட உலக சுகாதார நிறுவன அறிக்கையின்படி, தென்-கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் மிக அதிக தற்கொலை விகிதத்தை இந்தியா கொண்டுள்ளது.
- இந்தியாவின் தற்கொலை விகிதமானது 1,00,000 மக்களுக்கு 5 தற்கொலைகள் என்ற அளவில் உள்ளது.
- மேலும் உலகில் மூன்றாவது மிக அதிக அளவிலான பெண்கள் தற்கொலை விகிதத்தையும் (14.7) இந்தியா கொண்டுள்ளது.
- தற்கொலையானது 2017 ஆம் ஆண்டில் இந்தியாவில் குற்றமற்றதாக அறிவிக்கப் பட்டது. ஆனால் இந்தியக் குற்றவியல் சட்டத்தின் பிரிவு 309 ஆனது இன்னமும் இதை குற்றமாகக் கூறுகின்றது.

## ஒபிசியின் துணை (உள்) வகைப்படுத்துதல் குறித்த ஆணையத்தின் காலநீட்டிப்பு

- சமீபத்தில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் துணை (உள்) வகைப்படுத்துதல் குறித்து ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் பதவிக் காலத்தை அடுத்த 6 மாத காலத்திற்கு, அதாவது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி வரை மத்திய அமைச்சரவை நீட்டித்துள்ளது.
- தற்பொழுது இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக எந்தவொரு உள் வகைப்படுத்துதலும் நடைமுறையில் இல்லை. 27% இடஒதுக்கீடு என்ற ஒரே மொத்த வகையிலான வகைப்படுத்துதல் மட்டுமே உள்ளது.

- இந்த ஆணையமானது ஓய்வு பெற்ற நீதிபதி G. ரோகிணி என்பவரால் தலைமை தாங்கப் படுகின்றது.
- இது இந்திய அரசியலமைப்பின் சரத்து 340ன் கீழ் 2017 ஆம் ஆண்டு அக்டோபர் 02 அன்று இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் அமைக்கப்பட்டுள்ளது.
- இந்திய அரசியலமைப்பின் 340வது சரத்தானது பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நிலை குறித்து ஆய்வு செய்வதற்காக வேண்டி ஆணையத்தின் நியமனத்திற்கான விதிமுறைகளை வழங்குகின்றது.

## வருடாந்திர காசநோய் அறிக்கை

- இது மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தின் மத்தியக் காச நோய்ப் பிரிவினால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் 24.04லட்சம் காச நோயாளிகள் உள்ளனர். இது 2018 ஆம் ஆண்டு இருந்த எண்ணிக்கையை விட 14% அதிகமாகும்.
- நிக்சய் என்ற முறையின் மூலம் காச நோயாளிகளின் அறிவிப்பு வரிசையை இந்தியா முழுவதும் நிறைவு செய்ய இருக்கின்றது.
- இந்திய அரசானது “தேசியக் காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்” என்பதனை “தேசியக் காசநோய் ஒழிப்புத் திட்டம்” என்று மறுபெயரிட்டுள்ளது.
- இது, 2025 ஆம் ஆண்டுவாக்கில் நாட்டின் காசநோயை ஒழிப்பதின் மீது கவனம் செலுத்துகின்றது.
- மிகப்பெரிய மாநிலங்களின் வரிசையில் குஜராத் மாநிலமானது சிறப்பாக செயல்படும் மாநிலமாகத் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது. இதில் இதற்கு அடுத்து ஆந்திரப் பிரதேசம் மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகியவை முறையே 2வது மற்றும் 3வது இடங்களில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

## “eBLood”


- மத்திய சுகாதார நலத்துறை அமைச்சரான டாக்டர் ஹர்ஷவர்தன் “eBLood” சேவைகள் என்ற ஒரு கைபேசி செயலியைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்தச் செயலியானது இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒரு முன்னெடுப்பாகும்.




## புதிய நடைமுறைகளைச் செயல்படுத்துதல்

- நிதி ஆயோக் ஆனது நடத்தை மாற்றப் பிரச்சாரமான “புதிய நடைமுறைகளைச் செயல்படுத்துதல்” என்ற ஒரு பிரச்சாரத்தையும், அதற்கான இணையதளத்தையும் தொடங்கி உள்ளது.

- இது கோவிட் – 19 நோய்த் தொற்றின் காரணமான பொது முடக்க நீக்க நடவடிக்கையின் போது கோவிட் – 19 நோய்த் தொற்றுக்கான பாதுகாப்பான நடைமுறைகள் மீது குறிப்பாக முகக் கவசங்கள் அணிதல் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது.
- இதற்கான பங்கேற்பாளர்கள் பின்வருமாறு
  - பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அமைப்பு
  - அசோகா பல்கலைக் கழகத்தின் சமூக மற்றும் நடத்தை மாற்ற மையம்
  - மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்.
  - மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகம்.




## இந்தியாவில் கோதுமை உற்பத்தியாளர்

- இந்த ஆண்டில் இந்தியாவில் கோதுமை உற்பத்தியில் பஞ்சாப் மாநிலத்தைப் பின்னுக்குத் தள்ளி மத்தியப் பிரதேச மாநிலம் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- நாட்டில் கோதுமை பயிரிடப்பட்ட ஒட்டு மொத்தப் பகுதியில் மத்தியப் பிரதேசத்தின் பங்கு 31% ஆகும்.

## லால்–பால்–பால் (Lal-Bal-Pal)

- புனேவில் உள்ள "சர்ஹாத்" என்ற ஒரு இலாப நோக்கற்ற அமைப்பானது மகாராஷ்டிரா மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவற்றிற்கிடையேயான உறவை வலுப்படுத்துவதற்காக வேண்டி கல்வி மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் கொண்ட ஒரு தொடரை தொடங்க இருக்கின்றது.
- இது தேசியவாதிகளான லாலா லஜபதி ராய், லோக்மானிய பால கங்காதர திலகர் மற்றும் பிபின் சந்திர பால் ஆகியோரின் நினைவாக விடுதலைப் போராட்டக் காலத்திய உணர்வை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வெட்டுக்கிளி கட்டுப்பாடு

- வேளாண்மை, ஒத்துழைப்பு மற்றும் உழவர் நலத்துறையானது விவசாய உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கான வரம்புகளைக் குறைப்பதற்காக வேண்டி வெட்டுக்கிளியைக் கட்டுப்படுத்த வாகனத்தில் பொருத்தப்படக் கூடிய அதிகுறைந்த கன அளவு கொண்ட ஒரு தெளிப்பானை உருவாக்கும் முயற்சியைத் துவங்கி உள்ளது.
- ஆளில்லா விமானங்கள் எனப்படும் ட்ரோன்களைப் பயன்படுத்தி பாலைவன வெட்டுக்கிளிகளைக் கட்டுப்படுத்தும் உலகின் முதல் நாடு இந்தியாவாகும்.



## சங்கல்ப் பார்வ்

- 2020 ஆம் ஆண்டு ஜுன் 28 ஆம் தேதி முதல் ஜூலை 12 ஆம் தேதி வரை "சங்கல்ப் பார்வ்" என்றழைக்கப்படும் 2 வார கால அளவுள்ள மரம் நடும் ஒரு பிரச்சாரத்தை அனுசரிக்க இருப்பதாக மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- இதன் கீழ், மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சகமானது பார்காடு, அவ்லா, அரச மரம், அசோக மரம் மற்றும் வில்வம் ஆகிய 5 மரங்களை நடுவதற்குப் பரிந்துரை செய்துள்ளது.
- இந்த 5 மரங்கள் நாட்டின் மூலிகைப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கின்றது.




## சுரக்சித் தாதா – தாதி, நானா – நானி அபியான்

- இது கோவிட் – 19 நோய்த் தொற்றிற்கு மத்தியில் மூத்தக் குடிமக்களின் நலனை உறுதிபடுத்துவதற்காகத் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தப் பிரச்சாரமானது நிதி ஆயோக் மற்றும் பிரமல் அமைப்பு ஆகியவற்றிற்கிடையிலான ஒரு கூட்டு முயற்சியாகும்.



## நாஷா முக்த் பாரத் : வருடாந்திர நடவடிக்கைத் திட்டம்

- சமீபத்தில் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகமானது "நாஷா முக்த் பாரத் வருடாந்திர நடவடிக்கை (2020-21)" என்ற ஒரு திட்டத்தை வெளியிட்டு உள்ளது
- இது போதை மருந்தின் சட்டவிரோதப் பயன்பாடு மற்றும் சட்டவிரோதக் கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினத்தின் ஒரு பகுதியாக வெளியிடப்பட்டுள்ளது.
- இது போதை மருந்து தடுப்பு அமைப்பு, சமூக நீதி அமைச்சகத்தின் விழிப்புணர்வு மற்றும் சுகாதாரத் துறையின் மூலம் சிகிச்சை அளித்தல் ஆகிய 3 கூறுகளின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- இந்தத் திட்டம் முதலில் 2015 ஆம் ஆண்டில் பஞ்சாபில் சிரோமணி அகாலி தளத்தால் ஆரம்பிக்கப் பட்டது.
- மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக பெரும்பாலும் பஞ்சாப், ஹரியானா, டெல்லி, உத்தரப் பிரதேசம் மற்றும் வட கிழக்கு மாநிலங்கள் ஆகியவற்றில் முன்னிலையில் உள்ளதாக 272 மாவட்டங்களை போதை மருந்து தடுப்பு அமைப்பு அடையாளம் கண்டு இருக்கின்றது.

## தபால் வாக்கு முறை

- சமீபத்தில் மத்திய சட்டத்துறை அமைச்சகமானது மக்களவை மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் தபால் வாக்கைக் கோரும் மூத்த குடிமக்களுக்கான வயது வரம்பைக் குறைத்துள்ளது.
- தற்பொழுது, 65 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் அல்லது கோவிட் – 19 நோய்த் தொற்று இருக்கும் எனச் சந்தேகிக்கப்படும் நபர்கள் தபால் வாக்கைக் கோர முடியும்.
- இதற்கு முன்பு 2019 ஆம் ஆண்டில், மக்களவை மற்றும் சட்டசபைத் தேர்தல்களின் போது மாற்றுத் திறனாளிகள் மற்றும் 80 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் தபால் வாக்கு செலுத்தும் வகையில் தேர்தல் நடத்தை விதிமுறைகளை மத்திய சட்டத்துறை அமைச்சகம் திருத்தியிருந்தது.
- இந்தத் திருத்தப்பட்ட விதிகளின் மூலம் பயனடையும் முதலாவது வாக்காளர்கள் பீகார் மாநில வாக்காளர்கள் ஆவார்.
- இந்தியாவில் கொரானா வைரஸ் நோய் பாதிப்பிற்குப் பிறகு சட்டசபைத் தேர்தலைக் காண இருக்கும் முதலாவது மாநிலம் பீகார் ஆகும்.

# சர்வதேசச் செய்திகள்

## டி10 குழு

- சீனாவின் தொலைத்தொடர்பு நிறுவனமான ஹுவாவே நிறுவனம் தொடர்பாக அதிகரித்து வரும் பாதுகாப்புக் காரணங்களைத் தொடர்ந்து இந்தியா உள்ளிட்ட 10 மக்களாட்சிகளைக் கொண்ட ஒரு 5ஜி குழுவை ஏற்படுத்துவதற்காக பிரிட்டன் அரசு அமெரிக்காவை நாடியுள்ளது.
- இதில் ஐக்கிய இராஜ்ஜியம், அமெரிக்கா, இத்தாலி, ஜெர்மனி, பிரான்சு, ஜப்பான் மற்றும் கனடா ஆகிய ஜி7 நாடுகளும் ஆஸ்திரேலியா, தென்கொரியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளும் உள்ளன.
- இது சீனாவைச் சார்ந்திருத்தலைத் தவிர்ப்பதற்கு 5ஜி உபகரணங்கள் மற்றும் இதர தொழில்நுட்பங்களின் மாற்று விநியோகஸ்தர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## ஆற்றல் செயல்முறை அறிக்கை

- ஆற்றல் செயல்முறை அறிக்கையானது சர்வதேச ஆற்றல் நிறுவனம், சர்வதேச புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நிறுவனம், ஐக்கிய நாடுகள் புள்ளியியல் பிரிவு, உலக வங்கி மற்றும் உலக சுகாதார நிறுவனம் ஆகியவற்றினால் வெளியிடப்பட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு எண் 7 ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் உலகம் தழுவிய விலை குறைவான, நம்பத்தகுந்த, நீடித்த மற்றும் நவீன ஆற்றல் அணுகலை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, உலக அளவில் மின்மயமாக்கல் விகிதச் செயல்பாடானது 2010 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை நிலையான அளவில் அதிகரித்துள்ளது. இது 2010 ஆம் ஆண்டில் 83%லிருந்து 2018 ஆம் ஆண்டில் உலக மக்கள்தொகையில் 90% ஆக அதிகரித்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டில், மின்சார அணுகல் தொடர்பாக மிகப்பெரிய பற்றாக்குறை உள்ள முதல் மூன்று நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.
- நைஜீரியா, காங்கோ மக்களாட்சிக் குடியரசு மற்றும் இந்தியா ஆகிய 3 மிகப்பெரிய பற்றாக்குறையுள்ள நாடுகள் முறையே 85 மில்லியன், 68 மில்லியன் மற்றும் 64 மில்லியன் மக்களுக்கு மின் பற்றாக்குறையைக் கொண்டு உள்ளன.

## கருப்பு இனத்தவர் போராட்டம்

- கருப்பு இனத்தவர் போராட்டம் என்பது கருப்பு இன மக்களை நோக்கிய வன்முறை மற்றும் இனப் பாகுபாட்டிற்கு எதிரான ஒரு ஆப்பிரிக்க-அமெரிக்கப் போராட்டமாகும் அல்லது (இயக்கமாகும்).

- இந்த இயக்கமானது அமெரிக்காவில் கருப்பு இன மக்கள் கொல்லப்படுதல், காவல்துறை அத்துமீறல், இனம் சார்ந்து ஒதுக்கப்படுதல் மற்றும் இனப் பாகுபாடு ஆகியவற்றிற்கு எதிரான ஒரு பிரச்சாரமாகும்.
- இந்த இயக்கம் 2013 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- இந்த இயக்கம் கனடா, ஆஸ்திரேலியா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குப் பரவியது.
- ஆப்பிரிக்க – அமெரிக்கரான ஜார்ஜ் ப்ளாய்டின் இறப்பைத் தொடர்ந்து மிகப்பெரிய அளவிலான ஒரு போராட்டத்தை அமெரிக்கா எதிர் கொண்டு வருகின்றது.




## G7 அமைப்பின் விரிவாக்கம்

- அமெரிக்க அதிபரான டொனால்டு டிரம்ப் G7 அமைப்பில் இந்தியா, ரஷ்யா, தென்கொரியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளும் இணைக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.
- உண்மையில் G8 ஆக இருந்த G7 அமைப்பானது ஒரு முறைசாரா மன்றமாக 1975 ஆம் ஆண்டில் அமைக்கப் பட்டது. இது உலகின் முன்னணித் தொழில்துறை நாடுகளின் தலைவர்களை ஒன்றிணையச் செய்கின்றது.
- இந்த அமைப்பில் ஓர் உறுப்பு நாடாக ரஷ்யா 1998ல் இணைந்தது. அதன் பிறகு இந்த அமைப்பு G8 என்றானது.
- ரஷ்யப் படைகள் 2014 ஆம் ஆண்டில் கிழக்கு உக்ரைனில் நுழைந்து கிரீமியாவைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இதர G8 நாடுகள் இது குறித்து விமர்சிக்கத் தொடங்கின.
- இந்த அமைப்பில் உள்ள இதர நாடுகள் G8 அமைப்பில் இருந்து ரஷ்யாவை நீக்க முடிவு செய்தன. அதன் பிறகு 2014 ஆம் ஆண்டில் இந்த அமைப்பு G7 என்றானது.



## எபோலா நோய்த் தொற்று

- காங்கோ மக்களாட்சிக் குடியரசானது அந்நாட்டில் உள்ள மேற்கு நகரான மபன்டாகாவில் ஒரு புதிய எபோலா நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளதாக அறிவித்து உள்ளது.
- 1976 ஆம் ஆண்டில் இந்த நாட்டில் எபோலா நோய்த் தொற்று முதன்முறையாகக் கண்டறியப் பட்டது. அதனைத் தொடர்ந்து அந்நாட்டில் ஏற்பட்ட 11வது எபோலா நோய்ப் பாதிப்பு இதுவாகும்.
- இந்த வைரசானது விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவி, அதன் பின்னர் மனிதர்களிடமிருந்து மற்ற மனிதர்களுக்குப் பரவுவதன் மூலம் மனிதர்களிடையே வேகமாக பரவுகின்றது.
- "rvsv - ZEBOV" என்று அழைக்கப்பட்ட ஒரு சோதனை முறையிலான எபோலா நோய்த் தடுப்பு மருந்தானது 2015 ஆம் ஆண்டில் கினியாவில் நடத்தப்பட்ட ஒரு மிகப்பெரியச் சோதனையின் போது எபோலா வைரசிற்கு எதிராக ஒரு உயரியப் பாதுகாப்பினை அந்த மருந்து அளிப்பது உறுதி செய்யப்பட்டது.

## THAAD

- தென் கொரியாவில் இருக்கும் "THAAD" என்ற ஒரு பாதுகாப்பு அமைப்பிற்குச் சீனா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.
- THAAD (Terminal High Altitude Area Defense) என்பது "அதி உயர் பாதுகாப்புப் பகுதி முனைய அமைப்பு" என்பதன் சுருக்கமாகும்.
- இந்தக் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையானது லாக்ஹீடு மார்ட்டின் என்ற அமெரிக்க நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப் பட்டுள்ளது.
- இது தென்கொரியா, ஐக்கிய அரபு அமீரகம், குவாம், இஸ்ரேல் மற்றும் ரோமானியா ஆகிய நாடுகளில் நிலை நிறுத்தப் பட்டுள்ளது.



## ஆன்டிபா

- "ஆன்டிபா" என்ற இடது சாரிக் குழுவை ஒரு தீவிரவாத அமைப்பாக அறிவிக்க இருப்பதாக அமெரிக்க நிர்வாகம் தெரிவித்துள்ளது.
- ஜார்ஜ் ப்ளாய்டு என்பவரின் இறப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட மிகப்பெரிய போராட்டங்களையடுத்து இந்த அறிவிப்பானது வெளியிடப்பட்டுள்ளது.

- ஆன்டிபா/பாசிச எதிர்ப்பு அமைப்பானது ஒரு ஒற்றை அமைப்பு அல்ல. ஆனால் இது போராட்டங்களின் போது நாசிகளுக்கு ஆதரவானவர்கள் மற்றும் வெள்ளை மேலாதிக்கம் கொண்டவர்கள் போன்றோரை தீவிரமாக எதிர்க்கும் மிகத் தீவிரமான இடதுசாரி அமைப்புகளை குறிக்கும் ஒரு தலைமை இயக்கமாகும்.

## C-TAP

- கோஸ்டா ரிக்கா மற்றும் உலக சுகாதார நிறுவனம் ஆகியவை இணைந்து C-TAP என்ற ஒரு கூறைத் தொடங்கியுள்ளன.
- "C-TAP" (COVID-19 Technology Access Pool) என்பது கோவிட்-19 என்பதற்கான ஒரு தொழில்நுட்ப அணுகல் கூறாகும்.
- "C-TAP" ஆனது உலகளாவியச் சமூகத்திற்கு தகவல், அறிவியல் சார்ந்த அறிவு மற்றும் அறிவுசார் சொத்துரிமைக்கான ஒரு தலைமை மையமாகச் செயல்பட இருக்கின்றது.

## UNSC அமைப்பின் நிரந்தரம் அல்லாத உறுப்பினர்

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது (UNSC - United Nations Security Council) தனது தேர்தலை 2020 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் நடத்த இருக்கின்றது.
- 2021 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையிலான பதவிக் காலத்திற்காக ஆசியா-பசிபிக் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் நாடுகளில் இந்தியா வெற்றி பெறும் என்று மிகவும் எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்தப் பகுதியிலிருந்து போட்டியிடும் ஒரே நாடு இந்தியா ஆகும். இந்தியாவின் பெயரானது ஆசியா-பசிபிக் குழுவில் உள்ள அனைத்து 55 உறுப்பு நாடுகளாலும் முன்மொழியப் பட்டுள்ளது.
- UNSC தேர்தல்கள் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அரங்கில் நடைபெறுகின்றது. ஐக்கிய நாடுகள் அமைப்பில் உறுப்பினராக உள்ள 193 நாடுகளும் இரகசிய வாக்கு முறையில் தங்களது வாக்கைச் செலுத்துகின்றன.
- பிராந்திய அடிப்படையில் நிரந்தரம் அல்லாத 10 உறுப்பு நாடுகளுக்கான இடங்கள் பின்வருமாறு பிரிக்கப் பட்டுள்ளன. அவையாவன
  - ஆப்பிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளுக்கு 5 இடங்கள்
  - இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியப் பகுதி நாடுகளுக்கு 2 இடங்கள்
  - மேற்கு ஐரோப்பா மற்றும் இதர நாடுகளுக்கு 2 இடங்கள்
  - கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு 1 இடம்

## WEF மாநாடு 2021

- உலகப் பொருளாதார மன்றமானது (WEF - World Economic Forum) தனது அடுத்த மாநாட்டை 2021 ஆம் ஆண்டில் டாவோஸில் "சிறந்த மீட்டமைப்பு" என்ற கருத்துருவுடன் நடத்த இருக்கின்றது.
- WEF ஆனது இந்த மாநாட்டை "தனித்துவமான ஒரு இரட்டை மாநாடு" என்று பெயரிட்டுள்ளது.
- WEF ஆனது 1971 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.

## உலகளாவிய நோய்த் தடுப்பு மருந்து மீதான மாநாடு

- ஐக்கிய இராஜ்ஜியம் தலைமையிலான உலகளாவிய நோய்த் தடுப்பு மருந்து மீதான மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ள இருக்கின்றது.
- 50 நாடுகள் கலந்து கொள்ளும் இந்த மாநாட்டில் இந்தியாவும் ஒன்றாகும்.
- இந்த மாநாடானது நோய்த் தடுப்பு மருந்துக் கூட்டமைப்பான "GAVI" என்ற அமைப்பிற்காக குறைந்தது 7.4 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு நிதியைத் திரட்டுவதற்காக நடத்தப் படுகின்றது.
- "GAVI" என்ற கூட்டமைப்பானது யுனிசெப், உலக சுகாதார நிறுவனம், பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை, உலக வங்கி, ஆராய்ச்சி நிறுவனங்கள், தடுப்பு மருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் இதர தனியார் நிறுவனப் பங்களிப்பாளர்கள் ஆகியோருடன் இணைந்து 2000 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

## UNSCல் இந்தியா

- இந்தியா 8வது முறையாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் (UNSC - United Nations Security Council) நிரந்தரமல்லாத உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- UNSCல் இந்தியாவின் அணுகுமுறையானது பிரதமர் மோடியால் கூறப்பட்டுள்ள "5S"ன் மூலம் வழிநடத்தப் படுகின்றது.
- சம்வாத் (உரையாடல்), சம்மான் (மரியாதை), சாந்தி (அமைதி), சம்ரிதி (செழிப்பு), சஹ்யோக் (ஒத்துழைப்பு) ஆகியவை இந்த "5S" ஆகும்.

## இயற்கைத் தன்மைக் குறியீடு

- ஆராய்ச்சி முடிவுகளின் மீது மேற்கொள்ளப்படும் புகழ்பெற்ற இயற்கைத் தன்மைக் குறியீட்டினால் 2019 – 20 ஆம் ஆண்டிற்காக வெளியிடப்பட்ட தகவலின் படி இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்களிடையே ஹைதராபாத் பல்கலைக் கழகமானது முதலிடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் இயற்கைத் தன்மைக் குறியீட்டில் பெய்ஜிங்கில் உள்ள சீன அறிவியல் நிறுவனம் முதலிடத்தில் உள்ளது.
- 2020 ஆம் ஆண்டு இயற்கைத் தன்மைக் குறியீட்டினால் சென்னையில் உள்ள எஸ்ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனமானது இந்தியாவில் உள்ள தனியார் பல்கலைக்கழகங்களிடையே முதலிடத்திலும் இந்தியப் பல்கலைக் கழகங்களிடையே 21வது இடத்திலும் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- "இயற்கைத் தன்மைக் குறியீடானது" இயற்கை மற்றும் இயற்பியல் அறிவியலில் உயர்தர ஆராய்ச்சியின் குறிகாட்டியாக விளங்குகின்றது.
- இயற்கைத் தன்மைக் குறியீட்டின் வருடாந்திர அட்டவணையானது உயர்தர ஆராய்ச்சியின் உயரிய முடிவுகளைக் கொண்ட நிறுவனங்களைப் பட்டியலாக வெளியிடுகின்றது.

## சீனா மீதான நாடாளுமன்றங்களுக்கிடையேயான கூட்டமைப்பு

- இதே வகையைச் சேர்ந்த ஒரு முதலாவது அமைப்பு இதுவாகும்.
- 8 மக்களாட்சி நாடுகளைக் கொண்ட ஒரு குழுவானது சீனா மீதான

நாடாளுமன்றங்களுக்கிடையேயான ஒரு கூட்டமைப்பைத் தொடங்கியுள்ளது.


- இந்தக் கூட்டமைப்பானது ஜப்பான், ஐக்கிய இராஜ்ஜியம், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, லித்துவேனியா, நார்வே, நெதர்லாந்து, மற்றும் அமெரிக்க ஆகிய நாடுகளால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இது சீனாவை நோக்கிய மக்களாட்சி நாடுகளின் அணுகுமுறை மீது சீர்திருத்தங்களை ஏற்படுத்தும் பல கட்சிகள் அடங்கிய சட்டமன்றங்களின் ஒரு சர்வதேசக் குழுவாகும்.
- சீன கம்யூனிசக் கட்சியின் தலைமையிலான சீனாவானது உலகிற்கு மிகப்பெரிய ஒரு சவாலை முன்னிறுத்துவதாக இந்தக் கூட்டமைப்பு நம்புகின்றது.

## ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 75வது அமர்வு

- கடந்த 75 ஆண்டுகளில் முதன்முறையாக 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நியூயார்க்கில் நடைபெற இருக்கும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் (UNGA - UN General Assembly) வருடாந்திரக் கூட்டத்திற்கு உலக நாடுகளின் தலைவர்கள் பயணம் செய்ய மாட்டார்கள்.
- இந்த ஆண்டில் (2020) UNGA ஆனது ஐக்கிய நாடுகள் உருவாக்கப்பட்டதின் 75 ஆண்டை அனுசரிக்கின்றது.
- UNGAன் தலைவர் நைஜீரியாவைச் சேர்ந்த டிஜானி முகம்மது பாண்டே ஆவார்.
- UNGAன் தலைவர் பதவியானது வருடாந்திர அடிப்படையில் UNGAல் இருக்கும் பிரதிநிதிகளால் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கப்படுகின்றது.
- இந்தச் சபையின் அமர்வானது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பரில் தொடங்குமாறு பட்டியலிடப் படுகின்றது.

## பூமியின் ஆழமான பகுதியில் சீனா

- சீனாவின் ஆளில்லா நீர்மூழ்கி அமைப்பானது உலகின் மிக ஆழமான பகுதியான மரியானா அகழிக்கு (10,907 மீட்டர்) சென்றுள்ளது.
- இது மேற்கு பசிபிக் பெருங்கடலில் உள்ள மரியானா தீவுகளின் கிழக்கில் அமைந்துள்ளது.
- சேலஞ்சர் ஆழப் பகுதியானது மரியானா அகழியில் அமைந்துள்ளது. மரியானா அகழியானது பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பிற்கு கீழ் 7 மைல்கள் ஆழத்தில் அமைந்துள்ளது.



## கொரியப் பிரச்சினை

- வட கொரிய நாடானது வடகொரியா-தென் கொரியா ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கிடையேயான நேரடித் தொடர்பு இணைப்பு (ஹாட்லைன்) உள்பட தென்கொரியாவுடனான அனைத்துத் தகவல் தொடர்புகளையும் துண்டித்துள்ளது.
- இது கொரியத் தீபகற்பத்தில் வட பகுதியில் அமைந்துள்ள கிழக்கு ஆசியாவில் உள்ள ஒரு நாடாகும்.
- இந்த நாடானது வடக்கில் அம்னோக் மற்றும் துமென் நதிகளுடன் சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளாலும், தெற்கில் மிகக் கடுமையான பாதுகாப்பு ஏற்படுத்தப் பட்டு இருக்கும் கொரியப் படைகள் விலக்கப்பட்ட எல்லை மண்டலத்துடன் (இரு நாடுகளையும் பிரிக்கும் பகுதி) தென் கொரியாவாலும் சூழப்பட்டுள்ளது.




## QS உலகப் பல்கலைக்கழகங்கள் தரவரிசை

- QS உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையின் 17வது பதிப்பானது வெளியிடப் பட்டு உள்ளது.
- இது குவாக்குரேலி சைமண்ட்ஸ் என்ற மையத்தினால் வருடாந்திரமாக வெளியிடப்படும் ஒரு பல்கலைக்கழகத் தரவரிசையாகும்.
- இதற்கு முன்பு, இது டைம்ஸ் உயர் கல்வி QS உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை என்றழைக்கப்பட்டது.
- சர்வதேசத் தரவரிசை வல்லுநர் குழுவின் ஒப்புதலைப் பெற்ற ஒரே சர்வதேசத் தரவரிசை இதுவாகும்.
- இது உலகில் முன்னணியில் உள்ள 1000 பல்கலைக்கழகங்களைத் தரவரிசைப் படுத்துகின்றது.
- இதில் முதல் 200 இடங்களில் இந்தியாவிலிருந்து 3 பல்கலைக்கழகங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. அவையாவன: மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் (172), பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனம் (185), தில்லியில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் (193) ஆகியன ஆகும்.
- மொத்தம், இந்தப் பட்டியலில் 21 இந்திய உயர் கல்வி நிறுவனங்கள் இடம் பிடித்து உள்ளன.

| QS World University Rankings 2021: Global Top 20 | | | |
|---|---|---|---|
| 2021 | 2020 | | |
| 1 | 1 | Massachusetts Institute of Technology | USA |
| 2 | 2 | Stanford University | USA |
| 3 | 3 | Harvard University | USA |
| 4 | 5 | California Institute of Technology | USA |
| 5 | 4 | University of Oxford | UK |
| 6 | 6 | ETH Zurich | Switzerland |
| 7 | 7 | University of Cambridge | UK |
| 8 | 9 | Imperial College London | UK |
| 9 | 10 | University of Chicago | USA |
| 10 | 8 | University College London | UK |
| 11 | 11= | National University of Singapore | Singapore |
| 12 | 13 | Princeton University | USA |
| 13 | 11= | Nanyang Technological University (NTU) | Singapore |
| 14 | 18= | Ecole Polytechnique Fédérale de Lausanne (EPFL) | Switzerland |
| 15 | 16 | Tsinghua University | China (Mainland) |
| 16 | 15 | University of Pennsylvania | USA |
| 17 | 17 | Yale University | USA |
| 18 | 14 | Cornell University | USA |
| 19 | 18= | Columbia University | USA |
| 20 | 20 | University of Edinburgh | UK |
| © QS Quacquarelli Symonds www.TopUniversities.com | | | |

## சர்வதேச மதச் சுதந்திர அறிக்கை (IRF) 2019

- சமீபத்தில், அமெரிக்க உள் துறையானது இந்த வருடாந்திர அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது உலகம் முழுவதும் மதச் சுதந்திரத்தின் நிலை குறித்து ஆய்வு செய்கின்றது.
- IRF (International Religious Freedom) அறிக்கையானது மதச் சுதந்திரத்தின் நேர்மறை வளர்ச்சிகள் மற்றும் எதிர்மறை உதாரணங்கள் குறித்து நாடுகளைப் பட்டியல் படுத்துகின்றது.
- நிகரகுவா, நைஜீரியா, சீனா ஆகியவை எதிர்மறை உதாரண நாடுகளாகக் குறிப்பிடப் பட்டுள்ளன.
- இந்தியாவில் மதம் சார்ந்த சுதந்திரத்தின் பிரச்சினைகள் குறித்து எடுத்துக் காட்டுவதற்காக இந்தியாவிற்கான ஓர் அறிக்கை என்ற அறிக்கையை இது வெளியிட்டுள்ளது.
- இதற்கு முன்பு, சர்வதேச மதச் சுதந்திரம் குறித்த அமெரிக்க ஆணையத்தின் ஒரு அறிக்கையானது இந்தியாவின் மதச் சுதந்திரத்தை "கவனத்தில் கொள்ள வேண்டிய நாடு" என்ற பிரிவில் மிகக் குறைந்த நிலையைக் கொண்டுள்ள ஒரு தரநிலைக்குக் கீழிறக்கியிருந்தது.
- இது நாட்டில் 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட விவகாரங்கள் குறித்து, அதாவது ஜம்மு காஷ்மீரின் நிலை, குடியுரிமைத் திருத்தச் சட்டம் மற்றும் தேசியக் குடிமக்கள் பதிவேடு போன்றவை குறித்து எடுத்துக் காட்டுகின்றது.

## ரமோன் மகசேசே விருது

- கோவிட்-19 காரணமாக இந்த விருதுகள் ரத்து செய்யப்படுவதாக ரமோன் மகசேசே விருதை வழங்கும் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த மணிலா அறக்கட்டளையானது அறிவித்துள்ளது.
- இந்த விருதானது ஆசியாவின் நோபல் பரிசாக கருதப்படுகிறது.
- இந்த விருது தங்கள் துறையில் தனித்துவத்தை அடைந்த நபர்கள் மற்றும் பிறருக்கு தாராளமாக உதவும் நபர்கள் ஆகியோரை அங்கீகரித்து அவர்களைக் கௌரவிக்கிறது.
- பத்திரிகை, அரசுச் சேவை, பொதுச் சேவை, இலக்கியம் மற்றும் புதுமையான தொடர்பு என ஐந்து பிரிவுகளில் இந்த விருது வழங்கப்படுகின்றது..
- மகசேசே 1953 ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸின் ஜனாதிபதியானார்.




## அமெரிக்கா மற்றும் ICC

- அமெரிக்க அதிபரான டொனால்டு டிரம்ப் ஒரு நிர்வாக ஆணையை வெளியிட்டு உள்ளார்.
- இது ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் போர்க் குற்றங்கள் நிகழ்த்தியனவா என்பது குறித்து விசாரணை நடத்தும் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு எதிராகத் தடை விதிக்கின்றது.
- ஆனால், அமெரிக்க அரசானது இந்த நீதிமன்றத்தின் ஓர் உறுப்பு நாடாக இல்லை.
- தி ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றமானது இனப் படுகொலை, போர்க் குற்றங்கள் மற்றும் மனித நேயத்திற்கு எதிரான போர்க் குற்றங்கள் ஆகியவற்றை விசாரிக்கும் ஒரு தலைமை அமைப்பாகும்.
- இது சர்வதேசச் சமூகத்திற்கு மிகவும் கடுமையான குற்றங்கள் இழைத்தவர்களுக்கு தண்டனைகளிலிருந்து விலக்கு அளிக்க உதவுவதைத் தடுப்பதற்காக அமைக்கப்பட்ட ஒரு முதலாவது நிரந்தரமான, ஒப்பந்தம் அடிப்படையிலான, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றமாகும்.
- இதன் நிறுவன ஒப்பந்தமான "ரோம் பிரகடனமானது" 2002 ஆம் ஆண்டு ஜூலை 01 அன்று நடைமுறைக்கு வந்தது.

## கத்தி சல்லீவன்

- சமீபத்தில் அமெரிக்க விண்வெளி வீராங்கனை மற்றும் கடல் ஆய்வு நிபுணரான கத்தி சல்லீவன் என்பவர் பெருங்கடலின் மிகவும் ஆழமான பகுதியான சேலஞ்சர் முனை ஆழப் பகுதியை அடைந்தார்.

- இதன் மூலம் புவியில் மிக ஆழமான பகுதியை அடைந்த முதலாவது பெண்மணியாக இவர் உருவெடுத்துள்ளார்.
- 1984 ஆம் ஆண்டில், இவர் தனது முதலாவது விண்வெளி நடைப் பயணத்தை மேற்கொண்டார். இவர் விண்வெளியில் நடந்த முதலாவது பெண்மணியாக அப்போது உருவெடுத்துள்ளார்.
- தற்பொழுது சேலஞ்சர் முனை ஆழப் பகுதியை அடைந்ததன் மூலம், விண்வெளியில் நடந்த முதலாவது பெண்மணி மற்றும் புவியில் ஆழமான பகுதியை அடைந்த முதலாவது பெண்மணி என்ற இரண்டு சாதனையையும் இவர் படைத்துள்ளார்.
- பெருங்கடலில் மிகவும் ஆழமான பகுதியை அடைந்த முதலாவது பெண்மணியாகவும் இவர் உருவெடுத்துள்ளார்.
- சேலஞ்சர் முனை ஆழப் பகுதியானது மரியானா ஆழியின் தெற்குப் பகுதியில் மேற்கு பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ளது.
- இது மைக்ரோனேசியக் கூட்டாட்சி நாடுகளின் பெருங்கடல் பகுதியில் அமைந்து உள்ளது.



## கல்வான் பள்ளத்தாக்கு

- லடாக்கில் உள்ள கல்வான் பள்ளத்தாக்கில் சீனா மற்றும் இந்தியாவிற்கு இடையே சிறிய அளவிலான ஒரு மோதல் ஏற்பட்டது.
- 1975 ஆம் ஆண்டிற்குப் பிறகு தற்பொழுது எல்லைப் பகுதியில் இந்தியா மற்றும் சீனாவிற்கு இடையே முன்னெப்போதும் இல்லாத வகையிலான ஒரு மோதல் ஏற்படுவது இதுவே முதல்முறையாகும்.


## அமெரிக்காவில் காவல்துறைச் சீர்திருத்தங்கள்

- அமெரிக்க அதிபரான டொனால்டு டிரம்ப் காவல்துறைச் சீர்திருத்தங்களுக்காக வேண்டி ஒரு புதிய நிர்வாக ஆணையில் கையெழுத்திட்டுள்ளார்.
- இந்தப் புதிய ஆணையானது காவல்துறை அதிகாரிகளால் ஆப்பிரிக்க-அமெரிக்க மற்றும் இதர சமூகத்தினரை நடத்தப்படும் முறையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நேபாள எல்லைப் பிரச்சினை

- சமீபத்தில் நேபாள நாட்டின் பாராளுமன்றமானது தனது அரசியல் வரைபடத்தை திருத்துவதற்காக வேண்டி ஒரு திருத்த மசோதாவை நிறைவேற்றியுள்ளது.

- இந்தப் புதிய வரைபடமானது இந்தியாவினால் உரிமை கோரப்பட்டு வரும் காலாபாணி, லிபுலேக் மற்றும் லிம்பியதுரா ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.




## உலகப் போட்டிக் குறியீடு

- சமீபத்தில் மேலாண்மை வளர்ச்சி மையமானது இந்தக் குறியீட்டை வெளியிட்டு உள்ளது.
- இதில் இந்தியா 43வது இடத்தில் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.
- இந்தக் குறியீட்டில் சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது.
- இந்தத் தரவரிசையானது சிங்கப்பூர் மற்றும் சுவிட்சர்லாந்தில் உள்ள வணிகப் பள்ளியினால் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

## வெற்றி தின அணிவகுப்பு

- இந்தியா தனது தரைப்படை, கடற்படை, விமானப் படை என்று ராணுவத்தின் முப்படைப் பிரிவுகளையும் ரஷ்யாவிற்கு அனுப்ப இருக்கின்றது.
- இந்தியாவின் முப்படைகளும் இதில் பங்கேற்பது இதுவே முதல்முறையாகும்.
- இரஷ்யாவின் ராணுவ அணிவகுப்பானது ரஷ்ய அதிபரை சிறப்பு விருந்தினராகக் கொண்டு மாஸ்கோவின் சிவப்புச் சதுக்கத்தில் நடத்தப் பெறுகின்றது.
- ஒவ்வொரு ஆண்டும் வெற்றி தினமானது மே 09 அன்று கொண்டாடப்படுகின்றது.
- 1945 ஆம் ஆண்டில் நாசி ஜெர்மனி சரணடைந்ததைக் குறிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் இந்த அணிவகுப்பானது நடத்தப்படுகின்றது.



## பசுபதிநாத் கோயில்

- பசுபதிநாத் கோயில் வளாகத்தின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியாவும் நேபாளமும் கையெழுத்திட்டுள்ளன.
- பசுபதிநாத் கோயில் நேபாளத்தின் மிகப்பெரிய ஒரு கோயில் வளாகமாகும்.
- இது நேபாளத்தின் பாகமதி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது.



## உலக முதலீட்டு அறிக்கை 2020

- வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான ஐக்கிய நாடுகளின் மாநாடு தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- அந்த அறிக்கையின் படி, இந்தியா 2019 ஆம் ஆண்டில் அந்நிய நேரடி முதலீட்டை அதிக அளவில் பெற்ற 9வது பெரிய நாடாகும்.
- இந்தியாவின் அந்நிய நேரடி முதலீடானது 2018 ஆம் ஆண்டில் 42 பில்லியன் அமெரிக்க டாலர்களிலிருந்து 2019 ஆம் ஆண்டில் 51 மில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்ந்துள்ளது.




## GPAI (Global Partnership of Artificial Intelligence)

- செயற்கை நுண்ணறிவின் மீதான உலகளாவியக் கூட்டாண்மை நிறுவனத்தில் இந்தியா இணைந்துள்ளது.
- செயற்கை நுண்ணறிவு தொடர்பான GPAI - உலகளாவியக் கூட்டு என்பது செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சிக்கு வழிகாட்டும் பல பங்குதாரர்களின் ஒரு முன்முயற்சி ஆகும்.
- இந்தியாவுடன் இதில் இணைந்த மற்ற முன்னணி உறுப்பு நாடுகள் இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், கனடா, ஜெர்மனி, மெக்ஸிகோ, இத்தாலி, கொரியக் குடியரசு, சிங்கப்பூர், நியூசிலாந்து போன்றவை ஆகும்.
- இதுவே இம்மாதிரியான முதல் முயற்சியாகும்.
- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் பாரீஸில் உள்ள ஒரு செயலகம் வழியாக இந்த முயற்சி ஆதரிக்கப் படும்.

## சிப்ரி (ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம்) ஆண்டுப் புத்தகம் 2020

- ஸ்வீடனின் சிந்தனைக் குழுவான சிப்ரி ஆனது சமீபத்தில் இதை வெளியிட்டு உள்ளது.
- இந்த ஆண்டின் புத்தகத்தின் படி, (2019 உடன் ஒப்பிடும்போது) இந்தியாவும் சீனாவும் தங்கள் அணு ஆயுதக் கிடங்குகளை விரிவுபடுத்தியுள்ளன.
- சீனா முதன்முறையாக அணு ஆயுதங்களை தனது முப்படைக்கும் ஏற்றவாறு உருவாக்கி வருவதாக அந்த சிந்தனைக் குழு கூறுகிறது.
- இந்தியாவும் தனது கடற்படைக் கூறுகளுக்கும் ஏற்ற வகையில் அணு ஆயுதங்களை உருவாக்கி வருகிறது.
- சிப்ரியின் படி, உலகின் ஒன்பது பெரிய அணு ஆயுத நாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், இந்தியா, பாகிஸ்தான், சீனா, வட கொரியா மற்றும் இஸ்ரேல் ஆகியவை அடங்கும்.
- அமெரிக்கா மற்றும் ரஷ்யா மட்டுமே உலக அணு ஆயுதங்களில் 90 சதவீதத்தை வைத்திருக்கின்றன.
- 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 13,400 அணு ஆயுதங்கள் இருந்தன.
- 2019 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 13,865 அணு ஆயுதங்கள் இருந்தன.
- அமெரிக்கா மற்றும் ரஷ்யா 2010 ஆம் ஆண்டின் புதிய மூலோபாய ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தின் (New START - New Strategic Arms Reduction Treaty) கீழ் தங்கள் அணு ஆயுதங்களை குறைத்துள்ளன.
- இந்தியாவின் அணு ஆயுதங்கள் 2019 ஆம் ஆண்டில் 130 -140 என்ற அளவிலிருந்து 2020 ஆம் ஆண்டில் 150 ஆக உயர்ந்துள்ளன.
- சீனாவின் அணு ஆயுதங்கள் 2019 ல் ஆம் ஆண்டில் 290 போராயுதங்களிலிருந்து 2020 ஆம் ஆண்டில் 320 ஆக உயர்ந்துள்ளன.
- பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் 2020 ஆம் ஆண்டில் 160 என்ற அளவை எட்டி உள்ளது.

### World nuclear forces, January 2020

| Country | Deployed warheads* | Other warheads** | Total 2020 | Total 2019 |
|---|---|---|---|---|
| USA | 1 750 | 4 050 | 5 800 | 6 185 |
| Russia | 1 570 | 4 805 | 6 375 | 6 500 |
| UK*** | 120 | 95 | 215 | 200 |
| France | 280 | 10 | 290 | 300 |
| China | | 320 | 320 | 290 |
| India | | 150 | 150 | 130–140 |
| Pakistan | | 160 | 160 | 150–160 |
| Israel | | 90 | 90 | 80–90 |
| North Korea | .. | (30–40) | (30–40) | (20–30) |
| Total | 3 720 | 9 680 | 13 400 | 13 865 |

## எல்லைப் படைவீரர்களின் சந்திப்புப் புள்ளிகள்

- சர்ச்சைக்குரிய சீன-இந்திய எல்லையில் உள்ள இடங்கள் இவை ஆகும்.
- முதலாவது முறையான எல்லைப் படைவீரர் சந்திப்புப் புள்ளியானது 2013 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இதுவரை ஐந்து சந்திப்புப் புள்ளிகள் உள்ளன. அவற்றில் லடாக் இந்திய ஒன்றிய பிரதேசத்தில் இரண்டும், சிக்கிமில் ஒன்றும், அருணாச்சலப் பிரதேசத்தில் இரண்டும் உள்ளன.
- அவை பின்வருமாறு,
    - தௌலத் பெக் ஓல்டி - லடாக்
    - சுசுல் - லடாக்
    - நாதுலா - சிக்கிம்
    - பம் லா - அருணாச்சலப் பிரதேசம்
    - கிபித்து - அருணாச்சலப் பிரதேசம்

## ஜின்ஜியாங் பகுதி

- அமெரிக்க அதிபரான டொனால்டு டிரம்ப் ஜின்ஜியாங் பகுதியில் சீனாவின் உய்குர் முஸ்லீம்கள் ஒடுக்கப் படுவதற்கான நடவடிக்கைகள் மீது தடைகள் விதிக்கும் ஒரு சட்டத்தில் கையெழுத்திட்டுள்ளார்.
- உய்குர் முஸ்லீம் சீனாவின் வடமேற்கு ஜின்ஜியாங் மாகாணத்தில் வசிக்கும் ஒரு சிறுபான்மையின முஸ்லீம் சமூகமாகும்.
- ஜின்ஜியாங் என்பது சீனாவிற்குள் இருக்கும் சீனாவின் மிகப்பெரிய ஒரு தனிச் சுதந்திரப் பகுதியாகும்.
- இது கனிம வளம் நிறைந்து காணப்படுகின்றது. இது இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, மற்றும் ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட 8 நாடுகளுடன் அதன் எல்லையைப் பகிர்ந்து கொண்டுள்ளது.



## ஆசிய வளர்ச்சிக் கண்ணோட்டம் (ADO)

- இது ஆசிய வளர்ச்சி வங்கியால் (ADB) வெளியிடப்படும் ஒரு அறிக்கையாகும்.
- ADO (Asian Development Outlook) ஆனது ஆசியாவில் உள்ள வளர்ந்து வரும் நாடுகளில் நிலவும் பொருளாதார மற்றும் வளர்ச்சி சார்ந்த பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்கின்றது.
- ADB (Asian Development Bank) என்பது 1966 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஒரு பிராந்திய வளர்ச்சி வங்கியாகும்.
- இதன் தலைமையகம் பிலிப்பைன்ஸின் மணிலாவில் உள்ளது.
- இதில் ஜப்பான் அதிகளவிலான பங்கினையும், அதற்கு அடுத்தபடியாக அமெரிக்கா அதிக அளவிலான பங்கையும் வைத்துள்ளது.
- இது ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியங்கள் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியா இதன் நிறுவன உறுப்பினராக உள்ளது.

## UNSCற்கான தேர்தல்

- சமீபத்தில் இந்தியா, நார்வே, அயர்லாந்து, மெக்சிகோ மற்றும் கென்யா ஆகிய நாடுகள் 2021 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியிலிருந்து அடுத்த 2 ஆண்டு காலத்திற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தரமல்லாத உறுப்பு நாடுகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.
- ஒவ்வொரு ஆண்டும், பொதுச் சபையானது 2 ஆண்டு காலத்திற்கு 5 நிரந்தரமல்லாத உறுப்பு நாடுகளை (மொத்தம் 10 நாடுகளில்) தேர்ந்தெடுக்கின்றது.
- இதற்கு முன்பு இந்தியா, 1950-51, 1967-68, 1972-73, 1977-78, 1984-85, 1991-92 ஆகிய காலக்கட்டங்களிலும் சமீபத்தில் 2011-12 ஆகிய ஆண்டுகளிலும் இதில் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் பட்டது.
- இந்த ஆணையத்தின் தலைமையானது உறுப்பு நாடுகளின் பெயர்களில் ஆங்கில எழுத்தின் அகரவரிசைப் படி ஒவ்வொரு மாதத்திற்கும் சுழற்சி முறையில் உறுப்பு நாடுகளால் வகிக்கப் படுகின்றது.
- இந்தியாவானது இந்த ஆணையத்தின் சுழற்சி முறை தலைமைப் பதவியினை 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஏற்க இருக்கின்றது.

## போர்ப்ஸ் நிகழ்நேர செல்வந்தர்கள் பட்டியல்

- உலகின் முன்னணியில் உள்ள 10 செல்வம் மிக்கவர்களைக் கொண்ட ஒரு பிரத்தியேகக் குழுவில் முகேஷ் அம்பானி இடம் பிடித்துள்ளார்.
- 64.5 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடன், இவர் உலகின் முன்னணியில் உள்ள செல்வந்தர்களில் 9வது இடத்தில் உள்ளார்.
- ரிலையன்ஸ் தொழிற்துறை நிறுவனத்தில் அம்பானி 42% பங்கைக் கொண்டுள்ளார். சமீபத்தில் இந்த நிறுவனம் நிகரக் கடனற்ற நிறுவனமாகத் தன்னை அறிவித்துக் கொண்டது.

### World's Top 10 Richest People

| Rank | Name/ Country | Net Worth (In Billions) | Company |
|---|---|---|---|
| **1** | Jeff Bezos | USD 160.1 | Amazon |
| **2** | Bill Gates | USD 108.7 | Microsoft |
| **3** | Bernard Arnault & family | USD 103.2 | LVMH |
| **4** | Mark Zuckerberg | USD 87.9 | Facebook |
| **5** | Warren Buffet | USD 71.4 | Berkshire Hathaway |
| **6** | Steve Ballmer | USD 68.9 | Microsoft |
| **7** | Larry Ellison | USD 68.9 | Oracle |
| **8** | Amancio Ortega | USD 65.8 | Zara |
| **9** | **Mukesh Ambani** | **USD 64.6** | **Reliance Industries** |
| **10** | Larry Page | USD 64.3 | Google |

## UNGAவின் தலைவர்

- ஐக்கிய நாடுகள் பொதுப் சபையானது (United Nations General Assembly) அதன் முதலாவது துருக்கியத் தலைவரைப் பெற்றுள்ளது.
- துருக்கியத் தூதரக அதிகாரியான வோல்கன் போஸ்கிர் என்பவர் வரவிருக்கும் UNGAவின் 75வது அமர்வின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

## 2020 இந்தியக் கருத்துகள் மாநாடு

- அமெரிக்க - இந்திய வர்த்தக ஆணையத்தின் (USIBC - United States India Business Council) 45வது வருடாந்திரச் சந்திப்பானது 2020 இந்தியக் கருத்துகள் சந்திப்புடன் சேர்த்து நடத்தப்பட உள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும் இந்த மாநாடானது USIBCயினால் நடத்தப்படுகின்றது.

## GAFA வரி

- டிஜிட்டர் நிறுவனங்களுக்கான உலகளாவிய வரி முறைக்கான தீர்வை நோக்கமாகக் கொண்ட பேச்சு வார்த்தையிலிருந்து அமெரிக்கா வெளியேறியுள்ளது.
- அமெரிக்க நிறுவனங்களுக்கு எதிராக பாகுபாடு காட்டப் படும் நடவடிக்கை என்று இதை அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.
- பிரான்ஸ், ஐக்கியப் பேரரசு, ஸ்பெயின், இத்தாலி மற்றும் இதர நாடுகள் ஆகியவை மிகப்பெரிய டிஜிட்டல் நிறுவனங்களின் மீது வரிகளை விதித்துள்ளன.
- GAFA வரியானது கூகுள், ஆப்பிள், முகநூல், அமேசான் ஆகிய நிறுவனங்களை அடுத்து இந்தப் பெயர் (Google, Apple, Facebook, Amazon – GAFA) வைக்கப் பட்டுள்ளது.

- இது மிகப்பெரிய தொழில்நுட்பம் மற்றும் இணையதள நிறுவனங்களின் மீது விதிக்கப்படும் வகையில் பரிந்துரைக்கப்பட்ட ஒரு டிஜிட்டல் வரியாகும்.




## தேசியப் பாதுகாப்பு முகமை

- சீனாவானது ஹாங்காங்கில் "சிறப்பு முகமை - தேசியப் பாதுகாப்பு அலுவலகம்" ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்துள்ளது.
- இது குற்றவியல் வழக்குகளைக் கையாளும் உரிமை மற்றும் தேசியப் பாதுகாப்பு தொடர்பான புலனாய்வு ஆய்வு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- ஆங்கிலேயரால் சீனாவிற்கு வழங்கப்பட்ட முந்தையக் காலனியான ஹாங்காங் ஆனது 1997 ஆம் ஆண்டு முதல் சீனாவின் சிறப்பு நிர்வாகப் பகுதியாக இருந்து வருகின்றது.
- ஹாங்காங்கின் வெளியுறத் துறை விவகாரங்கள் மற்றும் பாதுகாப்புத் துறை ஆகியவை மட்டுமே சீனாவினால் கட்டுப்படுத்தப் படுகின்றன.

## சட்டத்தின் ஆட்சிக் குறியீடு

- இது அமெரிக்காவில் உள்ள ஒரு தனிச் சுதந்திர அமைப்பான "உலக நீதித் திட்டத்தினால்" வெளியிடப் பட்டுள்ளது.
- தற்பொழுதைய நிலையில் இதில் மொத்தமுள்ள 128 நாடுகளில் இந்தியா 68வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்படுள்ளது.

## EAG சந்திப்பு

- நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவின் (FATF - Financial Action Task Force) தலைமையில் நடைபெற்ற நிதி மோசடி மற்றும் தீவிரவாத நிதித் தடுப்பு குறித்த 32வது சிறப்பு யுரேசியக் குழுவின் (EAG - Eurasian Group) முழுமையான காணொளி அமர்வில் இந்தியா பங்கேற்றுள்ளது.
- EAG என்பது இந்தியா, ரஷ்யா, சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகளைக் கொண்ட ஒரு பிராந்திய அமைப்பாகும்.
- 2004 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இது FATFன் இணை உறுப்பினராக உள்ளது.

## அமெரிக்காவின் கருவூலப் பங்குகள்

- இந்தியாவானது அமெரிக்க அரசின் கருவூலப் பங்குகளைப் வைத்துள்ள 12வது (157.4 பில்லியன் அமெரிக்க டாலர்) மிகப்பெரிய நாடாக உருவெடுத்துள்ளது.

- இந்திய அரசின் சார்பாக இந்தியாவின் மத்திய வங்கியான இந்திய ரிசர்வ் வங்கியானது அயல்நாட்டுச் சொத்துகளில் முதலீடு செய்துள்ளது.
- அமெரிக்கக் கருவூலத் துறையிடம் உள்ள கருவூலப் பங்குகள் ஆனது உலகம் முழுவதும் இருக்கும் எந்தவொரு மத்திய வங்கிகளுக்கும் பாதுகாப்பான சொத்துகளில் ஒன்றாக விளங்குகின்றது.
- இதில் முதலில் உள்ள 3 நாடுகள் (2020 ஆம் ஆண்டு ஏப்ரல் இறுதி வரை)
  - ஜப்பான் – 1.266 டிரில்லியன் அமெரிக்க டாலர்
  - சீனா – 1.073 டிரில்லியன் அமெரிக்க டாலர்
  - ஐக்கிய இராஜ்ஜியம் – 368.5 பில்லியன் அமெரிக்க டாலர்

## சீனா மற்றும் ஜப்பான் இடையேயான தீவு விவகாரம்

- தென் சீனக் கடற்பகுதியில் அமைந்துள்ள, மனிதர்கள் யாரும் வாழாத ஒரு தீவுக் கூட்டமானது 1972 ஆம் ஆண்டு முதல் ஜப்பான் மற்றும் சீனாவிற்கிடையே பிரச்சினைக்குரியதாக இருந்து வருகின்றது.
- ஜப்பானில் இந்தத் தீவானது சென்காகுஸ் என்றறியப் படுகின்றது. இந்தத் தீவுகள் சீன மக்கள் குடியரசு மற்றும் தைவானில் "டையாயூ" என்ற பெயரில் குறிப்பிடப் படுகின்றது.
- சென்காகு தீவுகளானது ஜப்பான், சீன மக்கள் குடியரசு மற்றும் சீனக் குடியரசு (தைவான்) ஆகியவற்றிற்கிடையே கிழக்கு சீனக் கடற் பகுதியில் அமைந்துள்ளது.
- சென்காகு தீவுகள் அமைந்துள்ள முழுப் பகுதியும் ஜப்பானில் "டோனோஷிரோ" என்ற பெயரில் குறிப்பிடப் படுகின்றது.
- டோனோஷிரோ பகுதியானது ஜப்பானின் புதிய சட்டத்தின் படி டோனோஷிரோ சென்காகு என்று மறுபெயரிடப்பட உள்ளது.




## ஆயுத வர்த்தக ஒப்பந்தம்

- சீன மக்கள் குடியரசானது பன்னாட்டு ஒப்பந்தமான ஆயுத வர்த்தக ஒப்பந்தத்தில் இணைய இருக்கின்றது.
- உலகில் 5வது மிகப்பெரிய ஆயுத ஏற்றுமதியாளர் நாடு சீனா ஆகும்.

- இந்த ஒப்பந்தத்தின் கீழ், வழக்கமான ஆயுதங்களின் சர்வதேச விற்பனை மற்றும் பரிமாற்றம் ஆகியவை உலகளாவிய தரத்தின் படி ஒழுங்குபடுத்தப் படுகின்றன.
- இந்த ஒப்பந்தமானது 2013 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இது 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது.
- இந்தியா இதுவரை இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை.
- ஆயுத வர்த்தக ஒப்பந்தத்திற்கு அமெரிக்கா ஒப்புதல் அளிக்காது என்று அந்நாடு அறிவித்துள்ளது.

## பாகிஸ்தானின் இந்துக் கோயில்


- கிருஷ்ணர் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட முதலாவது இந்துக் கோவிலுக்கான அடிக்கல் நாட்டு விழாவானது பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்தில் நடத்தப் பட்டது.
- பாகிஸ்தான் விடுதலை பெற்றதிலிருந்து இஸ்லாமாபாத்தில் கட்டப்படும் முதலாவது இந்துக் கோவில் இதுவாகும்.
- இந்தக் கோவிலின் பெயர் ஸ்ரீ கிருஷ்ணா மந்திர் என்பதாகும்.

## வியன்னா ஒப்பந்தம்

- இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய உயர் ஆணையக அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையை 50% ஆகக் குறைக்க மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.
- மேலும் இந்தியா புதுதில்லியில் உள்ள இந்தியாவிற்கான பாகிஸ்தான் உயர் ஆணையக அலுவலகத்தில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கையையும் 50% ஆகக் குறைக்க வலியுறுத்தியுள்ளது.
- வியன்னா ஒப்பந்தத்தை பாகிஸ்தான் மீறியதைத் தொடர்ந்து இந்தியா இந்நடவடிக்கையை எடுத்துள்ளது.

## இந்தியாவிற்கு வெளியே உள்ள உலகின் முதலாவது யோகாப் பல்கலைக் கழகம்

- இது அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் தொடங்கப்பட்டுள்ளது.
- சுவாமி விவேகானந்தரின் நினைவாக இந்தப் பல்கலைக்கழகத்திற்கு இவரது பெயர் இடப்பட்டுள்ளது.



- இது 6வது சர்வதேச யோகா தின அனுசரிப்பின் ஒரு பகுதியாகத் தொடங்கப் பட்டுள்ளது.

## உலகளாவியக் கல்விக் கண்காணிப்பு அறிக்கை

- இது யுனெஸ்கோவினால் வெளியிடப்பட்டுள்ள ஆதாரத்தின் அடிப்படையிலான ஒரு வருடாந்திர அறிக்கையாகும்.
- இது புதிய நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் கட்டமைப்பில் கல்வி சார்ந்த இலக்குகளை நோக்கிய ஒரு கண்காணிப்புச் செயல்முறைப் பணியை மேற்கொள்ள வேண்டி பணியமர்த்தப் பட்டிருக்கின்றது.
- இது கல்வி குறித்த உலகச் சமத்துவமின்மை தரவுத் தளத்தையும் உருவாக்கி உள்ளது.

## FATF-ன் சாம்பல் நிறப் பட்டியல் - பாகிஸ்தான்

- பாகிஸ்தான் தற்பொழுது மீண்டும் கருப்புப் பட்டியலில் நுழைவதிலிருந்து தப்பித்து உள்ளது.
- FATF-ல் சீனா தலைமையேற்றதின் மூலம் இந்நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.
- நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவின் (FATF - Financial Action Task Force) முழுமையான மற்றும் பணிக் குழுச் சந்திப்பின் போது இம்முடிவானது எடுக்கப் பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதி முதல் 2020 ஆம் ஆண்டு ஜுன் 30 வரை FATF-ன் தலைவராக சீனா உள்ளது.
- 2020 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியிலிருந்து FATFன் தலைமைப் பதவியை ஜெர்மனி கைப்பற்ற இருக்கின்றது. இது 2021 ஆம் ஆண்டு ஜுன் 30 வரை அதன் தலைவராக இருக்கும்.

## நாசிசத்திற்கு எதிரான வெற்றி

- இந்திய ஆயுதப் படைகளின் முப்படைப் பிரிவானது மாஸ்கோவின் சிவப்புச் சதுக்கத்தில் நடைபெற்ற இரஷ்ய தின அணிவகுப்பில் பங்கேற்றுள்ளது.
- இந்த ஆண்டானது 2வது உலகப் போரின் போது 1945 ஆம் ஆண்டில் நாசி ஜெர்மனிக்கு எதிராக பெற்ற வெற்றியின் 75வது ஆண்டு தினத்தைக் குறிக்கின்றது.
- இத்தின அணிவகுப்பில் நேரடியாகக் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களில் இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங்கும் ஒருவராவார்.
- இந்தியா முதன்முறையாக 2015 ஆம் ஆண்டில் ரஷ்யா அணிவகுப்பில் கலந்து கொண்டது.
- ஆனால் அப்பொழுது இந்த அணிவகுப்பில் இந்தியத் தரைப்படை இராணுவம் மட்டுமே கலந்து கொண்டது.

## சரிபார்க்கப்பட்டது எனும் முயற்சி


- ஐக்கிய நாடுகள் சபையால் தொடங்கப்பட்ட "சரிபார்க்கப்பட்டது" எனும் முயற்சிக்கு (Verified initiative) மற்ற 12 நாடுகளுடன் சேர்ந்து இந்தியாவும் இணைகிறது.
- இது கோவிட்-19 பற்றிய தவறான தகவல்களைப் பரப்புவதை, உண்மை அடிப்படையிலான துல்லியமான தகவல்களுடன் எதிர்த்துப் போராடுகிறது.

- "சரிபார்க்கப்பட்டது" என்ற முயற்சியின் கருப்பொருளானது அறிவியல், ஒற்றுமை மற்றும் தீர்வு என்பதாகும்.




## உலகளாவியப் போக்குகள் – 2019 ஆம் ஆண்டில் கட்டாய இடப்பெயர்வு

- இது ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஆணையரால் வெளியிடப்பட்ட ஓர் ஆண்டு அறிக்கையாகும்.
- இதன்படி 2019 ஆம் ஆண்டின் இறுதியில் உலகளவில் இடப்பெயர்ச்சியின் எண்ணிக்கை 79.5 மில்லியன் என்பதாகும் அல்லது ஒவ்வொரு 97 பேரில் ஒருவர் இடம் பெயர்கிறார் என்பதாகும்.
- சிரியா, வெனிசுலா, ஆப்கானிஸ்தான், தெற்கு சூடான் மற்றும் மியான்மர் ஆகிய ஐந்து நாடுகளில் மூன்றில் இரண்டு பங்கு இடப்பெயர்ச்சியானது (68%) நடந்துள்ளது.




## குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதற்கான உலகளாவிய நிலை அறிக்கை 2020

- இது ஐக்கிய நாடுகள் சபையின் தன்னாளவிலான இது போன்ற முதல் அறிக்கையாகும்.
- இந்த அறிக்கையின்படி, 1 பில்லியன் குழந்தைகள் வரை உடல், பாலியல் அல்லது உளவியல் வன்முறைகளால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- இந்த அறிக்கை கீழ்க்கண்டவர்களால் துவங்கப் பட்டுள்ளது,
    - உலக சுகாதார அமைப்பு
    - ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம்

- ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் மற்றும்
- குழந்தைகளுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலாளரின் சிறப்புப் பிரதிநிதி.

## உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம்

- 2020 ஆம் ஆண்டில் இந்தியப் பொருளாதாரமானது 4.5% அளவில் ஒரு மிகப் பெரிய சரிவினைக் கொண்டிருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது.
- இது உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் கீழ் "மற்றதைப் போன்றல்லாத ஒரு நெருக்கடி, ஒரு நிச்சயமற்ற மீட்பு" என்ற அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

## தங்கத்தைப் பண மதிப்பு அடிப்படையாகக் கொண்ட உலகின் முதல் அமெரிக்க தங்க டிஜிட்டல் நாணயம்

- இது இந்தியா, வளைகுடா ஒத்துழைப்பு மன்றம், மத்தியக் கிழக்கு மற்றும் ஆப்பிரிக்காவில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.
- இது ஐபிஎம்சி நிதியியல் வல்லுநர்கள் குழுவால் அமெரிக்க தங்க நாணய நிறுவனம் மற்றும் பிளாக்ஃபில்ஸ் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து கொண்டு வரப்பட்டு உள்ளது.

## 2020 ஆம் ஆண்டின் தொழில்நுட்ப முன்னோடிகளின் பட்டியல்

- இந்தப் பட்டியலில் இரண்டு இந்தியத் தொடக்க நிறுவனங்களான ஸ்டெல்லாப்ஸ் மற்றும் ஜெஸ்ட்மோனி ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- இதை உலகப் பொருளாதார மன்றம் வெளியிட்டுள்ளது.




## ஐக்கிய நாடுகள் சாசனக் கையொப்பத்தின் 75வது நினைவு தினம்

- இது குறித்த சாசனமானது 1945 ஆம் ஆண்டு ஜூன் 26 அன்று சான் பிரான்சிஸ்கோவில் கையெழுத்திடப் பட்டது. இது 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 24 அன்று நடைமுறைக்கு வந்தது.
- இது ஐக்கிய நாடுகளின் ஒரு அடிப்படையான நிறுவன ஒப்பந்தமாகும்.

## மிகப்பெரும் எத்தியோப்பிய மறுமலர்ச்சி அணை

- ❖ மிகப்பெரும் எத்தியோப்பிய மறுமலர்ச்சி அணை குறித்த ஒருமித்த கருத்தானது எத்தியோப்பியா, சூடான், எகிப்து ஆகிய 3 நாடுகளுக்கிடையே ஏற்பட்டுள்ளது.
- ❖ இந்த அணையில் நீரை எத்தியோப்பியாவினால் தன்னிச்சையாக நிரப்ப முடியாது.
- ❖ எத்தியோப்பியா நீல நைல் நதியின் மீது அணையைக் கட்டத் தொடங்கியுள்ளது.
- ❖ நீல நைல் நதியானது எத்தியோப்பியாவில் டானா ஏரியில் உற்பத்தியாகி, சூடான் வழியாக கீழ் நோக்கிப் பாய்ந்து எகிப்தை அடைகின்றது.



## கோஹாலா நீர் மின் திட்டம்

- ❖ ஒரு முத்தரப்பு மின் கொள்முதல் ஒப்பந்தமானது கோஹாலா நீர்மின் திட்டத்தின் கட்டுமானத்திற்காக கையொப்பமிடப் பட்டுள்ளது.
- ❖ இது பாகிஸ்தான் அரசு, சீன நிறுவனமான 3 கோர்ஜஸ் சீனக் கழகம் மற்றும் ஆசாத் காஷ்மீர் அரசு (பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் ஒரு பகுதி) ஆகியவற்றிற்கு இடையே கையெழுத்தாகியுள்ளது.
- ❖ இந்தத் திட்டம் ஜீலம் நதியின் மீது அமைந்துள்ளது.
- ❖ இந்தத் திட்டமானது சீனா-பாகிஸ்தான் பொருளாதாரப் பெருவழிப் பாதையின் ஒரு பகுதியாக உள்ளது.


# பொருளாதாரச் செய்திகள்

## 8 முக்கியமான தொழிற்துறைகள்

- ❖ பொது முடக்கமானது முக்கியமான 8 தொழிற்துறைகளின் உற்பத்தித் திறனை முந்தைய ஆண்டில் இதே மாதத்துடன் (ஏப்ரல், 2019) ஒப்பிடும்போது 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 38% என்ற அளவில் சுருக்கியுள்ளது.
- ❖ 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இது 9% என்ற அளவில் வீழ்ச்சியடைந்ததற்குப் பின்பு, முக்கிய 8 தொழிற்துறைகளில் வீழ்ச்சி ஏற்படும் இரண்டாவது தொடர்ச்சியான மாதம் இதுவாகும்.
- ❖ முக்கியமான 8 தொழிற்துறைகளானது தொழிற்துறை உற்பத்திக் குறியீட்டில் 40.27% என்ற உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது.

## காரிப் பருவகாலப் பயிர்களுக்கான MSP

- 14 காரீப் பருவகாலப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையின் (MSP - Minimum Support Price) அதிகரிப்பிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- வேளாண் கொள்முதல் விலை மற்றும் செலவுகளுக்கான ஆணையத்தின் (CACP - Commission for Agricultural Costs and Prices) பரிந்துரையின் அடிப்படையில் MSP அதிகரிக்கப் பட்டுள்ளது.


The Fluctuation
MSP FOR KHARIF CROPS

| CROPS | 2019-20 | PROPOSED FOR 2020-21 |
|---|---|---|
| Paddy (Common) | 1815 | 1868 |
| Paddy (Grade A) | 1835 | 1888 |
| Bajra | 2000 | 2150 |
| Maize | 1760 | 1850 |
| Tur | 5800 | 6000 |
| Urad | 5700 | 6000 |
| Moong | 7050 | 7196 |
| Groundnut | 5090 | 5275 |
| Soyabean | 3710 | 3880 |
| Nigerseed | 5940 | 6695 |
| Cotton (Medium Staple) | 5255 | 5515 |
| Cotton (Long staple) | 5550 | 5825 |

In ₹ per quintal
BCCL

## பிரதான் மந்திரி சுவாநிதி திட்டம்

- பிரதான் மந்திரி சுவாநிதி திட்டத்தின் கீழ், மத்திய அரசானது சாலையோரக் கடை விற்பனையாளர்களுக்காக ரூ.5000 கோடி மதிப்பிலான ஒரு சிறப்புக் கடன் வசதியை வழங்க இருக்கின்றது.
- இந்தத் திட்டமானது 5 மில்லியன் சாலையோர விற்பனையாளர்கள், தெரு வியாபாரிகள், சிறு கடை நடத்துபவர்கள் மற்றும் கைவினைப் பொருட்களை விற்பனை செய்பவர்களுக்குப் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

## சமூகப் பங்கு பரிவர்த்தனை (SSE)

- சமூகப் பங்கு பரிவர்த்தனை (SSE - Securities Stock Exchange) குறித்து ஆராய இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தினால் (SEBI - Securities and Exchange Board of India) ஏற்படுத்தப்பட்ட ஒரு பணிக் குழுவானது தனது பரிந்துரைகளைச் சமர்ப்பித்து உள்ளது.
- இந்தக் குழுவானது 2019 ஆம் ஆண்டில் SEBI அமைப்பால் இஸ்காத் ஹுசைன் என்பவரது தலைமையில் அமைக்கப்பட்டது.
- இது இந்தியாவில் உருவாக்கப்பட்ட ஒரு புதியக் கருத்தாக்கமாகும்.
- இது தனியார் மற்றும் லாப நோக்கற்ற துறையில் உள்ளவர்களுக்கு அதிக முதலீடுகளை ஏற்படுத்தித் தருவதைக் குறிக்கின்றது.

- இதன் மூலம், சமூக நல அமைப்புகள் மற்றும் லாப நோக்கற்ற நிறுவனங்கள் ஒரு வெளிப்படையான மின்னணுத் தளத்தில் சமூக முதலீட்டை வெகு விரைவாக திரட்ட இயலும்.

## மின்னணுத் துறைகளுக்கான திட்டங்கள்

- மத்திய அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் மின்னணுத் துறையை வலுப்படுத்துவதற்கு வேண்டி 3 புதிய திட்டங்களைத் தொடங்கியுள்ளார்.
- உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்குவிப்புத் திட்டம், தொகுப்புத் திட்டம் (EMC 2.0) மற்றும் பாகங்கள் உற்பத்தித் திட்டம் ஆகியவை இந்த 3 திட்டங்களாகும்.
- உலகில் கைபேசியை உற்பத்தி செய்யும் நாடுகளில் 2வது மிகப்பெரிய நாடு இந்தியா ஆகும்.

## நிகழ்நேர மின்சாரச் சந்தை

- இந்திய எரிசக்திப் பரிமாற்றமானது நிகழ்நேர மின்சாரச் சந்தைத் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- மின் விநியோக நிறுவனங்களின் மின் தேவைகளை அவர்கள் திட்டமிட உதவுவதே இந்த அறிமுகத்தின் முக்கிய நோக்கமாகும்.
- விநியோக நிறுவனங்களின் மின் தேவை-விநியோக மாறுபாட்டை நிர்வகிக்க இது உதவும்.
- இது விநியோக நிறுவனங்களின் முன்கணிப்பு மற்றும் பசுமை ஆற்றலைத் திட்டமிட உதவும்.
- இது 2022 ஆம் ஆண்டில் இந்தியா 175 ஜிகாவாட் அளவிற்குப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்கை அடைய உதவும்.
- இந்திய எரிசக்திப் பரிமாற்றம் என்பது மின்னணு முறையில் இயங்கும் ஒரு அமைப்பாகும். இது மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் கட்டுப்படுத்தப் படுகிறது.




## அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955

- மத்திய அமைச்சரவையானது 1955 ஆம் ஆண்டின் அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றங்களைச் செய்துள்ளது.
- 1955 ஆம் ஆண்டின் அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களின் கீழ், பருப்பு வகைகள், தானியங்கள், வெங்காயம், எண்ணெய்

வித்துக்கள், உருளைக்கிழங்கு போன்ற வேளாண் பொருட்கள் ஒழுங்குபடுத்தும் முறையிலிருந்து விலக்கப் பட்டுள்ளன.

- ❖ இது தனியார் முதலீட்டாளர்களை அதிகப்படியான ஒழுங்குமுறைத் தலையீடு குறித்த பயத்திலிருந்து மீட்டெடுத்து உதவ இருக்கின்றது.
- ❖ மேலும், இந்த திருத்தமானது மிகவும் நெருக்கடியான காலக்கட்டங்களில் மட்டுமே கையிருப்பு வரம்பைக் கட்டாயப்படுத்தி அமல்படுத்த அனுமதியளிக்க இருக்கின்றது.
- ❖ வறட்சி மற்றும் இயற்கைப் பேரிடர் போன்றவை இதில் அடங்கும்.
- ❖ இந்தக் கையிருப்பு வரம்பானது செயல்பாட்டாளர்கள் மற்றும் மதிப்புக் கூட்டினை அதிகப்படுத்துவதற்காக செயல்படும் பங்கேற்பாளர்களுக்குப் பொருந்தாது.

## தொடர் தொழிலாளர் சக்தி ஆய்வு (PLFS)

- ❖ சமீபத்தில் தேசியப் புள்ளியியல் அலுவலகமானது (NSO - National Statistical Office) 2018 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலான காலக்கட்டத்திற்கான தொடர் தொழிலாளர் சக்தி ஆய்வை (PLFS - Periodic Labour Force Survey) வெளியிட்டுள்ளது.
- ❖ PLFS ஆனது 2017 ஆம் ஆண்டில் NSO ஆல் தொடங்கப்பட்ட கணினியை மையமாகக் கொண்ட இந்தியாவின் முதலாவது ஆய்வாகும்.
- ❖ இது கிராமப்புறக் குடும்பங்களின் மீது வருடாந்திர அளவிலும் நகர்ப்புறக் குடும்பங்களின் மீது காலாண்டு அடிப்படையிலும் தொழிலாளர் சக்தி பங்கேற்பு விகிதம், பணியாளர்கள் எண்ணிக்கை விகிதம், வேலையற்ற & வேலைவாய்ப்பற்ற விகிதம் போன்ற வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பற்ற குறிகாட்டிகளைக் கணித்து அது குறித்த தகவல்களைத் தருகின்றது.
- ❖ இந்தியாவில் வேலைவாய்ப்பின்மை விகிதமானது 2018-19 ஆம் காலக்கட்டத்தில் 5.8% ஆகக் குறைந்துள்ளது. இது 2017-18 ஆம் ஆண்டின் இதே காலக்கட்டத்தில் 6.1% ஆக இருந்தது.
- ❖ நகர்ப்புற வேலைவாய்ப்பின்மை விகிதமானது 7.8%லிருந்து 7.7% ஆகக் குறைந்து உள்ளது.
- ❖ கிராமப்புற வேலையின்மை விகிதமானது 5.3% யிலிருந்து 5 ஆகக் குறைந்துள்ளது.
- ❖ இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்திடம் உள்ள மாதாந்திரத் தரவின்படி, இந்தியாவில் வேலைவாய்ப்பின்மை விகிதமானது 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 7.87%லிருந்து 2020 ஆம் ஆண்டு மே மாதத்தில் 23.48% என்ற அளவில் அதிகரித்து உள்ளது.

## வளமான மற்றும் ஆற்றல் திறன்மிகு கட்டிடங்கள்

- ❖ ஆற்றல் திறன்மிகு சேவைகள் நிறுவனமானது (EESL - Energy Efficiency Services Limited) மைத்திரி திட்டத்தின் சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க நிறுவனத்துடன் இணைந்து "வளமான மற்றும் ஆற்றல் திறன்மிகு கட்டிடங்கள்" என்ற ஒரு முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.
- ❖ இது பணியிடங்களை வளமானதாக மற்றும் பசுமையானதாக இருக்கும் படி மாற்றும் வகையில் தேவைப்படும் வழிகளை மேற்கொள்ள இருக்கின்றது.
- ❖ EESL ஆனது இந்திய அரசின் மத்திய மின் துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் ஒரு நிறுவனமாகும்.

## ஜெயா ஜெட்லி பணிக்குழு

- இந்திய அரசானது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக ஜெயா ஜெட்லி பணிக் குழு என்ற ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.
- இந்தப் பணிக் குழுவானது மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தினால் அமைக்கப் பட்டுள்ளது.
- இந்தக் குழுவானது தாய்மார்கள் இறப்பு விகிதத்தை குறைத்தல், ஊட்டச்சத்து நிலைமைகளை மேம்படுத்துதல், வயது தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்தல் ஆகியவை குறித்து ஆய்வு செய்ய இருக்கின்றது.
- மேலும் இந்தப் பணிக் குழுவானது பச்சிளங் குழந்தைகள் இறப்பு விகிதம், மொத்தக் கருத்தரிப்பு விகிதம், தாய்மார்கள் இறப்பு விகிதம், குழந்தைகள் பாலின விகிதம், பிறப்பின் போதான பாலின விகிதம் ஆகியவற்றுடன் சேர்த்து சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான இதரப் பிரச்சினைகள் ஆகியவை குறித்தும் ஆய்வு செய்ய இருக்கின்றது.

## ஆன்லைன் (நிகழ்நேர) கழிவுகள் பரிமாற்றத் திட்டம்

- ஆந்திரப் பிரதேச மாநில முதலமைச்சரான ஜெகன் மோகன் ரெட்டி இந்தியாவின் முதலாவது ஆன்லைன் கழிவுகள் பரிமாற்றத் திட்டத்தைத் தொடங்கியுள்ளார்.
- இந்தத் திட்டமானது நச்சுத்தன்மை வாய்ந்த கழிவுகளைப் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துதல் மற்றும் நச்சுத் தன்மை வாய்ந்த கழிவுகளின் மறுபயன்பாடு & மீள்சுழற்சியை ஊக்குவித்தல் ஆகியவற்றிற்காகத் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது மறுபயன்பாடு, மீள்சுழற்சி, குறைத்தல், மறு வடிவமைத்தல், புதுப்பித்தல் மற்றும் மீண்டும் உற்பத்தி செய்தல் (Reuse, Recycle, Reduce, Redesign, Refurbish and Remanufacture) ஆகிய 6Rகளுடன் ஒன்றிப் பொருந்தும் வகையில் தொடங்கப் பட்டுள்ளது.

## இந்தியாவின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு

- நோய்த் தொற்றிற்கு மத்தியில், இந்தியாவின் அந்நியச் செலாவணிக் கையிருப்பானது அதிகரித்து வருகின்றது. இது விரைவில் 500 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற அளவை அடைய இருக்கின்றது.
- இந்தியாவின் அந்நியச் செலாவணிக் கையிருப்பானது 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 5.8 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற நிலையிலிருந்து தற்பொழுது வரை அதிகரித்து வருகின்றது.
- அந்நியச் செலாவணியின் இந்த அதிகரிப்பானது டாலருக்கு எதிராக இந்திய ரூபாயின் மதிப்பை வலுப்படுத்த உதவுகின்றது.
- அந்நியச் செலாவணிக் கையிருப்பு என்பது இந்தியாவினால் சேர்த்து வைக்கப்பட்ட, மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியினால் கட்டுப்படுத்தப்பட்ட தங்கம், சர்வதேச நாணய நிதியத்தின் சிறப்பு எடுப்பு உரிமைகள் மற்றும் அயல்நாட்டு நாணயச் சொத்துகள் போன்ற வடிவத்தில் உள்ள அயல்நாட்டுச் சொத்துகளாகும்.
- அயல்நாட்டு நாணயச் சொத்துகளில் முதலீட்டுச் சந்தைகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள், அந்நிய நேரடி முதலீடு மற்றும் வணிக ரீதியான அயலகக் கடன் வாங்கல் ஆகியவை உள்ளடங்கும்.

- ஏறத்தாழ 64% அயல்நாட்டு நாணயக் கையிருப்புகள் அயல்நாடுகளின் கருவூலப் பத்திரங்கள் போன்ற பங்குகளில் முக்கியமாக அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளன.
- இந்தியா 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் மொத்தம் 653.01 டன்கள் அளவிலான தங்கத்தைக் கொண்டுள்ளது.
- இது இங்கிலாந்து வங்கி மற்றும் சர்வதேச தீர்வுகளுக்கான வங்கி ஆகியவற்றில் பாதுகாப்பான முறையில் வெளிநாடுகளில் வைக்கப் பட்டுள்ளன. மீதமுள்ள தங்கம் உள்நாட்டிலேயே வைக்கப் பட்டுள்ளது.

## குங்குமப்பூ மற்றும் ஹீங்க் பொருள் உற்பத்தி

- இமாலய உயிரிவளத் தொழில்நுட்ப மையமானது இந்தியாவில் குங்குமப்பூ மற்றும் ஹீங்க் பொருள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக வேண்டி இமாச்சலப் பிரதேச வேளாண் துறையுடன் இணைய இருக்கின்றது.
- குங்குமப்பூ மற்றும் ஹீங்க் ஆகியவை உலகில் மிகவும் விலை மதிப்பற்ற மற்றும் மதிப்பு மிக்க நறுமணப் பொருட்களாகும்.
- அதிக அளவிலான குங்குமப் பூவானது இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப் படுகின்றது.
- தற்பொழுது குங்குமப் பூ உற்பத்தியானது ஜம்மு காஷ்மீரில் மட்டுமே மேற்கொள்ளப் படுகின்றது.
- தற்பொழுது குங்குமப்பூ சாகுபடியானது உத்தரகாண்ட் மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகிய இரண்டு மாநிலங்களிலும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.
- இதே போன்று, நாட்டில் ஹீங்க் பொருளானது உற்பத்தி செய்யப் படுவதில்லை.
- ஹீங்க் ஆனது ஒரு நிரந்தரமான வாழ்நாள் கொண்ட செடியாகும்.
- இது நடுதல் செய்யப்பட்ட 5 ஆண்டுகளுக்குப் பிறகு அதன் வேரிலிருந்து ஒலியோ – கோந்து என்ற பிசின் ஆனது உற்பத்தி செய்யப் படுகின்றது.



## உலகில் மிகவும் அதிகச் செலவுமிக்க நகரங்கள்

- மெர்ஸரின் 2020 ஆம் ஆண்டின் வாழ்வாதாரச் செலவு என்ற ஆய்வின்படி, உலகில் மிகவும் அதிகச் செலவுமிக்க 60வது நகரம் மும்பை ஆகும்.
- மேலும் இது ஆசியாவில் அதிகச் செலவுமிக்க 19வது நகரமாக உள்ளது.
- இந்தியாவில் மிகவும் அதிகச் செலவுமிக்க நகரம் மும்பை ஆகும்.

- இதர இந்திய நகரங்களிடையே, உலக அளவில் மும்பையைத் தொடர்ந்து தில்லி 101வது இடத்திலும் அதற்கு அடுத்து சென்னை 143வது இடத்திலும் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- மிகவும் குறைந்த செலவுமிக்க இதர நகரங்கள் பெங்களூரு (171) மற்றும் கொல்கத்தா (185) ஆகியவையாகும்.
- இந்த ஆய்வானது 209 நகரங்களைக் கொண்டு தனது தரவரிசையை மேற்கொண்டு உள்ளது.
- இந்த ஆய்வினால் தயாரிக்கப்பட்ட உலகப் பட்டியலில் ஹாங்காங் முதலிடத்திலும் அதனைத் தொடர்ந்து துர்க்மெனிஸ்தானில் உள்ள அஸ்காபத் 2வது இடத்திலும் உள்ளன.
- 3வது இடமானது அதற்கு முந்தைய ஆண்டைப் போலவே ஜப்பானின் டோக்கியோ மற்றும் ஸ்விட்சர்லாந்தின் சூரிச் ஆகிய நகரங்களினால் தக்க வைக்கப்பட்டுள்ளது.
- இதில் நியூயார்க் 6வது இடத்திலும் சீனாவின் ஷாங்காய் 7வது இடத்திலும் உள்ளன.
- இதில் சுவிட்சர்லாந்தின் பெர்ன் மற்றும் ஜெனீவா நகரங்கள் முறையே 8வது மற்றும் 9வது இடங்களில் உள்ளன.
- இதில் பெய்ஜிங் 10வது இடத்தில் உள்ளது.

## மானிய நிதியுதவி

- நிதி ஆணையத்திற்கான குறிப்புரை விதிகள் மாநிலங்களுக்கு மானிய நிதியுதவி வழங்குவதற்கு வேண்டி அதற்கு பரிந்துரை செய்துள்ளன.
- இந்த நிதியுதவி பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.
  - வருவாய்ப் பற்றாக்குறை மானியம்
  - உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதியுதவி
  - பேரிடர் மேலாண்மை நிதியுதவி
- 2020-21 ஆம் ஆண்டிற்காக வேண்டி, இந்த ஆணையமானது வரிகளின் பகிரப்படக் கூடிய தொகுதியில் 41% நிதியை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க பரிந்துரை செய்துள்ளது.
- மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதியை நிர்ணயிப்பதற்காக நிதி ஆணையம் பின்வரும் தகுதிநிலைகளைப் பின்பற்றுகின்றது. அவையாவன:
  - வருவாய்ப் பற்றாக்குறைக்கு 45%
  - 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கு 15%
  - நிலப்பகுதிக்கு 15%
  - காடுகள் மற்றும் சூழலியலுக்கு 10%
  - மக்கள்தொகைச் செயல்பாடுகளுக்கு 12.5%
  - வரி வசூல் முயற்சிகளுக்கு 2.5%

## கடன் தன்மையின் விற்பனை

- இந்திய ரிசர்வ் வங்கியானது சமீபத்தில் "கடன் தன்மையின் விற்பனை" மற்றும் "நிலையானச் சொத்துக்களின் பங்குமயமாக்கல்" ஆகியவற்றிற்கான ஒரு வரைவுக் கட்டமைப்பை வெளியிட்டது.

- இந்த நடவடிக்கையானது சரியான விலைக் கண்டுபிடிப்பை உறுதி செய்யக் கூடிய வங்கிக் கடன்களுக்கான வலுவான ஒரு இரண்டாம் நிலைச் சந்தையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் அடுத்து வரவிருக்கும் அழுத்தத்திற்கு ஒரு குறிகாட்டியாகவும் இதை பயன்படுத்தப்படலாம்.
- இதில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளுக்குப் பொருந்தும்.
- இதில் அகில இந்திய நிதி நிறுவனங்களான எக்ஸிம் வங்கி, நபார்டு வங்கி, வங்கி சாரா நிதி நிறுவனங்கள் ஆகியன அடங்கும்.
- இதில் டாக்டர் ஹர்ஷ வர்தன் தலைமையிலான ஒரு குழுவான இந்தியாவில் வீட்டுவசதி நிதிப் பாதுகாப்புச் சந்தை மேம்பாட்டுக் குழுவின் பரிந்துரைகளும் அடங்கும்.

## நாடு தழுவிய அனைவருக்குமான அடிப்படை வருமானம் (UBI)

- தேசிய மனித உரிமைகள் ஆணையமானது முன்பு பரிந்துரைக்கப்பட்ட நாடு தழுவிய அனைவருக்குமான அடிப்படை வருமானத்தின் (UBI - Universal basic income) செயல்படுத்துதலானது மத்திய அரசின் "ஆய்வு மற்றும் ஆலோசனையின்" கீழ் உள்ளது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்திடம் கூறியுள்ளது.
- இது குடிமக்களின் வருமானம், வளம், வேலைவாய்ப்பின் நிலை ஆகியவற்றைப் பொறுத்து அல்லாமல் நாடு/இதரப் புவியியல் பகுதி/மாநிலத்தில் உள்ள குடிமக்கள் என்ற அடிப்படையில் நாட்டின் அனைத்துக் குடிமக்களுக்கும் நிதியுதவி வழங்கும் ஒரு திட்டமாகும்.
- 2016-17 ஆம் ஆண்டின் இந்தியப் பொருளாதார ஆய்வறிக்கையானது வறுமையை ஒழிக்கும் ஒரு முயற்சியாகவும் பல்வேறு சமூக நலத்திட்டங்களுக்கு மாற்றாகவும் வேண்டி UBIயின் கருத்தாக்கம் குறித்து கூறியுள்ளது.
- UBIயின் பின்னணியில் இருக்கும் முக்கிய நோக்கம் குடிமக்களிடையே சமத்துவத்தை அதிகரிப்பதும் வறுமையை ஒழிப்பது (அ) குறைப்பதாகும்.

## இந்தியாவின் அந்நியச் செலாவணி

- இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பானது நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக 500 பில்லியன் அமெரிக்க டாலரைக் கடந்து சாதனை படைத்து உள்ளது.
- அந்நியச் செலாவணி இருப்பில் ஜப்பான் மற்றும் சீனாவிற்கு அடுத்தபடியாக தென்கொரியா மற்றும் ரஷ்யாவைப் பின்னுக்குத் தள்ளி மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ள நாடு இந்தியா ஆகும்.

## 2020 இந்தியக் கைபேசி பணவழங்கீட்டுச் சந்தை அறிக்கை

- எஸ் & பி உலகளாவிய சந்தை நுண்ணறிவு என்ற நிறுவனமானது இந்த அறிக்கையை வெளியிட்டு உள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2019 ஆம் ஆண்டில் முதன்முறையாக கைபேசி மூலம் கட்டணம் செலுத்துதல் மற்றும் அட்டை மூலமான பணப் பரிமாற்றங்கள் ஆகியவை பண வழங்கல் (ஏடிஎம்) இயந்திரங்களிலிருந்து பணம் எடுப்பதைக் காட்டிலும் அதிகரித்து உள்ளது.

- கூகுள் பே மற்றும் போன் பே ஆகியவை ஒருங்கிணைந்த பணவழங்கீட்டு இடைமுகம் மூலமான பணம் செலுத்துதலில் முன்னிலை வகிக்கின்றன.

## பலம்கூர் மற்றும் நீரா

- காதி மற்றும் கிராமத் தொழிற்துறை ஆணையமானது "பலம்கூர்" மற்றும் "நீரா" ஆகியவற்றை உற்பத்திச் செய்வதற்காக ஒரு திட்டத்தைத் தொடங்க உள்ளது.
- இந்தத் திட்டமானது முதன்முதலில் 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட பனை மரங்கள் உள்ள மகாராஷ்டிராவில் தொடங்கப்பட இருக்கின்றது.
- இந்த முன்னெடுப்பானது மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சகத்தினால் தொடங்கப் படவுள்ளது.

## இந்தியாவின் ஐந்தாவது மந்தநிலை

- 1947 ஆம் ஆண்டில் சுதந்திரம் அடைந்ததிலிருந்து, இந்தியா நான்கு மந்த நிலைகளை எதிர்கொண்டுள்ளது.
- ரிசர்வ் வங்கியின் படி, 1958, 1966, 1973 மற்றும் 1980 ஆம் ஆண்டுகளில் மந்தநிலை ஏற்பட்டுள்ளது.
- தற்போதையப் பொருளாதார நெருக்கடி, கோவிட் 19 நெருக்கடியின் காரணமாக ஏற்பட்டுள்ளது. இந்தியா எதிர்கொள்ளும் முந்தைய மந்தநிலைகளை விடவும் இது மிக மோசமானது.

## எரிவாயு வர்த்தகம்

- இந்திய எரிசக்திப் பரிவர்த்தனையானது இயற்கை எரிவாயுவை விநியோகம் செய்து வழங்குவதற்காக நாடு தழுவிய முதல் இணைய விநியோக அடிப்படையிலான எரிவாயு வர்த்தகத் தளத்தை அறிமுகப்படுத்தியது.
- இது இந்திய எரிசக்திப் பரிமாற்றத்தின் துணை நிறுவனமாகச் செயல்படும்.
- இது மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் கட்டுப்படுத்தப்படும் ஒரு மின்னணு அமைப்பாகும்.
- இதன் தலைமையகம் புதுதில்லியில் அமைந்துள்ளது.
- கெயில் மற்றும் பெட்ரோனெட் போன்ற திரவ இயற்கை எரிவாயு நிறுவனங்கள் இதனோடு சேர்ந்துள்ளன.
- அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் அடுத்தபடியாக பசுமை இல்ல வாயுக்களின் மிகப்பெரிய உமிழ்ப்பாளராக இருக்கும் இந்தியா, பசுமை எரிபொருள் மற்றும் இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்துவதன் மூலம் அதன் உமிழ்வைக் கட்டுப்படுத்திக் குறைப்பதை தன் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்திய திவால் நிலை மற்றும் நொடித்தல் வாரியம் தொடர்பான ஆலோசனைக் குழு (IBBI)

- IBBI (Insolvency and Bankruptcy Board of India) மன்றமானது சமீபத்தில் நான்கு உறுப்பினர்களைத் தன்னுள் சேர்த்து தன் ஆலோசனைக் குழுவை மறுசீரமைத்து உள்ளது.


- இந்தக் குழு 2017 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. ஒரு பிரபல வங்கியாளரான உதய் கோடக் இதற்கு தலைமை தாங்குகிறார்.
- IBBI என்பது நாட்டில் திவால் நிலை நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டு கட்டுப்படுத்தும் ஓர் அமைப்பாகும்.
- இது புதிய திவால் நெறிமுறையின் கீழ் 2016 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

## SATYABHAMA

- “மேம்படுத்தப்பட்ட சுரங்கத் துறையில் ஆத்ம நிர்பர் பாரதத்திற்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப யோஜனா” (SATYABHAMA - Science and Technology Yojana for Atma Nirbhar Bharat in Mining Advancement) என்று பெயரிடப்பட்ட தளமானது மத்திய சுரங்க மற்றும் நிலக்கரித் துறை அமைச்சரான பிரகாலத் ஜோஷி என்பவரால் தொடங்கப் பட்டுள்ளது.
- இது “என்ஜிஓ தர்பன்” என்ற நிதி ஆயோக்கின் தளத்துடன் ஒருங்கிணைக்கப் படுகின்றது.
- இந்தத் தளமானது நாட்டில் கனிம மற்றும் சுரங்கத் துறையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பங்கை ஊக்குவிப்பதற்கான தேவையை வலியுறுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளது.
- தேசியத் தகவல் மையத்தின் சுரங்கத் தகவல் பிரிவானது இந்தத் தளத்தின் மீதான செயல்படுத்து நிறுவனமாகும்.

## கரீப் கல்யாண் ரோஜ்கர் அபியான்

- இந்தத் திட்டத்தின் மூலம், மத்திய அரசானது புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் கிராமப்புற கட்டமைப்புகளை உருவாக்கவும் முடிவு செய்துள்ளது.
- இந்தத் திட்டமானது பீகாரின் கஹாரியா மாவட்டத்தில் உள்ள தெலிகர் கிராமத்திலிருந்துத் தொடங்கப்பட இருக்கின்றது.
- இந்தப் பிரச்சாரமானது (திட்டமானது) ரூ.50,000 கோடி செலவில் 125 நாட்களுக்கு சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- இந்தப் பிரச்சாரத்திற்காக பீகார், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், ஜார்க்கண்ட், ஒடிசா (புலம்பெயர் தொழிலாளர்கள் அதிகமாக திரும்பியுள்ள மாநிலங்கள்) ஆகிய 6 மாநிலங்களிலிருந்து 116 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.



## இந்தியாவில் நிலக்கரிச் சுரங்கம்

- இந்தியப் பிரதமர் வணிக ரீதியிலான சுரங்கத்திற்காக 41 நிலக்கரிச் சுரங்கங்களின் ஏலத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
- உலகின் நான்காவது மிகப்பெரிய நிலக்கரி இருப்பு உள்ள நாடாகவும் இரண்டாவது மிகப்பெரிய உற்பத்தியாளர் நாடாகவும் இந்தியா இருக்கும் போதிலும், அதனை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில்லை.
- ஆனால் உலகின் இரண்டாவது மிகப்பெரிய நிலக்கரி இறக்குமதியாளர் நாடு இந்தியாவாகும்.
- மத்திய அரசானது 2030 ஆம் ஆண்டு வாக்கில் 100 மில்லியன் டன்கள் அளவிற்கு நிலக்கரியின் வளிமயமாக்குதலை மேற்கொள்ள இலக்கு நிர்ணயித்துள்ளது.

## கால்நடை வளர்ப்பு உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி

- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது ரூ.15,000 கோடி மதிப்பீட்டில் இந்த நிதியை அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த நிதியானது ஆத்ம நிர்பர் பாரத் அபியான் ஊக்குவிப்பு நிதியின் ஒரு பகுதி ஆகும்.
- இது பால்வளம் மற்றும் இறைச்சிப் பதப்படுத்துதல் போன்ற துறைகளுக்கான முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் தனியார் துறையில் விலங்குத் தீவன ஆலையின் கூடுதல் மதிப்பீட்டு உள்கட்டமைப்பு மற்றும் அதன் உருவாக்கத்திற்கு வழிவகை செய்யும்.

## ஆர்பிஐ வங்கிக் கட்டுப்பாட்டின் கீழ் UCBs மற்றும் MSCBs

- 1482 நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் (UCBs - Urban Cooperative Banks) மற்றும் 58 பல மாநிலக் கூட்டுறவு வங்கிகள் (MSCBs - Multi-State Cooperative Banks) ஆகியவை இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட இருக்கின்றன.
- இந்த முடிவானது பஞ்சாப் & மகாராஷ்டிரா கூட்டுறவு வங்கியின் முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசினால் எடுக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச ஒப்பீட்டுத் திட்டம் (ICP)


- உலக வங்கியானது அடிப்படை ஆண்டு 2017ற்கான புதிய வாங்கும் சக்திச் சமநிலையை (PPPs - Purchasing Power Parities) வெளியிட்டுள்ளது.
- இது உலகப் பொருளாதார நாடுகளுக்கிடையே வாழ்வாதாரச் செலவின வேறுபாடுகளைச் சரிசெய்யும் ICP-ன் (International Comparison Program) கீழ் உள்ளது.
- ICP என்பது ஐக்கிய நாடுகள் புள்ளியியல் ஆணையத்தின் கீழ் உள்ள ஒரு மிகப்பெரிய உலகளாவிய தரவுச் சேகரிப்பு முன்னெடுப்பாகும்.
- இந்திய ரூபாயின் PPP மதிப்பு ஆனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP – Gross Domestic Product), 2017 ஆம் ஆண்டில் 1 டாலருக்கு நிகராக 20.65 ஆக உள்ளது. இது 2011 ஆம் ஆண்டில் 15.55 ஆக இருந்தது.

### *இந்தியாவின் நிலை*

- ❖ 2017 ஆம் ஆண்டில் மூன்றாவது மிகப்பெரிய பொருளாதார நிலையை இந்தியா தக்க வைத்துக் கொண்டது. இது PPP-ன் அடிப்படையில் உலகின் GDPயில் 6.7% (உலக அளவில் $ 119,547 பில்லியன் என்ற மதிப்பில் இந்தியாவின் மதிப்பு $ 8,051 பில்லியன்) என்ற அளவைக் கொண்டுள்ளது.
- ❖ சீனா 16.4%யும் அமெரிக்கா 16.3%யும் கொண்டுள்ளன.
- ❖ மேலும் இந்தியாவானது PPP-ன் உலகளாவிய அசல் தனிநபர் நுகர்வு மற்றும் உலகளாவிய நிகர மூலதன உருவாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் மூன்றாவது மிகப்பெரிய பொருளாதார நாடாகவும் விளங்குகின்றது.

### *PPP பற்றி*

- ❖ ஒரு நாட்டின் நாணயமானது இரு நாடுகளிலும் (பல நாடுகளிலும்) ஒரே அளவுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் போன்றவற்றை வாங்குவதற்காக மற்றொரு நாட்டின் நாணயமாக மாற்றப்படும் விகிதம் என்று வரையறுக்கப்படுகின்றது.




## வருடாந்திர வங்கியியல் புள்ளி விவரம் – 2019

- ❖ இது சுவிட்சர்லாந்தின் மத்திய வங்கியான சுவிஸ் தேசிய வங்கியினால் வெளியிடப் பட்டுள்ளது.
- ❖ இந்தியா தனது குடிமக்கள் மற்றும் நிறுவனங்களால் அந்நாட்டு வங்கியில் நிதி முதலீடு செய்யப் பட்டதின் அடிப்படையில் 0.06%யுடன் 77வது இடத்தில் உள்ளது.
- ❖ இந்தப் பட்டியலில் பிரேசில் முதல் இடத்தில் உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ப்ராக்சிமா b


- சர்வதேச அறிவியல் விஞ்ஞானிகளைக் கொண்ட ஒரு குழுவானது பூமியைப் போன்ற அளவுடைய ப்ராக்சிமா b என்ற பெயரிடப்பட்ட ஒரு கோள் இருப்பதை உறுதி செய்துள்ளது.
- இந்தக் கோள் ஆனது ஆல்பா சென்சூரி என்ற நட்சத்திர அமைப்பில் உள்ள ப்ராக்சிமா சென்சூரி என்ற நட்சத்திரத்தைச் சுற்றிக் கொண்டிருக்கின்றது.
- கண்டறியப்பட்ட இந்தப் புதியக் கோளானது தனது சூரியனின் சுற்றுவட்டப் பாதையினை 11.2 நாட்களில் கடக்கின்றது.



- ப்ராக்சிமா சென்சூரி ஆனது சூரியனிலிருந்து 4.2 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.
- இது ஒரு சிவப்புக் குள்ள நட்சத்திரம் ஆகும். இது சூரியனின் நிறையில் 8ல் 1 பங்கைக் கொண்டுள்ளது.
- ப்ராக்சிமா சென்சூரி என்பது சூரியனுக்கு மிக அருகில் உள்ள ஒரு நட்சத்திரம் ஆகும்.

## AB ஆரிஜி நட்சத்திர அமைப்பு

- சமீபத்தில் மிகப்பெரிய தொலைநோக்கியின் “SPHERE” என்ற உபகரணமானது AB ஆரிஜி நட்சத்திர அமைப்பில் ஒரு புதிய கோள் உருவாகியுள்ளதைக் கண்டறிந்து உள்ளது.
- ஒரு நட்சத்திரம் உருவாகியுள்ளது எனக் கண்டுபிடிக்கப்பட்டது மனித வரலாற்றில் இதுவே முதன்முறையாகும்.
- இது தெற்கு ஐரோப்பிய ஆய்வு மைத்தினால் உறுதி செய்யப் பட்டுள்ளது.
- இந்த மிகப்பெரிய தொலைநோக்கியானது வடக்கு சிலியில் உள்ள தெற்கு ஐரோப்பிய ஆய்வு மையத்தில் அமைந்துள்ளது.



## ஸ்கார்பியன் (தேள்) மீன் – ஸ்கார்பியனோஸ்ப்சிஸ் நெக்லெக்டா

- மத்தியக் கடல் மீன் ஆராய்ச்சி மையத்தை (CMFRI - Central Marine Fisheries Research Institute) சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மன்னார் வளைகுடாவில் ஓர் அரிய மீன் இனத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்த மீன் இனமானது CMFRI மையத்தின் தேசியக் கடல்சார் பல்லுயிர்ப் பெருக்க அருங்காட்சியகத்தில் வைக்கப் பட்டுள்ளது.
- CMFRI மையம் என்பது கேரளாவின் கொச்சியில் தலைமையகத்தைக் கொண்ட ஒரு முன்னணி வெப்பமண்டல கடல்சார் மீன்கள் ஆராய்ச்சி மையமாகும்.
- இந்த மீன் இனமானது தனது நச்சுத் தன்மையுடைய வாலிற்காக உள்ளூரில் ஸ்கார்பியன் மீன் என அழைக்கப் படுகின்றது.
- இந்தியக் கடல் பகுதியில் இந்த வகை மீன் இனம் உயிருடன் காணப்படுவது இதுவே முதல்முறையாகும்.



## 2019 LD2

- சமீபத்தில் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் ஓர் அரிய விண்வெளிப் பொருளைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்தப் பொருளானது குறுங்கோள் மற்றும் வால்மீன் ஆகியவற்றைப் போன்று காணப் படுகின்றது.
- இந்தப் புதிய பொருள் ஒரு “செயல்படும் குறுங்கோள்” என்று அழைக்கப்படுகின்றது.
- இந்தக் குறுங்கோள் “2019 LD2” என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இது குறுங்கோளைப் போன்ற ஒரு சுற்றுவட்டப் பாதையையும் வால்மீனைப் போன்ற ஒரு வாலையும் கொண்டுள்ளது.
- 2019 LD2 ஆனது வியாழனின் சுற்றுவட்டப் பாதையைப் பகிர்ந்து கொள்கின்றது. இது “வியாழன் ட்ரோஜன்கள்” என்று அழைக்கப்படும் குறுங்கோள் திரளின் ஒரு பகுதியாகும்.
- வால் நட்சத்திரத்தைப் போன்று வாயுவை உமிழும் ஒரு விண்வெளிப் பொருள் கண்டுபிடிக்கப் படுவது இதுவே முதல்முறையாகும்.
- இந்தக் குறுங்கோளானது குறுங்கோள் நில அமைப்பு விளைவு இறுதி எச்சரிக்கை அமைப்பினால் (ATLAS - Asteroid Terrestrial-impact Last Alert System) கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

## ஸ்பேஸ்எக்ஸ் (Space X)

- விண்வெளிக்கு விண்வெளி வீரர்களை அனுப்பிய முதலாவது தனியார் விண்வெளிக்கலன் நிறுவனம் ஸ்பேஸ்எக்ஸ் ஆகும்.
- ஸ்பேஸ்எக்ஸ் விண்வெளி வீரர்கள் திட்டமானது விண்வெளி வீரர்களைக் கொண்ட ஒரு தொகுதியானது சர்வதேச விண்வெளி நிலையத்திற்குள் (ISS - International Space Station) நுழைந்ததையடுத்து தனது முதலாவது பயணத்தை நிறைவு செய்துள்ளது.
- ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனமானது டவுக் ஹர்லே மற்றும் பாப் பென்கென் ஆகியோரை பால்கன் 9 ராக்கெட் மூலம் விண்வெளிக்கு அனுப்பியது.
- இந்த திட்டமானது ரஷ்யாவின் விண்வெளி ராக்கெட்டுகளை நாசா சார்ந்திருத்தலை முடிவுக்குக் கொண்டு வர இருக்கின்றது.
- விண்வெளியிலிருந்து விண்வெளிக் கலன்களைப் பூமிக்கு மீண்டும் திருப்பிக் கொண்டு வந்த உலகின் முதலாவது தனியார் நிறுவனம் ஸ்பேஸ்எக்ஸ் ஆகும்.
- விண்வெளி வீரர்கள் "எண்டீவியர்" என்ற ஒரு ஓய்வு பெற்ற விண்கலன் ஒன்றின் நினைவாக இந்த வணிக ரீதியிலான விண்கலத்திற்கு அப்பெயரிட்டுள்ளனர்.
- ISS என்பது தாழ் புவி வட்டப் பாதையில் நிலை கொண்டுள்ள ஒரு கூறுநிலை விண்வெளி நிலையமாகும். (வசிக்கத் தக்க நிலை கொண்ட ஒரு செயற்கையான செயற்கைக் கோள்)
- விண்வெளியில் உள்ள மிகப்பெரிய செயற்கைப் பொருள் இதுவாகும். புவி தாழ் சுற்றுவட்டப் பாதையில் உள்ள மிகப்பெரிய செயற்கைக் கோள் இதுவாகும். இதை பூமியிலிருந்து வெற்றுக் கண்களால் பார்க்க முடியும்.
- ISS ஆனது ஏறக்குறைய 93 நிமிடங்களில் பூமியைச் சுற்றி வருகின்றது. இது ஒரு நாளைக்கு 15.5 முறை பூமியைச் சுற்றி வருகின்றது.
- ISS திட்டம் என்பது பின்வரும் 5 விண்வெளி நிறுவனங்களுக்கிடையேயான ஒரு தேசிய அளவிலான பலதரப்பு கூட்டுத் திட்டமாகும்.
  - நாசா (அமெரிக்கா)
  - ரோஸ்கோஸ்மாஸ் (ரஷ்யா)
  - ஜாக்சா (ஜப்பான்)
  - EAS (ஐரோப்பா)
  - CSA (கனடா)



## அல்ட்ரா ஸ்வச்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது அல்ட்ரா ஸ்வச் அல்லது அதீத சுத்தம் என்ற ஒரு கிருமிநாசினிப் பிரிவை உருவாக்கியுள்ளது.
- இதில் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள், மின்னணுப் பொருட்கள், துணிகள் போன்ற பல்வேறு பொருட்கள் அடங்கும்.
- அல்ட்ரா ஸ்வாச் பிரிவானது சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக இருக்கும் வகையில் ஒரு வினையூக்கி மாற்றியைக் கொண்டுள்ளது.
- இந்த அமைப்பு ஓசோன் ஏற்றவெளித்  தொழில்நுட்பம் (Ozonated Space Technology) எனப்படும் ஒரு மேம்பட்ட ஆக்ஸிஜனேற்ற செயல்முறையைப் பயன்படுத்துகிறது.
- இந்தச் சாதனம் ஓசோனைக் கட்டுப்படுத்தும் பொறிமுறையை உள்ளடக்கிய ஓசோன் மெழுகுத் தொழில்நுட்பத்தையும் (Ozone Sealant Technology) பயன்படுத்தி வருகிறது.
- ஓசோன் ஏற்றம் என்பது ஒரு வகை மேம்பட்ட ஆக்ஸிஜனேற்றச் செயல்முறையாகும். இது பரவலான கரிமச் சேர்மங்கள் மற்றும் அனைத்து நுண்ணுயிரிகளையும் தாக்கக் கூடிய வகையில் இருக்கும் அதிகம் எதிர்வினை புரியும் ஆக்ஸிஜன் இனங்களின் உற்பத்தியை உள்ளடக்கியதாகும்.



## உயர் செயல்திறன் கொண்ட மெக்னீசியம் உலோகக் கலவை

- தமிழ்நாட்டில் உள்ள மதராஸ் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் அதிக செயல்திறன் கொண்ட மெக்னீசியம் உலோகக் கலவை ஒன்றை உருவாக்கியுள்ளனர்.
- இதனை வாகனங்களில் எஃகு மற்றும் அலுமினியத்திற்குப் பதிலாக பயன்படுத்த முடியும்.
- இந்தப் புதிய  உலோகக் கலவையானது  வலுவாகவும், மிகவும் மென்மையாகவும் உள்ளது. மேலும் இதன் மிகை நெகிழ்த் தன்மை அதிக உற்பத்தி விகிதங்களில் அடையப் படுவதால், இது தனது ஒட்டுமொத்த உற்பத்திக்கான நேரம், முயற்சி மற்றும் செலவுகளை குறைக்கிறது.
- இது குறைந்த எடையுடன் இருப்பதால் வாகனங்களின் கரியமில தடத்தைக் குறைக்கவும் உதவுகிறது.

## பூமிக்கு அருகில் உள்ள பொருட்கள் (NEO)

- பூமிக்கு அருகில் உள்ள பொருட்களுக்கான நாசாவின் ஆய்வு மையமானது (CNEOS - Center for Near-Earth Object Studies) 5 குறுங்கோள்கள் பூமியைக் கடக்கும் என்று கூறியுள்ளது.

- விண்வெளிக் கற்கள் என்று அழைக்கப்படும் இந்தக் குறுங்கோள்களான 2020KF, 2020KE4, 2020KK7, 2020KD4, 2020KJ1 ஆகியவை பூமியைக் கடக்க இருக்கின்றன.
- 2020 KE4 என்ற குறுங்கோளானது வளிமண்டலத்திலேயே எரிந்து விடும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- குறுங்கோள்கள் மற்றும் வால்மீன்கள் ஆகியவை பூமிக்கு அருகில் உள்ள பொருட்களாகும். இவை சூரியனைச் சுற்றி வருகின்றன.
- இவை சுற்றும் போது, பூமிக்கு அருகே அதன் சுற்று வட்டப்பாதையில் 30 மில்லியன் மைல்கள் என்ற தொலைவு வரம்பிற்குள் வருவதனால் இவை NEO என்று ஆகின்றன.
- குறுங்கோள்கள் பெரும்பாலும் சூரியக் குடும்பத்தின் வெப்பமான உள்ளக அடுக்கில் வியாழன் மற்றும் செவ்வாய்க் கோள்களின் சுற்று வட்டப் பாதைக்குள் உருவாகின்றன.
- மறுபுறம், வால்மீன்கள் சூரியக் குடும்பத்தின் குளிர்மிகுந்த வெளிப்புற அடுக்கில் உருவாகின்றன.

## சூரியனின் ஒளிவட்டம்

- சமீபத்தில் ஆராய்ச்சியாளர்கள் சூரியன் முழுவதிலிருந்து வெளிப்படும் ரேடியோ ஒளியின் சிறிய ஒளிச் சிதறல்களைக் கண்டறிந்துள்ளனர்.
- இது மிக நீண்ட காலம் நிலுவையில் உள்ள ஒளிவட்ட வெப்பமாதல் பிரச்சினை குறித்து விவரிப்பதற்கு உதவ இயலும்.
- இந்தத் தரவானது மேற்கு ஆஸ்திரேலியாவில் அமைந்துள்ள முர்ச்சிகன் அகண்ட வெளித் தொகுப்பு ரேடியோ தொலைநோக்கியின் உதவியுடன் சேகரிக்கப்பட்டது.
- சூரிய வளிமண்டலத்தின் வெளிப்புறப் பகுதி சூரிய ஒளிவட்டம் ஆகும்.
- இந்த ஒளிவட்டமானது பெரும்பாலும் சூரியனின் மேற்பரப்பின் பிரகாசம் மிக்க ஒளியின் காரணமாக மறைக்கப் பட்டுள்ளது.
- இந்த ஒளிவட்டமானது சூரியனின் மேற்பரப்பை விட 10 மில்லியன் மடங்கு அடர்த்தி குறைவானதாகும்.
- இந்தக் குறைந்த அடர்த்தியானது அந்த ஒளிவட்டத்தை சூரியனின் மேற்பரப்பை விட பிரகாசம் குறைந்ததாக மாற்றுகின்றது.
- சூரியனின் ஒளிவட்டத்தின் வெப்பநிலையானது அதன் துகள்களை அதிவேகத்தில் நகர வைக்கின்றது.
- இந்த வேகம் மிக அதிக அளவில் இருப்பதால், அந்த துகள்கள் சூரியனின் ஈர்ப்பு விசையிலிருந்து விலகி விடும்.



## ஆர்செனிக்கம் ஆல்பம்

- மத்திய ஆயுஷ் துறை அமைச்சகமானது "ஆர்செனிக்கம் ஆல்பம்" என்ற ஒரு ஹோமியோபதி மருந்தைப் பரிந்துரை செய்துள்ளது.
- இந்த மருந்தானது கோவிட் – 19 நோய்த் தொற்றின் தடுப்புப் பயன்பாட்டிற்காகப் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.
- இந்த மருந்தானது காய்ச்சி வழங்கப்பட்ட நீரில் ஆர்செனிக்கைக் கொதிக்க வைப்பதன் மூலம் தயாரிக்கப் படுகின்றது.




## சூரிய ஒளிவட்டம்

- ஹவாய் தொழில்நுட்ப நிறுவனப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் சூரிய ஒளிவட்டம் குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.
- இது கிரகங்களுக்கிடையேயான இடைவெளியில் விரிவடையும் சூரியனின் வெளிப்பற வளிமண்டலப் பகுதியாகும்.



- சூரியனின் மேற்பரப்பிலிருந்து உமிழப் படுகின்ற மின்னேற்றம் பெற்ற துகள்களின் இந்தத் தொகுதியானது சூரிய ஒளிக் காற்று எனப்படுகின்றது. இது முழு சூரியக் குடும்பத்தையும் அடைவதற்காக விரிவடைகின்றது.
- சூரிய ஒளிவட்டமானது முழு சூரிய கிரகணத்தின் போது கண்ணால் மிக எளிதில் பார்க்க முடியும்.
- நிலவானது பூமிக்கும் மற்றும் சூரியனுக்கும் இடையில் இருக்கும் போது, அந்த சமயத்தில் சூரியனின் பிரகாசமான ஒளி மறைக்கப் படுவதே முழு சூரிய கிரகணம் எனப்படுகின்றது.

## மாலிப்டினம் டை ஆக்ஸைடு

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் நானோ மற்றும் மென்பொருள் அறிவியல் மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் மாலிப்டினம் டை ஆக்ஸைடின் மூலம் நீரிலிருந்து ஹைட்ரஜனை

உற்பத்தி செய்வதற்கான குறைந்த செலவு கொண்ட ஒரு எளிய வழியைக் கண்டுபிடித்துள்ளனர்.

- மாலிப்டினம் டை ஆக்ஸைடானது நீரை ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜனாகப் பிரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஆற்றலைக் குறைப்பதற்காக வேண்டி ஒரு சிறந்த ஊக்கியாகச் செயல்படுகின்றது.
- இந்தச் செயல்முறையானது மின்னாற்பகுப்பு எனப்படுகின்றது.
- மாலிப்டினம் டை ஆக்ஸைடானது தற்பொழுது ஊக்கியாகப் பயன்படுத்தப்பட்டு வரும் பிளாட்டினத்திற்கு மாற்றாகப் பயன்படுத்தும் திறன் கொண்டு விளங்குகின்றது.
- நீரின் பிரிப்புத் தன்மையானது ஹைட்ரஜனைப் பெறுவதற்கு முக்கியமானதாக விளங்குகின்றது.



## காந்த கலோரிப் பொருள்

- சமீபத்தில் துகள் உலோகம் மற்றும் புதிய பொருட்களுக்கான மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சி மையத்தைச் (ARCI - Advanced Research Centre for Powder Metallurgy and New Materials) சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் புற்றுநோய்க்குச் சிகிச்சையளிப்பதற்காக வேண்டி புவியை அடிப்படையாகக் கொண்ட ஒரு காந்தக் கலோரிப் பொருளை உருவாக்கியுள்ளனர்.
- ARCI என்பது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் ஒரு தனிச்சுதந்திர ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையமாகும்.
- காந்த கலோரிப் பொருட்கள் கட்டுப்படுத்தப்பட்ட வெப்பமயமாதலை அளிக்கின்றன.
- இந்தப் பொருளைப் பயன்படுத்துவதன் மிக முக்கியமான நன்மை என்பது காந்தப் புலங்கள் நீக்கப்பட்டவுடன் இந்தக் கலன்கள் குளிர்ச்சியடையும்.

## இஸ்ரோ ஒப்பந்தம்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பானது சமீபத்தில் நைனிடாலின் ஆர்யபட்டா ஆராய்ச்சி நிறுவன கண்காணிப்பு அறிவியல் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இது விண்வெளிச் சூழ்நிலை விழிப்புணர்வு மற்றும் வானியற்பியல் துறை ஆகியவற்றின் மீதான ஒத்துழைப்புடன் செயல்படுகிறது.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம் இந்தியாவின் விண்வெளிச் சொத்துக்களை விண்வெளிச் சிதைவு அல்லது விண்வெளிக் குப்பை என்ற அச்சுறுத்தல்களிலிருந்துப் பாதுகாப்பதாகும்.
- விண்வெளிச் சூழ்நிலை விழிப்புணர்வின் கீழ், சிதைவுகள் அல்லது குப்பைகள் கண்காணிப்பு, மோதல் தவிர்ப்பு, செயற்கைக் கோள் ஒழுங்கின்மையைக் கண்டறிதல், விண்வெளி வானிலை நிலையத்திலிருந்து வரும் அச்சுறுத்தல்களைக் கண்காணித்தல், சிறுகோள்கள் மற்றும் விண்கற்கள் ஆகியவற்றின் அச்சுறுத்தல்களைக் கணித்தல் ஆகியவற்றின் மீது இந்தியா கவனம் செலுத்துகிறது.

## இணையக் கட்டுப்பாட்டு இயந்திர மனிதன்

- மகாராஷ்டிராவின் தானேவைச் சேர்ந்த ஒரு பொறியியலாளர் இணையம் மூலம் கட்டுப்படுத்தும் ஒரு இயந்திர மனிதனை உருவாக்கியுள்ளார்.
- டொம்பிவாலியில் உள்ள பிஎன்டி சொல்யூஷன் என்ற துவக்க நிறுவனத்தின் நிறுவனர் பிரதிக் திரோட்கர் இதை வடிவமைத்து உருவாக்கியுள்ளார்.
- இதற்கு கோரோ-போட் என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இம்மாதிரியில் இதுவே முதல் வகையானது.
- மும்பையின் கல்யாணில் உள்ள ஹோலி கிராஸ் மருத்துவமனையில் கோரோ-போட் முதன்முறையாக நிறுவப் பட்டுள்ளது.
- இது செவிலியர்கள் அல்லது வார்டு பணியாளர்கள் நோயாளிகளுடன் மேற்கொள்ள வேண்டிய நேரடித் தொடர்பை நீக்குகிறது.
- உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் ஒரு செயலி மூலம் இதைக் கட்டுப்படுத்தும் ஒரு சிறப்பு வசதி இதில் உள்ளது.
- மருத்துவத் துறையில், பொருட்களின் இணையம் (இன்டர்நெட் ஆஃப் திங்ஸ்) என்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட உலகின் முதல் இயந்திர மனிதன் இதுவாகும்.



## வளிமக் கரைசல்களின் கதிர்வீச்சு கட்டாயப்படுத்துதல் – வெளிப்புற இமயமலை


- அண்மையில், ஆர்யபட்டா கண்காணிப்பு அறிவியலுக்கான ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய ஆய்வில், வளிமக்கரைசல்களின் கதிர்வீச்சு கட்டாயப்படுத்துதல் என்ற ஒரு நிகழ்வு கண்டறியப் பட்டுள்ளது. அதாவது மனிதர்களின் தாக்கத்தால் வளிமக் கரைசல்கள் மேற்கு வெளிப்புற-இமயமலைகளின் உயர்நிலையில் அதிகமாக காணப்படுவதாகக் கண்டறியப் பட்டுள்ளது.
- வளிமக் கரைசல்களின் கதிர்வீச்சு கட்டாயப்படுத்துதல் என்பது மனிதர்களின் தாக்கத்தால் வளிமண்டலத்தின் மேற்புறத்திலும் மேற்பரப்பிலும் உள்ள கதிரியக்கப் பாய்வுகளில் மற்றும் வளிமண்டலத்திற்குள் இருக்கும் கதிர்வீச்சை உறிஞ்சுவதாகும்.
- நைனிடாலில் உள்ள ஆர்யபட்டா கண்காணிப்பு அறிவியலுக்கான ஆராய்ச்சி நிறுவனமானது, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி ஆராய்ச்சி நிறுவனம் ஆகும்.
- வளிமக் கரைசல்கள் ஒரு வாயு அல்லது திரவச் சூழலில் மிதக்கும் திரவ அல்லது திடமான துகள்களின் ஒரு கலவையாக இருக்கும் என்று வரையறுக்கப் படுகின்றன.

## அரிசியின் நேரடி விதைப்பு

- பஞ்சாப் மாநில அரசானது இந்த ஆண்டில் நெல்லின் பாரம்பரிய நடவு முறைக்குப் பதிலாக அரிசியின் நேரடி விதைத்தல் முறையை (DSR - Direct seeding of rice) பின்பற்ற முடிவு செய்துள்ளது.
- புதிய கொரானா வைரஸ் நோய்த் தொற்று ஏற்பட்டதையடுத்துத் தொடர்ந்த தலைகீழ் இடப்பெயர்வினால் ஏற்பட்ட வேளாண் தொழிலாளர் பற்றாக்குறையின் காரணமாக இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது.
- DSRன் கீழ், முளைவிடப் படாத விதைகள் இழுவை இயந்திரத்தினால் செயல்படும் ஒரு இயந்திரத்தைப் பயன்படுத்தி நேரடியாக நிலத்தில் நடுவதற்குச் செலுத்தப் படுகின்றது.
- இந்த முறையில் எந்தவொரு நாற்றுப் பண்ணைத் தயாரிப்புகளும் அல்லது அதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப் படுவதில்லை.
- நெல்லை நிலத்தினுள் நடும் போது விவசாயிகள் நெல்லை முதலில் உழுது, பிறகு சிறு தாவரங்களாக வளரச் செய்யும் நடைமுறையைப் பின்பற்றுவர்.

## கோவிட் BEEP

- சமீபத்தில் மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் கோவிட் BEEP என்ற ஒரு கருவியைத் தொடங்கி வைத்தார்.
- இது கோவிட் – 19 நோயாளிகளுக்கான முதலாவது உடலியல் அளவீட்டுக் கண்காணிப்பு அமைப்பாகும்.
- கோவிட் BEEP என்பது தொடர் ஆக்ஸிஜனேற்றம் மற்றும் முக்கியத் தகவல் கண்டறிதலுக்கான உயிரி மருத்துவ ECIC ESIC கவசமாகும்.
- இது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதலாவது கம்பியற்ற மற்றும் விலை குறைந்த அளவீட்டுக் கண்காணிப்பு அமைப்பாகும்.
- இது ஐஐடி-ஹைதராபாத் மற்றும் ஹைதராபாத் ESIC மருத்துவக் கல்லூரி, ஆகியவற்றினால் இணைந்து உருவாக்கப் பட்டுள்ளது.




## ANANYA


- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் புனேவில் உள்ள மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பப் பாதுகாப்பு மையமானது கோவிட் – 19 நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடுவதற்காக வேண்டி நானோ தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கிருமிநாசினித் தெளிப்பானை உருவாக்கியுள்ளது.
- இந்தத் தெளிப்பான் "ANANYA" என்று பெயரிடப் பட்டுள்ளது.

- இது நீரினால் செயல்படும் ஒரு தெளிப்பான் ஆகும்.




## டைட்டன்

- சனிக் கோளின் நிலவான டைட்டன் ஆனது முன்பை விட வேகமாக சனிக் கிரகத்தை விட்டு விலகிச் செல்கிறது.
- இதை நாசாவின் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இத்தாலிய விண்வெளி நிறுவன விஞ்ஞானிகள் அடையாளம் கண்டுள்ளனர்.
- இந்தத் தரவு நாசாவின் காசினி விண்கலத்திலிருந்துப் பெறப்பட்டது.
- காசினி விண்வெளிக் கலம் அல்லது காசினி-ஹ்யூஜென்ஸ் திட்டம் என்பது நாசா, இத்தாலிய விண்வெளி நிறுவனம் மற்றும் ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் ஆகியவற்றின் ஒரு கூட்டு விண்வெளித் திட்டமாகும்.
- சனி, அதன் நிலவுகள் மற்றும் அதைச் சுற்றியிருக்கும் வளையங்களைப் ஆராய்வதற்காக இந்தப் பணி தொடங்கப்பட்டது.
- சனிக் கோளைச் சுமார் 82 நிலவுகள் சுற்றி வருகின்றன.
- பூமியின் நிலவானது ஒவ்வொரு ஆண்டும் பூமியிலிருந்து 1.5 அங்குலம் என்ற அளவில் அதை விட்டு விலகிச் செல்கின்றது.




## மரபணு மாற்றப்பட்ட விதைகள்

- ❖ தற்போது இவை அங்கீகரிக்கப் பட்டவை இல்லை என்றாலும், விவசாயிகள் தற்போதைய காரீப் பருவத்தில், மக்காச்சோளம், சோயாபீன், கடுகு, கத்திரிக்காய் மற்றும் களைக்கொல்லி எதிர்ப்புப் பருத்தி ஆகிய பயிர்களுக்கு வேண்டி மரபணு மாற்றப்பட்ட விதைகளைப் பெருமளவில் விதைப்பார்கள்.
- ❖ மரபணுப் பொறியியலானது விதைகளில் ஓர் அன்னிய மரபணுவை அறிமுகப் படுத்துவதன் மூலம் மரபணுத் தடைகளை மீறி விரும்பிய விளைவுகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ அன்னிய மரபணுவானது ஒரு தாவரம், ஒரு விலங்கு அல்லது ஒரு மண் பாக்டீரியம் ஆகியவற்றிலிருந்து கூட தேர்ந்தெடுக்கப் படலாம்.
- ❖ பிடி பருத்தி மட்டுமே இந்தியாவில் அனுமதிக்கப்படும் ஒரே மரபணு மாற்றப்பட்ட பயிராகும்.
- ❖ இந்தியாவில், மரபணுப் பொறியியல் மதிப்பீட்டுக் குழு என்பது மரபணு மாற்றப்பட்ட பயிர்களை வணிக ரீதியாகப் பயிரிட அனுமதிக்கும் ஓர் உச்ச அமைப்பாகும்.

## KOI - 456.04

- ❖ கோட்டின்ஜென் (ஜெர்மனி) நகரில் உள்ள சூரியக் குடும்ப ஆராய்ச்சிக்கான மேக்ஸ் பிளேன்க் மையம், சோன்பெர்க் ஆய்வு மையம், கோட்டின்ஜென் பல்கலைக்கழகம், கலிபோர்னியா பல்கலைக்கழகம் மற்றும் நாசா ஆகியவற்றைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட ஒரு குழுவானது கெப்ளர் விண்வெளித் தொலைநோக்கியைப் பயன்படுத்தி ஒரு புதிய கோளைக் கண்டுபிடித்துள்ளது.
- ❖ இது KOI-465.04 என்று பெயரிடப் பட்டுள்ளது. இதன் பெருந்திரள் விண்மீன் கெப்ளர் – 160 என்று அழைக்கப் படுகின்றது.
- ❖ மிகப்பெரிய வெளிக்கோளான KOI-465.04 பூமியிலிருந்து சுமார் 3000 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ள தனது விண்மீனைச் சுற்றி வருகின்றது.
- ❖ இது பூமியின் அளவைப் போன்று 2 மடங்கு அளவு குறைவானதாகும்.
- ❖ இது ஒரு சுற்றை நிறைவு செய்ய 378 நாட்களை எடுத்துக் கொள்கின்றது.




- ❖ கெப்ளர் 160 என்ற விண்மீன் ஆனது தனது சுற்றுவட்டப் பாதையில் குறைந்தது 3 கோள்களைக் கொண்டுள்ளது. மற்ற வெளிக்கோள் நட்சத்திரங்கள் வெளியிடாத கண்ணுக்குத் தெரியக் கூடிய ஒளியை இது உமிழ்கின்றது.
- ❖ பெரும்பாலும் வெளிக்கோள் நட்சத்திரங்கள் சூரியனை விட மிகச்சிறியதாக உள்ளதனாலும் மங்கலான ஒளியைக் கொண்டுள்ளதன் காரணமாகவும் இவை மிகுந்த

முக்கியத்துவம் பெறுகின்றன. இவை "சிவப்புக் குள்ளக் கோள்" நட்சத்திர வகைப்பாட்டைச் சேர்ந்த வகையில் இருந்து கொண்டு அகச் சிகப்புக் கதிர்களை உமிழ்கின்றன.

## கூட்டு நிலவுத் திட்டம்

- ஜப்பான் நாடானது இந்தியாவுடன் இணைந்து ஒரு கூட்டு நிலவுத் திட்டமான "நிலவு துருவ ஆய்வு" என்ற திட்டத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது 2023 ஆம் ஆண்டிற்குப் பிறகு செலுத்தப்பட இருக்கின்றது.
- இந்தத் திட்டமானது ஜப்பானிலிருந்துச் செலுத்தப்பட இருக்கின்றது. இது மிட்சுபிசி கனரகத் தொழிற்சாலையினால் தயாரிக்கப் பட்டுள்ள H3 என்ற விண்கலத்தின் மூலம் ஏவப்பட இருக்கின்றது.

## மாலத்தியான்

- இது கொசு ஒழிப்பு போன்ற பொதுச் சுகாதார பூச்சிக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள், பொது மனமகிழ் மன்றங்கள், குடியிருப்பு நிலப் பகுதிகள் மற்றும் வேளாண்மை போன்ற துறைகளில் மிகப்பெரிய அளவில் பயன்படுத்தப்படும் ஒரு பூச்சிக் கொல்லி ஆகும்.
- இது ஈரானிற்கு வெட்டுக்கிளிகள் மீதான கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காக இந்துஸ்தான் பூச்சிக் கொல்லி நிறுவனத்தினால் விநியோகிக்கப் படுகின்றது.

## பருப்பொருளின் 5ம் நிலை

- சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள நாசா ஆராய்ச்சியாளர்கள் போஸ்-ஐன்ஸ்டீன் சுருங்கு பொருள் ஆய்வின் முதலாவது முடிவுகளை வெளியிட்டு உள்ளனர்.
- துகள்கள் புவியியல் கட்டுப்பாடுகளிலிருந்து கட்டுப்பாடற்ற நிலையைக் கொண்டிருக்கும் என்பது தற்போது வெளிப்பட்டுள்ளது.
- போஸ்-ஐன்ஸ்டீன் சுருங்கு பொருளானது (BEC - Bose-Einstein Condensates) ஏறக்குறைய கடந்த ஒரு நூற்றாண்டிற்கு முன்பாக இந்தியக் கணிதவியலாளரான சத்யேந்திர நாத் போஸ் மற்றும் ஆல்பெர்ட் ஐன்ஸ்டீன் ஆகியோரால் கணிக்கப் பட்டுள்ளது.
- BEC என்பது போசான் வாயுக்கள் துல்லியமாக சுழியத்திற்கு அருகிலான ஒரு வெப்பநிலைக்கு குளிர்விக்கப்படும் போது உருவாகும் பருப்பொருளின் ஒரு நிலை ஆகும்.




- திண்மம், திரவம், வாயு மற்றும் பிளாஸ்மா என்று பருப்பொருள் நிலைகள் 4 ஆக உள்ளன.
- BEC ஆனது 5வது பருப்பொருள் நிலையாகும். இது 25 ஆண்டுகளுக்கு முன்பு ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

- பிளாஸ்மா என்று அழைக்கப்படும் 4வது பருப்பொருள் நிலையானது வேதியியல் அறிஞர் இர்விங் லாங்முய்ர் என்பவரால் விவரிக்கப்பட்டுள்ளது.

## கோவிட் – 19 நோய்த்தொற்றின் மருத்துவ முறை மேலாண்மை நெறிமுறை

- சமீபத்தில் மத்திய சுகாதார நலத்துறை அமைச்சகமானது கோவிட் – 19 தொற்றுநோய் நோயாளிகளின் சோதனை முறையிலான மருத்துவச் சிகிச்சை மற்றும் மேம்படுத்தப்பட்ட மருத்துவ முறை மேலாண்மை நெறிமுறையின் ஒரு பகுதியாக ரெம்டெசிவிர் மருந்தைச் சேர்த்துள்ளது.
- மேலும் இந்த அமைச்சகமானது சுவை இழப்பு மற்றும் மணம் நுகரும்தன்மை இழப்பு ஆகிய இரண்டையும் கோவிட் – 19 நோய்த் தொற்றின் 2 முக்கிய அறிகுறிகளாக அறிவித்துள்ளது.
- தற்போதைய மேம்படுத்தப்பட்ட நெறிமுறையின் கீழ், இந்த அமைச்சகமானது கடுமையான சூழ்நிலையில் ஹைட்ராக்சிகுளோரோகுயினை (HCQ) பயன்படுத்துவதற்கான தனது பரிந்துரையை நீக்கியுள்ளது.
- மேலும் அசித்ரோமைசினுடன் HCQ மருந்தைப் பயன்படுத்துதல் என்ற நெறிமுறையும் நீக்கப் பட்டுள்ளது.

## 2020 ஆம் ஆண்டில் சூரியக் கிரகணம்

- பூமியானது 2020 ஆம் ஆண்டு ஜுன் 21 அன்று வளைய சூரியக் கிரகணத்தைக் காண உள்ளது. இந்த தினம் வட அரைக் கோளத்தில் நிகழும் ஆண்டின் மிக நீண்ட தினமாகும்.
- இந்தக் கிரகணமானது 98.8% சூரியனை நிலவு மறைப்பதால் ஆழ்ந்த கிரகணமாக இருக்கின்றது.
- இந்தக் கிரகணமானது இராஜஸ்தான், ஹரியானா, உத்தரகாண்ட் போன்ற மாநிலங்களில் புலப்பட இருக்கின்றது.
- பூமி மற்றும் சூரியனுக்கு இடையில் நிலவு செல்லும் போது சூரியக் கிரகணமானது ஏற்படுகின்றது.



- 4 வகையான சூரியக் கிரணகங்கள் உள்ளன. அவையாவன:
- பகுதி சூரியக் கிரகணம், முழு சூரியக் கிரகணம், கலப்பு சூரியக் கிரகணம் மற்றும் வளைய சூரியக் கிரகணம்.
- வளைய சூரியக் கிரகணமானது சூரியன் மற்றும் நிலவு ஆகியவை பூமியுடன் நேர்கோட்டில் இருக்கும் போது ஏற்படுகின்றது.
- இந்த சூரியக் கிரகணமானது நிலவானது பூமியில் இருந்து வெகு தொலைவில் இருக்கும் போது மட்டுமே ஏற்படுகின்றது.

- இந்தக் கிரகணத்தின் போது, சூரியனானது ஒரு பிரகாசமிக்க வளையமாகக் காட்சி அளிக்கின்றது.

## டெக்சாமீத்தசோன்

- கோவிட் – 19 நோய்த் தொற்றிலிருந்து உயிர் காப்பு விகித அதிகரிப்பைக் காட்டியுள்ள முதலாவது மருந்து இதுவாகும்.
- இது வீக்கத்தைக் குறைக்கப் பயன்படுத்தப்படும் ஒரு ஊக்க மருந்தாகும்.
- இது கீழ்வாதம், இரத்தம்/ஹார்மோன்/நோய் எதிர்ப்பு அமைப்புப் பிரச்சினைகள், ஒவ்வாமை, பல்வேறு தோல் மற்றும் கண் தொடர்பான பிரச்சினைகள், சுவாசக் கோளாறுகள், குடல் பிரச்சினைகள் மற்றும் சில புற்றுநோய்கள் ஆகியவற்றிற்கு சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப் படுகின்றது.
- இது அட்ரீனல் சுரப்பிப் பிரச்சினைக்கான (கூடுதல் சிறுநீரக இயக்குநீர் சுரப்பி நோய்) சோதனையாகவும் பயன்படுத்தப் படுகின்றது.
- இந்த ஆய்வுக் கண்காணிப்பானது இங்கிலாந்தில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட "RECOVERY" (கோவிட் – 19 நோய்த் தொற்றுச் சிகிச்சை முறையின் சீரற்ற மதிப்பீடு - Randomised Evaluation of COVid-19 therapy) என்ற ஒரு மருத்துவச் சோதனையின் அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இந்த மருந்தானது அகமதாபாத்தில் உள்ள சைடஸ் கேடிலா அல்லது கேடிலா சுகாதார நல நிறுவனம் என்ற ஒரு நிறுவனத்தினால் இந்தியாவில் தயாரிக்கப் படுகின்றது.

## இந்தியாவின் முதல் தொற்றுநோய் கண்டறியும் ஆய்வகம்

- இந்த நடமாடும் ஆய்வகமானது ஆத்ம நிர்பர் பாரத் திட்டத்தின் கீழ் வெறும் 8 நாட்களில் உருவாக்கப் பட்டுள்ளது.
- இது உயிரித் தொழில்நுட்பவியல் துறையின் உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது.
- இது உயிர்ப் பாதுகாப்பு நிலை 2 என்ற நிலையின் பாதுகாப்புத் தரத்துடன் உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்த ஆய்வகம் ஒரு நாளில் 50 ஆர்டி-பி.சி.ஆர் சோதனைகளையும் 200 எலிசா (ELISA - Enzyme Linked Immunosorbent Assay) சோதனைகளையும் செய்ய கூடியதாகும்.
- நோய் எதிர்மங்கள், புரதங்கள் மற்றும் ஹார்மோன்கள் போன்ற கரையக் கூடிய பொருட்களைக் கண்டறிய எலிசா சோதனையானது வடிவமைக்கப் பட்டுள்ளது.

## ஆன்டிஜென் சோதனைகள்

- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழு ஆர்.டி-பி.சி.ஆருடன் விரைவு ஆன்டிஜென் சோதனைக் கருவிகளையும் பயன்படுத்தப் பரிந்துரைத்துள்ளது.
- இந்தச் சோதனைக் கருவிகள் நோய்த் தொற்றை வேகமாகக் கண்டறிய உதவும்.
- கோவிட்-19 நோய்த் தொற்று மீதான ஆர்.டி-பி.சி.ஆர் சோதனையைப் போலவே, இந்தப் பரிசோதனையும் நோய் எதிர்ப்புப் பொருட்களைக் கண்டறியாமல் வைரஸைக் கண்டறிகிறது.

## I Lab (I ஆய்வகம்)

- ❖ மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சரான டாக்டர் ஹர்ச வர்தன் I-Lab (தொற்று நோய்க் கண்டறியும் ஆய்வகம்) என்ற ஒன்றை புதுதில்லியில் தொடங்கி வைத்துள்ளார்.
- ❖ இந்தியாவில் I-Lab தொடங்கப் படுவது இதுவே முதல்முறையாகும்.
- ❖ இது மத்திய உயிரித் தொழில்நுட்பத் துறையினால் செயல்படுத்தப்பட உள்ளது. இது மத்திய உயிரித் தொழில்நுட்பத் துறையின் கோவிட் நோய் சோதனை மையங்கள் ஒன்றில் பொருத்தப்பட இருக்கின்றது.
- ❖ I-Lab என்பது நாட்டின் ஊரகப் பகுதிகளில் அணுக முடியாத பகுதிகளில் கோவிட் – 19 நோய்த் தொற்றிற்காக மாதிரிகளைச் சேகரித்து அவற்றைச் சோதனை செய்யப் பயன்படுத்தப் படும் ஒரு நடமாடும் சோதனை வசதியாகும்.
- ❖ இந்தியாவில் சுகாதார நலத் தொழில்நுட்பங்களில் உள்ள இடைவெளியைக் களைவதற்காக ஆந்திரப் பிரதேச மருந்துத் தொழில்நுட்ப மண்டலம் (AMTZ - Andhra Pradesh Med-Tech Zone) மற்றும் மத்திய அறிவியல்/தொழில்நுட்பத் துறை ஆகியவை இத்திட்டத்திற்காக ஒன்றிணைந்துள்ளன.
- ❖ AMTZ என்பது மருத்துவத் தொழில்நுட்பங்களுக்காக பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப் பட்டுள்ள ஆசியாவின் முதலாவது மருத்துவ உபகரண உற்பத்திச் சூழலமைப்பு ஆகும். இது இந்தியாவில் உள்ள பல்வேறு அமைச்சகங்களால் ஆதரிக்கப் படுகின்றது.

## மிகியஸ்

- ❖ இது 2016 ஆம் ஆண்டில் சீனாவினால் செலுத்தப்பட்ட உலகின் முதலாவது குவாண்டம் தகவல் தொடர்பு செயற்கைக் கோளாகும்.
- ❖ இந்தச் செயற்கைக் கோளானது சிக்கலான போட்டான் இணைகளின் ஆதாரமாக விளங்குகின்றது.
- ❖ சமீபத்தில், இது உலகின் மிகவும் பாதுகாப்பான ஒரு தகவல் இணைப்பை ஏற்படுத்துவதற்காக வேண்டி பூமிக்கு ஒளித் துகள்களை அனுப்பியுள்ளது.




## CIPREMI

- ❖ மத்திய சுகாதாரத் துறை அமைச்சகமானது கோவிட் – 19 நோய்த் தொற்றிற்கு வரையறுக்கப்பட்ட அவசர காலப் பயன்பாட்டிற்கு மட்டுமே வேண்டி "ரெம்டெசிவிர்" மருந்தைக் குறிப்பிட்டுள்ளது.
- ❖ "ரெம்டெசிவிர்" என்ற இந்த வைரஸ் எதிர்ப்பு மருந்தின் உற்பத்தி மற்றும் சந்தையிடல் ஆகியவற்றிற்காக ஹெட்டிரோ மற்றும் சிப்லா ஆகிய மருந்து நிறுவனங்களுக்கு இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பினால் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

- "கோவிப்போர்" என்ற விளம்பரப் பெயரின் கீழ், ஹைதராபாத்தில் உள்ள ஹெட்டிரோ மருந்து நிறுவனத்தின் ரெம்டெசிவிர் மருந்தின் ஒரு பொதுப் பதிப்பானது (காப்புரிமை அல்லாதது) இந்தியாவில் சந்தைப்படுத்தப்பட இருக்கின்றது.
- "ஜில்லெட் சயின்ஸ்" என்ற அமெரிக்காவில் உள்ள உயிரி மருந்து நிறுவனமானது இந்த மருந்தின் உற்பத்தியாளராகும்.
- சிப்லா ஆனது "CIPREMI" என்ற பொது மருந்துப் பெயரின் கீழ் இந்த மருந்தை இந்தியாவில் உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தலுக்காக வேண்டி ஜில்லெட் அறிவியல் நிறுவனத்தினால் ஒரு தன்னார்வப் பிரத்தியேக ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.
- கோவிப்போர் என்பது கிளென்மார்க்கின் பேபிப்ளுவிற்குப் பிறகு இந்தியச் சந்தையில் நுழையும் இது போன்ற இரண்டாவது மருந்தாகும்.
- கோவிட் – 19 நோய்த் தொற்றுச் சிகிச்சைக்காக ரெம்டெசிவிர் மருந்திற்கு ஒப்புதல் அளித்த முதலாவது நாடு ஜப்பான் ஆகும்.
- ஐக்கிய இராஜ்ஜியம், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் மட்டுமே இந்த மருந்திற்கு ஒப்புதல் அளித்துள்ளன.

## பெய்டோ செயற்கைக் கோள் அமைப்பு 3 (BDS - 3)

- சீனா BDS – 3 பதிப்பின் கடைசி செயற்கைக்கோள் ஏவுதலை நிறைவு செய்துள்ளது.
- இது பெய்டோ கண்காணிப்புச் செயற்கைக்கோள் அமைப்பின் மூன்றாவது தலைமுறையின் ஒரு பகுதியாகும். இது பெய்டோ அமைப்பின் 55வது செயற்கைக் கோளாகும்.
- BDS - 3 (BeiDou Navigation Satellite System) ஆனது சீனாவின் மண்டல மற்றும் சாலை முன்னெடுப்பில் கையெழுத்திட்டுள்ள நாடுகளுக்கு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து உலகளாவிய கண்காணிப்புச் சேவையை வழங்கி வருகின்றது.
- பெய்டோ என்பது மாண்டரின் மொழியில் "பெரிய குவளைகள்" என்று பொருள்படும்.
- இது அமெரிக்க அரசின் NAVSTAR உலகளாவியப் புவியிடங்காட்டி (GPS - Global Positioning System), ரஷ்யாவின் GLONASS (GLObal NAvigation Satellite System), ஐரோப்பிய ஒன்றியத்தின் கலிலியோ அமைப்பு ஆகியவற்றுடன் போட்டியிடுவதற்கான ஒரு முயற்சியாகும்.

## புளோரின் கண்டறியப் படுதல்

- வளிமண்டலத்தில் வெப்பமான மிகக் கடுமையான ஹீலியம் நட்சத்திரத்தில் முதன்முறையாக தனித் தனியான அயனியாக்கம் கொண்ட புளோரினின் இருப்பானது கண்டறியப் பட்டுள்ளது.
- இந்தக் கண்டுபிடிப்பானது இந்தப் பொருட்களின் உருவாக்கமானது கார்பன், ஆக்ஸிஜன் மற்றும் ஒரு வெள்ளைக் குள்ள நட்சத்திர ஹீலியம் ஆகியவை இணைவதினால் ஏற்படுகின்றது என்பதை உறுதிபடுத்துகின்றது.
- இது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் உள்ள ஒரு தனிச் சுதந்திர அமைப்பான இந்திய வான் அறிவியல் மையத்தினால் மேற்கொள்ளப் பட்ட ஓர் ஆய்வாகும்.
- கடுமையான ஹீலிய நட்சத்திரம் அல்லது EHe என்பது ஏறத்தாழ ஹைட்ரஜன் இல்லாத ஒரு குறைந்த நிறை கொண்ட மிகப்பெரிய பொருளாகும்.
- பிரபஞ்சத்தில் மிகவும் பொதுவான ஒரு இரசாயனப் பொருள் ஹைட்ரஜன் ஆகும்.

## திரவக் குளிர்விப்பு மற்றும் வெப்பமாக்கல் ஆடை

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது அடுத்த 20 ஆண்டுக் காலத்திற்கு தனது திரவக் குளிர்விப்பு மற்றும் வெப்பமாக்கல் ஆடைக்குக் காப்புரிமையைப் பெற்று உள்ளது.
- இது விண்வெளி வீரர்களுக்குத் தேவையான வெப்பநிலையை அளிக்கும் வகையிலும் வியர்வையை நீக்கும் வகையிலும் உயிரி இணக்கமான துணிகள் மற்றும் பொருள்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.



## மாரீச் நீர்மூழ்கிக் குண்டு தடுப்பு அமைப்பு

- இந்தியக் கடற்படையானது இந்த அமைப்பை தனது கடற் பணியில் சேர்த்துள்ளது.
- இது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அதிதிறன் கொண்ட மேம்படுத்தப்பட்ட மாரீச் வகை அமைப்பாகும்.
- மாரீச் வகை நீர்மூழ்கிக் குண்டு என்பது கப்பலின் மேற்பரப்பு, நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் விமானத்திலிருந்துச் செலுத்தப்படும் வகையில் தன்னைத் தானே-செலுத்தும் திறன் கொண்ட ஒரு நீர்மூழ்கி ஏவுகணையாகும்.



## SPARC

- மதராஸ் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பசுமை ஆற்றல் தீர்வுகளுக்கான புதிய பொருட்களை உருவாக்குவதற்காக ஜெர்மனியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்துள்ளனர்.
- இந்தத் திட்டமானது அறிவு சார் மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பின் ஊக்குவிப்புத் திட்டம் அல்லது SPARC (Scheme for Promotion of academic and Research Collaboration) என்பதின் கீழ் மேற்கொள்ளப் படுகின்றது.

## கோழிகளின் வளர்ப்பு

- 863 மரபணுத் தொகுதிகளின் டிஎன்ஏ வரிசையாக்கமானது முதன்முறையாக கோழிகளைப் பழக்கப்படுத்தி வளர்த்தலானது தென்-மேற்கு சீனா, வடக்கு தாய்லாந்து மற்றும் மியான்மரில் நிகழ்ந்துள்ளதாகக் காட்டுகின்றது.
- சார்லஸ் டார்வினின் கருத்துப் படி, சிந்துப் பள்ளத்தாக்கில் சிவப்புக் காட்டுக்கோழி என்ற ஒரே பண்டைய இனத்திலிருந்து கி.மு. 4000 ஆம் ஆண்டிற்கு முன்பு கோழியானது பழக்கப்படுத்தி வளர்க்கப்பட்டது.

## புதிய மருத்துவ மேலாண்மை நெறிமுறை

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகமானது திருத்தப்பட்ட மருத்துவ மேலாண்மை நெறிமுறையை வெளியிட்டுள்ளது.
- இதன்கீழ், டெக்காமெத்தசோன் ஆனது மெத்தில் பிரிடினோசோலோன் என்பதற்கு மாற்றாக வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- டெக்சாமெத்தசோன் மருந்தானது அதிகப்படியான அழற்சி அறிகுறியுடன் உள்ள அல்லது ஆக்ஸிஜன் வாயு தேவைப்படுகின்ற கோவிட் – 19 நோய்த் தொற்றுள்ள நோயாளிகளுக்கு வழங்கப்படும் ஒரே மருந்தாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## விளையாட்டு வேளாண்மை

- வேளாண் சுற்றுலாவில் உள்ளூர் மக்களின் பங்களிப்பை ஊக்குவிப்பதற்காக சிறிய விளையாட்டுப் பண்ணைகளை வைத்திருக்க விவசாயிகளுக்கு அனுமதி அளிப்பதாக ஆப்பிரிக்க நாடான போட்ஸ்வானா அரசு அறிவித்துள்ளது.
- ஒரு விளையாட்டுப் பண்ணை என்பது விளையாட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காக வனவிலங்குப் பகுதிகளில் அவைகளை வளர்க்கும் ஒரு இடமாகும்.
- இது இத்தகைய விலங்குகளை உணவிற்காக அல்லது புகைப்படம் எடுப்பதற்காக வேண்டி அவை விற்கப்படும் அல்லது வளர்க்கப்படும் இடமாகவும் அறியப் படுகிறது.


## இந்தியாவில் சுற்றுச்சூழலின் நிலை – 2020

- சமீபத்தில் "இந்தியாவில் சுற்றுச்சூழலின் நிலை குறித்த புள்ளிவிவரங்கள் – 2020" என்ற ஒரு அறிக்கையானது அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது நீடித்த வளர்ச்சி, கால்நடைகள், வனங்கள், நீர், கழிவுகள், காற்று, நிலம், வன விலங்குகள் மற்றும் இதர இயற்கை வளங்கள், சுற்றுச்சூழல் சார்ந்த குற்றங்கள் மற்றும் உலகளாவியப் பொருளாதார அபாயங்கள் ஆகியவற்றின் நிலையை விவரிக்கின்றது.
- இதன் படி, 2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் நிகழ்ந்த உள்ளக இடப்பெயர்வுகள் உலகில் நிகழ்ந்த மிக உயரிய இடப்பெயர்வாகும்.
- இந்த உள்ளக இடப்பெயர்வுகள் பேரிடர்கள் மற்றும் வெள்ளம், புயல் & வறட்சி போன்ற

கடுமையான வானிலைகளினால் ஏற்பட்டுள்ளது.

## நகர் வன் திட்டம்

- மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சரான பிரகாஷ் ஜவ்டேகர் "நகர் வன்" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளார்.
- இந்தத் திட்டமானது "நகர்ப்புறக் காடுகள்" குறித்து வலியுறுத்துகின்றது.
- இந்தத் திட்டத்தின் கீழ், அடுத்த 5 ஆண்டுகளில் நாடு முழுவதும் ஏறத்தாழ 200 நகரங்களில் நகர்ப்புறக் காடுகள் மேம்படுத்தப்பட இருக்கின்றன.




## சுற்றுச்சூழல் செயல்பாட்டுக் குறியீடு


- சமீபத்தில் யேல் பல்கலைக்கழகமானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியிடப்படும் சுற்றுச்சூழல் செயல்பாட்டுக் குறியீட்டின் 12வது பதிப்பை வெளியிட்டுள்ளது.
- இந்தக் குறியீடானது தேசிய மற்றும் சர்வதேச அளவில் சுற்றுச்சூழல் செயல்பாடு மீதான 10 ஆண்டுக் கண்காணிப்பை அளித்துள்ளது.
- இந்தக் குறியீடானது சுற்றுச்சூழல் ஆரோக்கியம் மற்றும் சூழலியல் உயிர்ப்புத் தன்மை ஆகியவற்றை உள்ளடக்கிய 11 வகைகளின் கீழ் 32 செயல்பாட்டுக் குறிகாட்டிகளுடன் 180 நாடுகளைத் தரவரிசைப்படுத்துகின்றது.
- 180 நாடுகளிடையே இந்தியா 168வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- ஆப்கானிஸ்தான் நாட்டைத் தவிர அனைத்துத் தெற்காசிய நாடுகளும் தரவரிசையில் இந்தியாவிற்கு முந்தைய இடங்களில் உள்ளன.

## பச்சை நிற ஒட்டுப்படம்

- சமீபத்திய அரசாணையின்படி, பிஎஸ்-VI தகுதிநிலை கொண்ட அனைத்து வாகனங்களும் அக்டோபர் 01 ஆம் தேதியிலிருந்து பச்சை நிற ஒட்டுப் படத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
- இந்தப் பச்சை நிற ஒட்டுப் படமானது வாகனப் பதிவு விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும்.
- இந்த அரசாணையின் படி, அனைத்து மோட்டார் வாகனங்களிலும் உறுதியான, உயரிய பாதுகாப்புப் பதிவுத் தகடுகள் பொருத்தப்பட வேண்டும்.
- வண்டிக்கான மூன்றாவது எண் பலகையானது மாசுபாடற்ற வாகனங்களிலிருந்து மாசுபடுத்தும் வாகனங்களைக் கண்டறிய உதவுவதற்காக வேண்டி வாகனங்களில் பயன்படுத்தப்படும் எரிபொருள்களுக்கான பல வண்ணக் குறியீட்டைக் கொண்டு இருக்கும்.




## ஆறாவது பெரும் அழிவு




- தற்போது நடந்துக் கொண்டிருக்கும் ஆறாவது பெரும் அழிவானது நாகரிகத்தின் நிலைத்தன்மைக்கு மிகவும் கடுமையான சுற்றுச்சூழல் அச்சுறுத்தல்களில் ஒன்றாக இருக்கலாம்.
- இந்த ஆராய்ச்சியானது அமெரிக்காவின் தேசிய அறிவியல் கல்விக் குழுமத்தின் செயல்முறைகள் இதழில் (Journal Proceedings of the National Academy of Sciences) வெளியிடப் பட்டுள்ளது.

- பெரும் அழிவு என்பது அழிவின் மீதான அளவின் கணிசமான அதிகரிப்பு அல்லது புவியியல் ரீதியாக குறுகிய காலத்தில் பூமி அதன் முக்கால்வாசிக்கும் மேற்பட்ட உயிரினங்களை இழப்பதைக் குறிக்கிறது.
- இதுவரை, பூமியின் முழு வரலாற்றிலும் ஐந்து பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன.
- கடந்த 450 மில்லியன் ஆண்டுகளில் நிகழ்ந்த ஐந்து பெரும் அழிவுகள் முன்பு இருந்த தாவரங்கள், விலங்குகள் மற்றும் நுண்ணுயிரிகள் ஆகியவற்றின் 70-95 சதவீத உயிரினங்களை அழிக்க வழிவகுத்தன.
- தற்போது நடந்துக் கொண்டிருக்கும் ஆறாவது ஒன்று, மானுடச் செயல்களால் ஏற்படும் அழிவு என குறிப்பிடப் படுகிறது.
- உயிரினங்களின் இழப்பு நிரந்தரமானதாக இருக்கும் என்பதால் ஆராய்ச்சியாளர்கள் இதை "மிகவும் கடுமையான ஒரு சுற்றுச்சூழல் பிரச்சினை" என்று குறிப்பிட்டு உள்ளனர்.
- மனித குலத்தின் மூதாதையர்கள் 11,000 ஆண்டுகளுக்கு முன்பு விவசாயத்தை உருவாக்கியதிலிருந்து உயிரினங்களின் இழப்பு ஏற்பட்டு வருகின்றது.
- இதில் வெப்பமண்டலப் பகுதிகள் அதிகமாகக் குறைந்து வரும் உயிரினங்களைக் கண்டுள்ளன.

## சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் வருடாந்திர அறிக்கை

- மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சகமானது தனது வருடாந்திர அறிக்கை 2019-20 என்ற ஒன்றை வெளியிட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் 22 மாநிலங்களில் ஏறத்தாழ 11,467 ஹெக்ட்டேர் வன நிலங்கள் மற்ற பயன்பாட்டிற்கு வேண்டி மடை மாற்றப் பட்டுள்ளதாக இந்த அறிக்கை கூறுகின்றது.
- இந்தப் பயன்பாட்டு மாற்றமானது வனப் பாதுகாப்புச் சட்டம், 1980 என்ற சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- மேற்கொள்ளப்பட்ட மொத்தப் பயன்பாட்டு மாற்றங்களில், மூன்றில் 1 பங்கு மாற்றங்கள் ஒடிசாவில் உள்ள திட்டங்களுக்காக மேற்கொள்ளப் பட்டுள்ளன.
- ஆனால் அதிக எண்ணிக்கையிலான திட்டங்கள் ஹரியானாவில் உள்ளன.

## ஆசியச் சிங்கங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

- சமீபத்தில் கிர் வனப் பகுதியில் ஆசியச் சிங்கங்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளதாக குஜராத் மாநில வனத்துறை அறிவித்துள்ளது.
- இங்கு 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் படி 523 ஆக இருந்த சிங்கங்களின் எண்ணிக்கை தற்போது 2020 ஆம் ஆண்டில் 674 ஆகப் பதிவாகி உள்ளது.
- கடைசியாக 2015 ஆம் ஆண்டில் பதிவான கணக்கெடுப்பிலிருந்து தற்போது சிங்கங்களின் எண்ணிக்கையானது 29% அளவு அதிகரித்துள்ளது.
- இந்த எண்ணிக்கையானது 15வது சிங்கங்கள் கணக்கெடுப்பிற்குப் பதிலாக மேற்கொள்ளப்பட்ட "பூனம் அவ்லோகன்" என்று அழைக்கப்படும் ஒரு எண்ணிக்கை கண்காணிப்பு நடவடிக்கையிலிருந்து கணக்கிடப் பட்டுள்ளது.
- பூனம் அவ்லோகன் என்பது ஒவ்வொரு முழு நிலவின் போதும் மேற்கொள்ளப் படும் ஒரு மாதாந்திர உள்ளக நடவடிக்கையாகும்.

- வழக்கமான சிங்கக் கணக்கெடுப்பானது 1965 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் நடத்தப் படுகின்றது.
- கடைசியான சிங்கக் கணக்கெடுப்பானது 2015 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- இது 2015 ஆம் ஆண்டில் 22,000 சதுர கிலோ மீட்டர் அளவில் நடத்தப்பட்டது.
- இது 2020 ஆம் ஆண்டில், 30,000 சதுர கிலோ மீட்டர் என்ற அளவிற்கு விரிவுபடுத்தப் பட்டுள்ளது.
- ஆசியச் சிங்கங்கள் பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் சிவப்புப் பட்டியலில் அருகிவரும் உயிரினமாகப் பட்டியலிடப் பட்டுள்ளது.
- இந்தியாவில், ஆசியச் சிங்கங்கள் வன விலங்குப் பாதுகாப்புச் சட்டம், 1972 என்ற சட்டத்தின் கீழ் வரும் அட்டவணை 1 என்பதின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.
- "ஆசியச் சிங்கங்கள் பாதுகாப்புத் திட்டமானது" மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சகத்தினால் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 3 நிதியாண்டுக் காலத்திற்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.
- தற்பொழுது இவை கிர் தேசியப் பூங்காவில் மட்டுமே காணப்படுகின்றன.
- கிர் தேசியப் பூங்கா குஜராத்தின் ஜூனாகத் மாவட்டத்தில் உள்ளது.
- கிர் ஆனது "மால்தாரிஸ்" என்ற பழங்குடியினருடன் தொடர்புடையதாக விளங்குகின்றது.
- மால்தாரிஸ் என்பது கிர் வனப் பகுதியில் வாழும் ஒரு சமயம் சார்ந்த ஆயர் குலச் சமூகமாகும்.

**GROWING NUMBERS**

| Year | Adult | | Subadult | Cubs | Total |
|---|---|---|---|---|---|
| | Male | Female | | | |
| 1990 | 99 | 95 | 27 | 63 | 284 |
| 1995 | 94 | 100 | 39 | 71 | 304 |
| 2001 | 101 | 114 | 57 | 55 | 327 |
| 2005 | 89 | 124 | 72 | 74 | 359 |
| 2010 | 97 | 162 | 75 | 77 | 411 |
| 2015 | 109 | 201 | 73 | 140 | 523 |
| **2020** | **159** | **262** | **115** | **138** | **674** |




Source: Gujarat state forest and environment department sources

## அயற்பண்புடைய உயிரினங்களின் இறக்குமதி

- சமீபத்தில் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சகமானது உயிருள்ள அயற்பண்புடைய உயிரினங்களின் இறக்குமதி குறித்த அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது.
- இந்தப் புதிய வழிகாட்டுதல்களின் படி, உயிருள்ள அயற்பண்புடைய உயிரினங்கள் CITES (Convention of International Trade in Endangered Species - அருகிவரும் உயிரினங்களின் மீது சர்வதேச வர்த்தகம் குறித்த ஒப்பந்தம்) என்பதின் பட்டியல் I, II, மற்றும் III-ன் கீழ் மட்டுமே கட்டுப்படுத்தப் படுகின்றன என்று இந்த அமைச்சகம் கூறியுள்ளது.

- CITESன் பட்டியல் I-ன் கீழ் வர்த்தகம் நடைபெறுவதில்லை.
- பட்டியல் II-ன் கீழ், வர்த்தகமானது சிறு அளவிலான அனுமதியுடன் மட்டுமே அனுமதிக்கப் படுகின்றது.
- பட்டியல் III-ன் கீழ், பட்டியலிடப்பட்டுள்ள அதிக எண்ணிக்கையிலான பறவைகள் மற்றும் விலங்கினங்கள் மீது வர்த்தகம் செய்யலாம்.
- உயிருள்ள அயற் பண்புடைய உயிரினங்கள் என்பவை தமக்குச் சொந்தமான இடத்திலிருந்துப் புதிய இடங்களுக்குச் செல்லும் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் என்பதைக் குறிப்பதாகும்.
- இந்தியாவில் காணப்படும் உயிருள்ள அயற் பண்புடைய உயிரினங்களில் மிகவும் பிரபலமானவை பந்து வகை மலைப்பாம்பு, கருஞ்சிவப்புக் கிளி, கடல் ஆமைகள், சுகர் க்ளைடர் என்ற விலங்கினம் (பெட்டாரஸ் பிரேவிசெப்ஸ்), சிறிய குரங்கு வகை உயிரினம் மற்றும் சாம்பல் வண்ண ஆப்பிரிக்கக் கிளிகள் ஆகியவையாகும்.




## லோனார் ஏரி

- பல்வேறு ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட ஒரு குழுவானது மகாராஷ்டிராவின் லோனார் ஏரியானது ஏன் இளஞ்சிவப்பு நிறமாக மாறியுள்ளது என்பது குறித்து ஆய்வு செய்ய இருக்கின்றது.
- இந்த நீர்நிலையில் உள்ள உப்புத் தன்மை மற்றும் பாசிகளின் இருப்பு ஆகியவை இதற்குக் காரணம் என்று சில வல்லுநர்கள் கூறுகின்றனர்.
- லோனார் பள்ள ஏரியானது 1823 ஆம் ஆண்டில் ஆங்கிலேய அதிகாரியான CJE அலெக்சாந்தர் என்பவரால் ஒரு தனித்துவப் புவியியல் இடமாக அடையாளம் காணப் பட்டுள்ளது.
- இது மகாராஷ்டிராவில் விண்கல் வீழ்ந்ததனால் உருவாக்கப்பட்ட மிகப் பழமையான ஒரு வட்டவடிவ ஏரியாகும்.
- லோனார் பள்ளமானது 1979 ஆம் ஆண்டில் ஒரு புவியியல் பாரம்பரியத் தளமாக உருவெடுத்துள்ளது.
- இது 50,000 ஆண்டுகளுக்கு முன்பு உருவான ஏறக்குறைய ஒரு மிக இளமையான புவியியல் பகுதியாகும்.
- லோனார் ஏரியானது இந்தியாவில் உள்ள ஒரு மிகப்பெரிய பசால்ட் (பாறைவகை) உருவாக்கமான தக்காண மடிப்புப் பகுதியில் காணப்படும் வேற்றுக் கிரகப் பொருள்

மூலமான தாக்கத்தினால் உருவான பள்ளத்தில் அமைந்துள்ளது.




## மலபார் வழுக்குத் (Gliding) தவளை

- சமீபத்தில் ஒரு அரிய வகை நீர்நில அல்லது ஈரிட வாழ் வகைப் பிராணியான மலபார் வழுக்குத் தவளையானது கேரளாவின் புல்லட்டு என்ற பகுதியில் காணப் பட்டுள்ளது.
- நீர்-நிலப் பிராணியான இது மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியின் மழைக் காடுகளில் மட்டுமே காணப் படுகின்றது.

## பவளப் பாறைகள் வெளுத்தல்

- ஏறத்தாழ 21 தீவுகளில் பரவியுள்ள மன்னார் வளைகுடா ஆனது வாழ்வாதாரம் தொடர்பாக ஏற்படும் மனித அச்சுறுத்தல்கள் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றினால் ஏற்பட்ட பாதிப்புகளின் காரணமாக மிகப்பெரிய அளவில் பாதிப்பு அடைந்துள்ளது.



- இந்தத் தீவுகள் மற்றும் பவளப் பாறைகள் கூட்டாக இணைந்து மன்னார் வளைகுடா கடல்சார் தேசியப் பூங்காவை அமைக்கின்றன.
- GOMல் (Gulf of Mannar) உள்ள பவளப்பாறைகள் பெரும்பாலும் கோடைக் காலத்தில் நீரின் வெப்பநிலை 30° செல்சியசிற்கு மேல் செல்லும் போது வெளுத்துப் போகின்றன. ஆனால் ஆகஸ்ட் மாதத்தில் நீரின் வெப்பநிலை குறைந்த பின் இவை மீண்டும் மீட்சி பெறுகின்றன.
- சமீபத்திய ஒரு ஆய்வின்படி ஆம்பன் மற்றும் நிசர்கா புயல்கள் மன்னார் வளைகுடாவில் உள்ள பவளப் பாறைகளை அதிக அளவில் வெளுத்துப் போவதிலிருந்துப் பாதுகாத்துள்ளன.
- இந்த 2 குறைந்த காற்றழுத்தத் தாழ்வுகளுடன் கூடிய புயல் காற்றுகள் கோடைக் காலத்தில் கடல் நீரின் வெப்பநிலையை குறிப்பிடத்தக்க அளவில் குறைத்துள்ளன.
- தற்பொழுதைய காலநிலையானது இதே நிலையில் நீடித்தால் பவளப் பாறைகள் எந்தவொரு இறப்பும் ஏற்படாமல் ஜூலை மாத இறுதியில் முழுவதும் மீட்சி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- கடலில் கழிவுநீர் குறைவாகக் கலத்தல், தொழிற்சாலை & மனித நடவடிக்கைகள், பொது முடக்கத்தின்போது மீன் பிடிக்கத் தடை ஆகியவை மீன்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, பவளப் பாறையின் வளம், மற்றும் பவளப் பாறைகள் வேகமாக மீட்சி பெறுதல் ஆகியவற்றிற்கு உதவி புரிகின்றன.


## சிச்சோதோரக்ஸ் சிகுசிருமென்சிஸ்

- “சிச்சோதோரக்ஸ் சிகுசிருமென்சிஸ்” (Schizothorax sikusirumensis) என்ற ஒரு புதிய வகை மீன் இனமானது அருணாச்சலப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இந்த மீன் இனத்தின் பெயரானது இந்த மீன் இனம் காணப்படும் நதிகளின் பெயர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.
- இவை சிர்ரம் மற்றும் சிகு ஆகிய 2 நதிகளாகும்.

## இந்தியப் பகுதியின் மீதான காலநிலை மாற்றம் குறித்த முதலாவது ஆய்வு

- மத்தியப் புவி அறிவியல் துறை அமைச்சகமானது இந்த அறிக்கையை வெளியிட்டு உள்ளது.
- இது எதிர்வரும் நூற்றாண்டில் இந்தியத் துணைக் கண்டத்தில் புவி வெப்பமடைமாதலின் தாக்கம் குறித்த இந்தியாவின் முதலாவது தேசியக் கணிப்பு ஆகும்.
- இது 2022 ஆம் ஆண்டில் தயாராகும் என்று எதிர்பார்க்கப்படும் காலநிலை மாற்றம் குறித்த அரசாங்கங்களுக்கிடையேயான குழுவின் (IPCC - Intergovernmental Panel on Climate Change) அடுத்த அறிக்கையின் ஒரு பகுதி ஆகும்.
- இந்தக் கணிப்புகள் புனேவில் உள்ள இந்திய வெப்பமண்டல வானவியல் மையத்தில் உருவாக்கப்பட்டுள்ள காலநிலைக் கணிப்பு மாதிரியை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- இது தற்போதைய நிலையில் மனித நடவடிக்கைகள் பசுமை இல்ல வாயுக்களைத் தொடர்ந்து உமிழ்ந்து கொண்டிருந்தால் இந்த நூற்றாண்டின் இறுதியில் உலகளாவிய சராசரி மேற்பரப்பு வெப்பநிலையானது 5° செல்சியஸ் என்ற அளவில் அதிகரிக்கும் என்பதைக் குறிக்கின்றது.

- இந்தியாவின் சராசரி மேற்பரப்பு வெப்பநிலையானது 1976 மற்றும் 2005 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலக்கட்டத்துடன் ஒப்பிடப்படும் போது 2100 ஆம் ஆண்டின் இறுதியில் 4.4° செல்சியஸ் என்ற அளவிற்கு அதிகரிக்கும்.
- நாட்டின் சராசரி வெப்பநிலையானது 1900 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்துடன் ஒப்பிடப்படும் போது 0.7° செல்சியஸ் என்ற அளவில் அதிகரித்து உள்ளது.




## ஆர்க்டிக் கடற் பனி

- சமீபத்தில் தேசிய துருவ மற்றும் கடல் ஆராய்ச்சி மையமானது (NCPOR - National Centre of Polar and Ocean Research) கடந்த 41 ஆண்டுகளில் ஆர்க்டிக் கடற் பனியானது அதிகளவில் குறைந்துள்ளது என்பதைக் கண்டறிந்துள்ளது.
- கடற் பனியானது பூமியின் மேற்பரப்பில் 7%த்தையும் உலகின் கடற்பகுதியில் 12%த்தையும் உள்ளடக்கியுள்ளது.
- NCPOR ஆனது 1998 ஆம் ஆண்டில் மத்தியப் புவி அறிவியல் துறை அமைச்சகத்தின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையமாக, ஒரு தனிச் சுதந்திர அமைப்பாக நிறுவப் பட்டுள்ளது.
- இது கோவாவில் அமைந்துள்ளது.
- NCPOR என்பது துருவ மற்றும் தெற்கு கடற் பகுதியில் இந்தியாவின் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இந்தியாவின் ஒரு தலைமை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனமாகும்.
- ஆர்க்டிக் கடலானது வட அரைக்கோளத்தின் மத்தியில் ஆர்க்டிக் வட துருவப் பகுதியில் அமைந்துள்ளது.
- ஆர்க்டிக் கடலானது உலகில் உள்ள 5 முக்கியமான கடல்களிடையே மிகச் சிறியதாகவும் ஆழம் குறைந்த கடலாகவும் உள்ளது. இது உலகில் உள்ள அனைத்துக் கடல்களிடையே "குளிர்ச்சி மிக்க கடலாகவும்" அறியப் படுகின்றது.

## "தி திங்" (The Thing)

- 2011 ஆம் ஆண்டில் சிலியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழுவானது அண்டார்டிகாவின் செய்மோர் தீவில் ஒரு புதை படிவத்தை (68 மில்லியன் ஆண்டுகள் பழமையான முட்டை) கண்டுபிடித்துள்ளது.

- அன்று முதல் இந்தப் புதை படிவமானது சிலியில் உள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப் பட்டுள்ளது. இதற்கு "தி திங்" (The Thing) என்று பெயரிடப்பட்டுள்ளது.
- வடிவத்தின் அடிப்படையில் (29 by 20 செ.மீ) இரண்டாவது மிகப்பெரிய முட்டை இதுவாகும்.
- மடகாஸ்கர் யானைப் பறவை முட்டைக்கு (அழிந்து போனது) அடுத்தபடியாக இரண்டாவது மிகப்பெரிய முட்டை இதுவாகும். மேலும் மிகப்பெரிய மென்மையான ஓட்டைக் கொண்ட முட்டை இதுவாகும்.



## ஸ்டெகோடான் புதை படிவம்

- ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட ஒரு குழுவானது அழிந்து போன யானை சந்ததியின் (முந்தைய) புதை படிவத்தைக் கண்டறிந்துள்ளது.
- இது ஏறத்தாழ 5 முதல் 8 மில்லியன் ஆண்டுகள் பழமையானது என்று கணிக்கப் பட்டுள்ளது.
- இந்தப் புதைபடிவமானது உத்தரப்பிரதேசத்தின் சஹரன்பூர் மாவட்டத்தில் உள்ள பாத்ஷாகி பாக் பகுதியில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இது இமயமலையின் சிவாலிக் வரம்பின் தோக் பதான் பகுதியில் கண்டறியப் பட்டுள்ளது.
- இது ஸ்டெகேடான் (மறைந்த பிளாய்ஸ்டோசீன் காலம் வரை காணப்பட்ட, தற்பொழுது அழிந்து போன யானை வகை) ஆக இருக்கலாம் என்று கூறப் படுகின்றது.



## இந்தியாவில் சுடர்க்கரி நீக்கல் முறை போக்குவரத்து

- நிதி ஆயோக் ஆனது இந்தியாவில் சுடர்க்கரி நீக்கல் முறை போக்குவரத்துத் திட்டத்தைத் தொடங்க இருக்கின்றது.
- இந்தத் திட்டமானது சர்வதேசப் போக்குவரத்து மன்றத்துடன் (ITF - International Transport Forum) இணைந்து மேற்கொள்ளப் படுகின்றது.

- இது நாட்டில் போக்குவரத்தின் காரணமாக ஏற்படும் கார்பன் டை ஆக்சைடின் உமிழ்வைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் சுடர்க்கரி நீக்கல் முறை போக்குவரத்து முன்னெடுப்பானது DTEE (Decarbonising Transport in Emerging Economies) என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- DTEE என்பது வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளில் சுடர்க்கரி நீக்கல் முறை போக்குவரத்து என்பதைக் குறிக்கின்றது.
- DTEE என்பது அர்ஜெண்டினா, மொராக்கோ, மற்றும் அசர்பைஜான் ஆகிய பங்கேற்பாளர்களைக் கொண்ட ITFன் ஒரு திட்டமாகும்.
- ITF என்பது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்புடன் உள்ள அரசாங்கங்களுக்கிடையேயான ஒரு அமைப்பாகும்.

## தில்லாரி வனப் பகுதி

- மகாராஷ்டிரா மாநில வனத் துறையானது அதன் கடலோர மாவட்டமான சிந்துதுர்கா மாவட்டத்தின் தோடாமார்க் மற்றும் சாவந்த்வாடி பகுதியில் உள்ள தில்லாரி வனப் பகுதியை பாதுகாக்கப்படும் ஒரு காப்பு வனப் பகுதியாக அறிவித்துள்ளது.
- தில்லாரி வனச் சூழலமைப்பானது புலிகளுக்கு உகந்ததாக உள்ளது. இது சஹ்யாத்ரி புலிகள் காப்பகத்திற்கான ஒரு மூலதாரமாகவும், புலிகளுக்கு வேண்டிய ஒரு வாழிடமாகவும் விளங்குகின்றது.

## சட்ட விரோத வனவிலங்கு வர்த்தகம் குறித்த அறிக்கை

- சமீபத்தில் சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகம் குறித்த அறிக்கையானது நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவினால் (FATF - Financial Action Task Force) வெளியிடப் பட்டுள்ளது.
- இது "நிதி மோசடி மற்றும் சட்டவிரோத வனவிலங்கு வர்த்தக அறிக்கை" என்று அழைக்கப் படுகின்றது.




## இந்தியாவில் புலிகள் இறப்பு

- இந்தியாவில் கடந்த 8 ஆண்டுகளில் (2012-19) 750 புலிகள் இறந்துள்ளதாக தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையம் அறிவித்துள்ளது.

- மத்தியப் பிரதேச மாநிலமானது அதிக எண்ணிக்கையிலான (173) புலிகள் இறப்பைப் பதிவு செய்துள்ளது.
- மகாராஷ்டிரா மாநிலமானது இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான (125) புலிகள் இறப்பைப் பதிவு செய்துள்ளது.

## ஓசோன் அளவுகளில் அதிகரிப்பு

- சமீபத்தில், அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையமானது நாட்டின் பல நகரங்களில் ஓசோனின் (தீங்கு விளைவிக்கும் மாசுபொருள்) அளவு அதிகரிப்பதைக் கண்டறிந்து உள்ளது.
- ஓசோன் என்பது முதன்மையாக இந்தியாவில் ஒரு "கோடைக்கால வானிலைப் பிரச்சினை" ஆகும். ஏனெனில் சூரிய ஒளியின் இருப்பு நிலத்தடி மட்ட அளவில் இருக்கும் ஓசோன் உருவாக்கத்தின் மீது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- அதில் வெப்பம் ஒரு வினையூக்கியாகச் செயல்பட்டு ஒளி வேதியியல் எதிர் வினைகளை எளிதாக்குகிறது, எனவே கோடைக்கால மாதங்களில் ஓசோனின் அதிக செறிவு காணப்படுகிறது.
- அதிவேகக் காற்று, இடைப்பட்ட மழை, இடியுடன் கூடிய மழை, அதிக வெப்பநிலை மற்றும் வெப்ப அலைகள் ஆகியவை கோடைக்கால மாசுபாட்டின் பண்புகளாகும்.
- வழக்கமாக, குளிர்கால நிலைமைகள் குறையும் போது ஓசோனின் அளவு அதிகரிக்கும். மேலும் அதன் இருப்பு பகலில் அதிகமாக உணரப்படுகிறது.
- ஓசோனானது எந்த ஒரு மூலத்தாலும் நேரடியாக வெளியேற்றப் படுவதில்லை.
- சூரிய ஒளி மற்றும் வெப்பம் ஆகியவற்றின் கீழ், நைட்ரஜனின் ஆக்சைடுகள், பிற எளிதில் ஆவியாகிற கரிமச் சேர்மங்கள் மற்றும் காற்றில் உள்ள வாயுக்கள் ஆகியவற்றுக்கு இடையிலான ஒளி வேதியியல் எதிர்வினைகளால் இது உருவாகிறது.
- பூமியின் ஓசோன் அடுக்கில் இருக்கும் 'நல்ல' ஓசோனானது மனிதர்களைத் தீங்கு விளைவிக்கும் புற ஊதாக் கதிர்வீச்சிலிருந்துப் பாதுகாக்கிறது, அதே சமயம் மிகவும் வினைபுரியும் ஆற்றலைக் கொண்ட தரைமட்ட அளவில் உள்ள ஓசோனானது மனித ஆரோக்கியத்தின் மீது மோசமான தாக்கங்களை ஏற்படுத்தும்.



# மாநிலச் செய்திகள்


## உத்தரகாண்ட் மாநிலத்தின் கோடைக் காலத் தலைநகரம்

- உத்தரகாண்ட் மாநில ஆளுநரான பேபி ராணி மௌரியா கெய்ர்சென் என்பதனை அம்மாநிலத்தின் புதிய கோடைக் காலத் தலைநகராக அறிவிக்கப்படுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.
- மேலும் கெயர்சென் என்பது பாராரைசென் என்றும் அழைக்கப் படுகின்றது.
- அம்மாநிலத்தின் சட்டமன்றமானது குளிர்காலத் தலைநகரான டேராடூனில் அமைந்துள்ளது.
- உத்தரகாண்ட் மாநிலமானது இந்தியாவின் 27வது மாநிலமாக உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்த மாநிலமானது உத்தரப் பிரதேச மாநில மறுசீரமைப்புச் சட்டம், 2000 என்பதன் மூலம் உருவாக்கப் பட்டுள்ளது.




## அதிரப்பள்ளித் திட்டம்

- அதிரப்பள்ளி நீர் மின்சாரத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு வேண்டி மாநில மின்சார வாரியத்திற்கு கேரள அரசானது ஒரு புதிய தடையில்லாச் சான்றிதழை (No-objection certificate) வழங்கியுள்ளது.
- இந்த திட்டத்தின் கீழ், சாலக்குடி ஆற்றில் ஓர் அணையைக் கட்டுவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது.
- சாலக்குடி நதியானது பெரியார் ஆற்றின் ஒரு துணை நதியாகும். இது தமிழ்நாட்டின் ஆனைமலைப் பகுதியில் உருவாகிறது.



## தேகோ அப்னா தேஷ் தொடர்

- சுற்றுலா அமைச்சகமானது இந்த இணையவழித் தொடரின் மூலம் "சத்தீஸ்கரின் மறைத்து வைக்கப்பட்ட புதையல்களை" வெளிப்படுத்துகிறது.
- இதில் கீழே உள்ளவை உள்ளடங்கும்
    - கர்கபட் - பெருங்கற்காலப் புதைகுழி
    - திபாடிஹ் - 7 ஆம் நூற்றாண்டுக்கு முந்தையக் கோயில் வளாகம்.
    - கோத்துல் - ஒரு பழங்காலப் பழங்குடியினர் கல்வி முறை
    - சோனாபாய் - சத்தீஸ்கரின் பிரபலமான அலங்காரப் படைப்புகள்




## மஸ்தகா ஆலயம்

- மகாநதி ஆற்றில் மூழ்கிய 500 ஆண்டுகாலப் பழமையான ஒரு ஆலயமானது ஒடிசாவில் உள்ள பத்மாபதி கிராமத்தில் மீண்டும் நீரின் மட்டத்திற்கு வெளியே தெரியத் தொடங்கியுள்ளது.
- கோபிநாத் தேவ் ஆலயமான இது மஸ்தகா என்றும் அழைக்கப்படுகின்றது.
- சமீபத்தில் தொல்லியல் துறைக் குழுவானது இதை உறுதிப்படுத்தியுள்ளது.



## இமயமலையில் மலையேற்றம் – சிறந்த அனுபவங்கள்

- உத்தரகாண்டில் உள்ள பின்வரும் இடங்கள் மத்திய சுற்றுலாத் துறையின் ஒரு இணைய வழிக் கருத்தரங்குத் தொடரான தேக்கோ அப்னா தேஷ் என்பதின் 32வது அமர்வின் ஒரு பகுதியாக குறிப்பிடப் பட்டுள்ளன.
    - குவாரி கணவாய் – கர்சன் பாதை என்றும் அழைக்கப்படுகின்றது.
    - பிரம்மா தால்
    - போட்டோஸ்கர் – லிங்செட் – படும் மலையேற்றப் பாதையின் ஒரு பகுதி (கிரேட் சான்ஸ்கர் மலையேற்றப் பகுதி என்றும் அழைக்கப்படுகின்றது)
    - ரூப்குந்த்

## பழங்குடியின விடுதிக்கு ISO சான்றிதழ்

- பழங்குடியின மாணவர்களுக்கான விடுதிகளுக்காக ISO (International Organization for Standardization) சர்வதேச தரச் சான்றிதழைப் பெற்ற நாட்டின் முதலாவது மாநிலம் ஒடிசா ஆகும்.
- ஒடிசாவின் எஸ்சி/எஸ்டி நலத் துறையானது மாநிலம் முழுவதும் உள்ள அனைத்துப் பழங்குடியின விடுதிகளுக்கும் ஒரே தரத்திலான கட்டமைப்பு, வசதிகள் மற்றும் மனித வளங்களை அளிப்பதற்காக வேண்டி "சுவித்யா" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- சர்வதேசத் தரப்படுத்துதல் அமைப்பானது ஒரு சர்வதேசத் தர நிர்ணய அமைப்பாக விளங்குகின்றது.
- இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ளது.

## கும்பகர் சசாக்திகரன் யோஜனா

- இது ராஜஸ்தானின் பொக்ரானில் ஆரம்பிக்கப் பட்டது.
- இது நாட்டின் தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் குயவர் சமூகத்தின் மேம்பாட்டிற்காக வேண்டி தொடங்கப்பட்ட காதி மற்றும் கிராமத் தொழிற்துறை ஆணையத்தின் ஒரு முன்னெடுப்பாகும்.
- இந்தத் திட்டமானது உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஜம்மு காஷ்மீர், ஹரியானா, இராஜஸ்தான், மேற்கு வங்காளம், அஸ்ஸாம், குஜராத், தமிழ்நாடு, ஒடிசா, தெலுங்கானா மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களில் உள்ள குயவர்களுக்குப் பயனளிக்க இருக்கின்றது.

## முக்கிய மந்திரி ஷ்ராமிக்


- கேரளா மாநிலத்திற்கு அடுத்தபடியாக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தைத் தொடங்கிய நாட்டின் இரண்டாவது மாநிலம் ஜார்க்கண்ட் ஆகும்.
- இது மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் வரிசையில் அமைய இருக்கின்றது.
- இது அம்மாநிலத்தின் நகர்ப்புறங்களில் வாழும் கல்வித் திறனற்றப் பணியாளர்களுக்கு வேண்டி 100 நாட்களுக்கு வேலை அளிப்பதின் மீது கவனம் செலுத்துகின்றது.
- இது முக்கிய மந்திரி ஷ்ராமிக் (சஹாரி ரோஜ்கர் மஞ்சுரி – காம்கர்) என்று பெயரிடப் பட்டுள்ளது.
- அய்யன்காளி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் என்பது நகர்ப்புற ஏழைகளுக்கான கேரள அரசின் 100 நாள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டமாகும்.

## இந்திரா ரசோய் யோஜனா (இந்திரா சமூக உணவுத் திட்டம்)

- இராஜஸ்தான் மாநில அரசானது இந்தத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது சமூகத்தின் பொருளாதார ரீதியாக பின்தங்கிய வகுப்பினர்களுக்கு தூய மற்றும் ஊட்டச்சத்து மிக்க உணவை அளிக்கக் கூடிய ஒரு திட்டமாகும்.

## வடகிழக்கில் நிலநடுக்கம்

- ரிக்டர் அளவுகோலில் 5.1 அளவு கொண்ட நடுத்தர சக்தி மிக்க நிலநடுக்கமானது மிசோரம், மேகாலயா, மணிப்பூர் மற்றும் இதர வடகிழக்கு மாநிலங்களைத் தாக்கியுள்ளது.
- இந்தியாவின் நிலநடுக்க அபாய வரைபடத்தின் படி, மிசோரம் மற்றும் திரிபுரா ஆகிய 2 மாநிலங்களும் 5வது மண்டலத்தில் (Zone 5) அமைந்துள்ளன.




## குஷிநகர் விமான நிலையம்

- உத்தரப் பிரதேசத்தின் குஷிநகர் விமான நிலையமானது சர்வதேச விமான நிலையமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- குஷிநகர் என்பது கௌதம புத்தர் மகாபரிநிர்வாணா என்ற நிலையை அடைந்த ஒரு புத்த சமயப் புனித நகரமாகும்.

## தேவிகா மற்றும் புனேஜா

- மத்திய வட கிழக்குப் பிராந்திய வளர்ச்சிக்கான இணையமைச்சரான ஜிதேந்திர சிங் ஜம்மு காஷ்மீரில் தேவிகா மற்றும் புனேஜா ஆகிய பாலங்களைத் திறந்து வைத்து உள்ளார்.
- இது எல்லைச் சாலைகள் அமைப்பினால் கட்டப்பட்டுள்ளது.

## ஹரிதா ஹரம்

- தெலுங்கானா மாநில முதல்வரான K. சந்திரசேகர் ராவ் ஹரிதா ஹரம் என்ற திட்டத்தின் 6வது கட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இத்திட்டத்தின் 6வது கட்டத்தின் கீழ், மாநிலம் முழுவதும் 30 கோடி மரக் கன்றுகள் நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## K.K. சைலஜா

- ஐக்கிய நாடுகள் அமைப்பானது கேரள மாநில சுகாதாரத் துறை அமைச்சரான K.K. சைலஜா என்பவரை உலகப் பொதுப் பணி தினம் (ஜுன் 23) குறித்த விவாதக் குழுவிற்கு அழைத்ததன் மூலம் அவரைக் கௌரவித்துள்ளது.
- கோவிட்-19 நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட உத்திகள் குறித்து பேசுவதற்காக வேண்டி இந்தியாவிலிருந்து கௌரவிக்கப்பட்ட பேச்சாளர் இவராவார்.

## சிறு தொழிற்சாலைகள் - கர்நாடகா

- சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழிற்சாலைகளுக்காக வேண்டி தொழிற்சாலைகள் சட்டத்தைத் திருத்தும் முதலாவது மாநில அரசு கர்நாடகா ஆகும்.
- குஜராத் மற்றும் இராஜஸ்தான் ஆகிய 2 மாநிலங்கள் மட்டுமே (சிறிய அளவிலான தொழிற்சாலைகள் மட்டும்) நாட்டில் இதுவரை இச்சட்டத்தைத் திருத்தியுள்ளன.

## ஆத்ம நிர்பர் உத்தரப் பிரதேச ரோஜ்கர் யோஜனா

- இது உத்தரப்பிரதேசத்தின் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கி வைக்கப் பட்டுள்ளது.
- இது உத்தரப் பிரதேசத்தில் 1.25 கோடி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய வகையில் நாட்டின் மிகப்பெரிய ஒரு வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டமாகும்.

## கோதான் நியாய் யோஜனா

- சத்தீஸ்கர் மாநில முதல்வரான பூபேஷ் பாகல் அம்மாநிலத்தில் "கோதான் நியாய் யோஜனா" என்ற ஒரு திட்டம் தொடங்கப் பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.
- இது கால்நடை வைத்திருப்பவர்களிடமிருந்து மாட்டுச் சாணத்தை வாங்கும் முதலாவது இந்திய மாநிலமாக உருவெடுத்துள்ளது.

## ஆந்திர நிதிநிலை அறிக்கை - 2020/21

- ஆந்திர மாநிலம் கோவிட்-19 தொற்றுநோய்க்கு மத்தியில் தனது சட்டமன்றத்தையும் சபையையும் கூட்டிய முதல் இந்திய மாநிலமாக மாறியது.
- ஆந்திர மாநில ஆளுநர் பிஸ்வபூசன் ஹரிச்சந்தன் காணொளி மாநாட்டின் மூலம் அதன் சட்டமன்றத்தில் உரையாற்றினார், இது நாட்டின் இம்மாதிரியான மற்றொரு முதல் நிகழ்வாகும்.
- காபு சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்கு 75000 ரூபாய் நிதியுதவி வழங்க ஆந்திர மாநில அரசானது காபு நேஸ்தம் எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

### நிஷ்டா வித்யுத் மித்ரா திட்டம்

- மத்தியப் பிரதேச மாநிலத்தின் மத்திய சேத்ரா வித்யுத் விட்டரன் என்ற நிறுவனமானது பெண்கள் மேம்பாட்டிற்காக இந்தத் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், கிராமப் பஞ்சாயத்து மட்டத்தில் உள்ள பெண் சுய உதவிக் குழுக்கள் நிஷ்ட வித்யுத் மித்ராவாகச் செயல்படும்.

### முக்கிய மந்திரி மாத்ரு புஷ்டி உபார்

- கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு ஊட்டச் சத்து உதவிகளை வழங்க திரிபுரா அரசானது இந்தத் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த திட்டமானது ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் பேறுகால இறப்புக்கு எதிராக போராடுவதற்கான அரசின் முயற்சிகளின் ஒரு பகுதியாகும்.

### ஒரே சொடுக்கு முயற்சி (At one click Initiaitve)

- குஜராத் மாநில அரசானது இந்த நிகழ்நேர நிதி உதவி முன்னெடுப்பைத் தொடங்கி உள்ளது.
- இது சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் மற்றும் பெரிய தொழிற்துறை நிறுவனங்கள் (ஜவுளித் தொழிற்துறை உள்பட) ஆகியவற்றிற்கு நிதியுதவி அளிக்க உறுதி பூண்டுள்ளது.

## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### 2020 ஆம் ஆண்டின் EY உலகத் தொழிலதிபர்

- கிரண் மஜும்தார் ஷா என்பவர் 2020 ஆம் ஆண்டின் EY உலகத் தொழிலதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- சிங்கப்பூரைச் சேர்ந்த ஹைப்ளக்ஸ் நிறுவனத்தின் ஒலிவியா லும் என்பவருக்குப் பிறகு இந்த விருதிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாவது பெண் தொழிலதிபர் இவராவார்.
- 2014 ஆம் ஆண்டில் கோடக் மகேந்திராவின் உதய் கோடக் மற்றும் 2005 ஆம் ஆண்டில் இன்போசிஸ் நிறுவனத்தின் நாராயண மூர்த்தி ஆகியோருக்குப் பிறகு இந்த விருதை வெல்லும் 3வது இந்தியர் இவராவார்.
- கிரண் 1978 ஆம் ஆண்டில் "பயோகான்" என்ற உயிரி நொதியியல் நிறுவனத்தைத் தொடங்கினார்.

### காமன்வெல்த் சிறுகதைப் பரிசு 2020

- இந்திய எழுத்தாளரான கிருத்திகா பாண்டே என்பவர் ஆசியப் பிராந்தியத்திற்கான காமன்வெல்த் சிறுகதைப் பரிசு 2020 என்ற ஒரு பரிசு வழங்கி கௌரவிக்கப் பட்டு உள்ளார்.
- இவர் "தி கிரேட் இந்தியன் டீ மற்றும் ஸ்னேக்ஸ்" என்ற தனது கதைக்காக இப்பரிசினை வென்றுள்ளார்.


- காமன்வெல்த் சிறுகதைப் பரிசானது காமன்வெல்த் நாடுகளிலிருந்துப் பிரசுரிக்கப் படாத சிறு புனைவுக் கதையின் ஒரு சிறந்த படைப்பிற்காக 2012 ஆம் ஆண்டு முதல் வழங்கப் பட்டு வருகின்றது.
- இந்தப் பரிசானது ஆசியா-பசிபிக், ஆப்பிரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பா, கரீபியன் ஆகிய 5 பிராந்தியத்தைச் சேர்ந்த வெற்றியாளர்களுக்கு வழங்கப் படுகின்றது.

## ரிச்சர்டு டாக்கின்ஸ் விருது

- ஜாவெத் அக்தர் என்பவர் ரிச்சர்டு டாக்கின்ஸ் விருதைப் பெறும் முதலாவது இந்தியராக உருவெடுத்துள்ளார்.
- இந்தியத் திரைப்படத் தொழிற்துறையில் மிகவும் புகழ்பெற்ற பாடலாசிரியர் ஜாவெத் அக்தர் ஆவார்.
- இந்த விருதானது அமெரிக்காவின் நாத்தீக வாதிகளின் கூட்டமைப்பினால் (அரசு சாரா அமைப்பு) வழங்கப் படுகின்றது.
- ரிச்சர்டு டாக்கின்ஸ் என்பவர் ஒரு மனிதப் பண்பியலர், ஆசிரியர் மற்றும் ஆங்கிலப் பரிணாம உயிரியல் வல்லுநர் ஆவார்.

## உலக உணவு விருது 2020

- இந்திய-அமெரிக்க மண்வள ஆராய்ச்சியாளரான டாக்டர் ரத்தன் லால் என்பவர் உலக உணவு விருது அமைப்பினால் வழங்கப்படும் 2020 உலக உணவு விருதினை வென்றுள்ளார்.
- இது இயற்கை வளங்களைப் பாதுகாத்து, காலநிலை மாற்றத்தைக் குறைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் உணவு உற்பத்தி முறையை அதிகரிப்பதற்காக வேண்டிய மண்வள மைய அணுகுமுறையை மேம்படுத்துதல் மற்றும் அந்த முறையை மையப்படுத்துதல் ஆகியவற்றிற்காக வழங்கப்பட்டுள்ளது.
- உலக உணவு விருதானது பொது உணவுக் கழகத்தின் ஆதரவுடன் 1986 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.
- இந்த விருதானது வேளாண் துறைக்கு வழங்கப்படும் நோபல் பரிசிற்குச் சமமானதாகக் கருதப்படுகின்றது.
- இந்த விருதானது ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தில் அனுசரிக்கப்படும் ஐக்கிய நாடுகள் உலக உணவு தினத்தன்று (அக்டோபர் 16) வழங்கப்படுகின்றது
- உலக உணவு விருது அமைப்பானது தற்பொழுது பார்பரா ஸ்டின்சன் என்பவரால் நிர்வகிக்கப் படுகின்றது.
- இது பசுமைப் புரட்சியின் தந்தை என்று அழைக்கப்படும் நோபல் அமைதிப் பரிசு பெற்றவரான நார்மன் போர்லாங் என்பவரால் கருத்துரு கொண்டு ஆரம்பிக்கப் பட்டது.
- இந்த விருதின் முதலாவது வெற்றியாளர் 1987 ஆம் ஆண்டில் இந்தியப் பசுமைப் புரட்சியின் தந்தை என்று அழைக்கப்படும் எம்.எஸ். சுவாமிநாதன் ஆவார்.




## FIFA தரவரிசை

- FIFA தரவரிசையானது வெளியிடப்பட்டுள்ளது.
- இதில் இந்தியக் கால்பந்து அணியானது தனது முந்தைய ஆண்டின் அதே 108வது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.
- இதில் பெல்ஜியம் முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்து பிரான்சு மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் உள்ளன.
- இங்கிலாந்து மற்றும் உருகுவே ஆகிய நாடுகள் முறையே நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களில் தொடர்கின்றன.
- FIFA (Federation Internationale de Football Association) என்பது "சர்வதேச கால்பந்துக் கூட்டமைப்புச் சங்கம்" என்பதைக் குறிக்கின்றது.
- இது கால்பந்து மன்றத்தின் மீதான ஒரு சர்வதேச நிர்வாக அமைப்பாகும்.
- இது சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு 1904 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.

| RNK | TEAM |
|---|---|
| 1 | Belgium |
| 2 | France |
| 3 | Brazil |
| 4 | England |
| 5 | Uruguay |
| 6 | Croatia |
| 7 | Portugal |

## ஆஸ்திரேலிய ஆணை விருது

- இந்திய இசைக் கலைஞர் மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள காலக்கிருதி என்ற இசை அமைப்பின் நிறுவனரான சோபா சேகருக்கு இந்த விருதானது வழங்கப்பட இருக்கின்றது.

- ❖ ஆஸ்திரேலிய ஆணை விருதானது உலகளவில் (அ) உள்ளூரில் உள்ள இசைச் சமூகத்தினர் (அ) ஆஸ்திரேலியாவிற்கு என்று பங்காற்றிய தனிநபர்களுக்கு வழங்கப் படுகின்றது.



## கத்தி லியூடர்ஸ்

- ❖ நாசாவின் மனித ஆய்வு மற்றும் நடவடிக்கைகள் திட்ட இயக்குநரகத்தின் புதிய இணை நிர்வாகியாக கத்தி லியூடர்ஸ் என்பவர் உருவெடுத்துள்ளார்.
- ❖ இது மனித விண்வெளித் திட்டத்தின் முதலாவது பெண் தலைவராக இவரை மாற்றியுள்ளது.

## ஆஸ்கர் விருதுகள்

- ❖ மோசன் பிக்சர்ஸ் கலை & அறிவியல் நிறுவனம் மற்றும் ABC தொலைக்காட்சி அமைப்பு ஆகியவை கோவிட் - 19 நோய்த் தொற்றின் காரணமாக 93வது அகாடமி விருது வழங்கும் நிகழ்ச்சியினை (ஆஸ்கர் விருதுகள்) தள்ளி வைத்துள்ளன.
- ❖ இந்த விருது வழங்கும் விழாவானது கடந்த 40 ஆண்டுகளில் தற்பொழுது முதன்முறையாகத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.
- ❖ இது 2001 ஆம் ஆண்டு முதல் கலிபோர்னியாவின் லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள டால்பி அரங்கில் நடைபெற்று வருகின்றது.

## கிளேர் கானர்

- ❖ முன்னாள் இங்கிலாந்து மகளிர் அணி கிரிக்கெட் கேப்டன் கிளேர் கானர் என்பவர் கடந்த 233 ஆண்டுகளில் மேரிலேபோன் கிரிக்கெட் கிளப்பின் முதல் பெண் தலைவரானார்.
- ❖ அக்டோபர் 1, 2021 அன்று குமார் சங்கக்காராவுக்குப் பிறகு அவர் பொறுப்பேற்பார்.

# விளையாட்டுச் செய்திகள்

## விளையாட்டு விருதுகளுக்கான பரிந்துரை

- ரோகித் சர்மாவின் பெயரானது புகழ்பெற்ற 2020 ஆம் ஆண்டின் ராஜீவ் காந்தி கேல் ரத்னா என்ற விருதிற்காக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தினால் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.
- அர்ஜுனா விருதிற்காக பிசிசிஐ அமைப்பு ஷிகர் தவான், தீப்தி சர்மா மற்றும் இசாந்த் சர்மா ஆகியோரைப் பரிந்துரை செய்துள்ளது.

## கேலோ இந்தியா மாநில சிறப்புமிகு மையங்கள்

- மத்திய விளையாட்டுத் துறை அமைச்சகமானது ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவின் திறனை வலுப்படுத்துவதற்காக வேண்டி "கேலோ இந்தியா மாநில சிறப்புமிகு மையங்கள்" என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- இது 8 மாநிலங்களில், அரசால் நிர்வகிக்கப்படும் விளையாட்டு மையங்களை அடையாளம் கண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட இருக்கும் 8 மையங்கள் அருணாச்சலப் பிரதேசம், கேரளா, கர்நாடகா, மணிப்பூர், நாகாலாந்து, ஒடிசா, தெலுங்கானா மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்களில் உள்ளது.

## 2023 ஆம் ஆண்டின் பெண்கள் உலகக் கோப்பை

- பிபா அமைப்பானது இந்த உலகக் கோப்பைப் போட்டியை நடத்தும் பொறுப்பை ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்திடம் வழங்கியுள்ளது.
- ஆசியா-பசிபிக் பிராந்தியத்தில் நடத்தப்பட இருக்கும் முதலாவது பெண்கள் உலகக் கோப்பை இதுவாகும்.

# முக்கிய தினங்கள்


## உலக பால் தினம் – ஜூன் 01

- இது ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பால் (FAO - Food and Agriculture Organization) அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தாண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு: உலக பால் தினத்தின் 20வது நினைவு தினம் என்பதாகும்.
- உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தியாளர் நாடு இந்தியா ஆகும்.
- இந்தியா நவம்பர் 26 ஆம் தேதியன்று தேசிய பால் தினத்தைக் கொண்டாடுகின்றது.
- இது வர்கீஸ் குரியனின் பிறந்த தினமாகும்.
- இவர் இந்தியாவில் பால் புரட்சியின் தந்தை என்றறியப் படுகின்றார்.
- 1970 ஆம் ஆண்டில் இந்தியாவில் வெள்ளைப் (பால்) புரட்சியைத் தொடங்க வேண்டும் என்பது இவரது கருத்தாக்கமாகும்.




## தெலுங்கானா மாநில உருவாக்க தினம் – ஜுன் 02

- தெலுங்கானா மாநிலமானது 2014 ஆம் ஆண்டு ஜுன் 02 அன்று உருவாக்கப் பட்டது.
- இந்திய ஒன்றியத்தில் உருவாக்கப் பட்ட 29வது மாநிலம் தெலுங்கானா ஆகும்.




## மாதவிடாய் சுகாதார தினம் - மே 28

- இது ஜெர்மனியைச் சேர்ந்த வாஷ் யுனைடெட் என்ற ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் 2014 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- பெரும்பாலான பெண்களுக்கு மாதவிடாய் சுழற்சிக் காலம் சராசரியாக 28 நாட்கள் என்பதாலும் பெரும்பாலான பெண்களுக்கு மாதவிடாய்க் காலம் ஐந்து நாட்கள் என்பதாலும் மே 28 ஆம் தேதியானது தேர்வு செய்யப்பட்டது.
- எனவே, இந்த தினமானது 28/5 என்ற தினத்தில் மேற்கொள்ளப் பட்டது.
- 2020 ஆண்டிற்கான இத்தினத்தின் கருப்பொருள் ‘தொற்றுநோய்க் காலத்தில் மாதவிடாய்’ என்பதாகும்.

## உலக மிதிவண்டி தினம் – ஜுன் 03




- இது மிதிவண்டியின் பயன்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அனுசரிக்கப் படுகின்றது.

- இது 2018 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

## ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவிக் குழந்தைகளுக்கான சர்வதேச தினம் ஜூன் – 4

- இந்தத் தினமானது லெபனான் போரில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நினைவாக 1982 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது. இது ஐக்கிய நாடுகளால் அனுசரிக்கப் படுகின்றது.
- லெபனான் போரானது 2006 ஆம் ஆண்டில் ஏற்பட்டது.
- இந்தப் போரானது இஸ்ரேல் மற்றும் ஹெஸ்புல்லாஹ் ஆகியவற்றிற்கு இடையே மூண்டது.




## உலக சுற்றுச்சுழல் தினம் – ஜூன் 05

- 1972 ஆம் ஆண்டு ஜூன் 05 முதல் 16 வரை சுவீடனின் ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற மனித சுற்றுச்சூழல் குறித்த ஐக்கிய நாடுகள் கருத்தரங்கின் முதலாவது தினத்தைக் குறிப்பதற்காக இத்தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தை ஜெர்மனியுடன் இணைந்து கொலம்பியா நாடானது தலைமையேற்று நடத்துகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “பல்லுயிர்ப் பெருக்கத்தைக் கொண்டாடுதல்” என்பதாகும்.
- 2020 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஹவாயில் உள்ள மௌனா லா ஆய்வகத்தில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வின்படி கார்பன் டை ஆக்ஸைடு ($CO_2$) உமிழ்வுகள் 417 ppm (Parts per million) என்ற அளவை எட்டியுள்ளது.
- இது 2019 ஆம் ஆண்டு மே மாதத்தில் பதிவான 414.8 ppm என்ற $CO_2$ அளவை விட அதிகமாகும்.

## சட்டவிரோத, பதிவு செய்யப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன் பிடித்தலைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் – ஜூன் 05

- இது ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பினால் (FAO - Food and Agriculture Organization) அனுசரிக்கப் படுகின்றது.
- இது 2018 ஆம் ஆண்டில் முதன்முறையாக அனுசரிக்கப் பட்டது.

- 2016 ஆம் ஆண்டு, ஜூன் 05 அன்று "FAO அரசு துறைமுக நடவடிக்கை ஒப்பந்தம்" எனப்படும் சட்டவிரோத மீன்பிடித்தலை ஒழிப்பதற்கான சர்வதேச ஒப்பந்தமானது நடைமுறைக்கு வந்தது.
- சட்டவிரோத மீன் பிடித்தல் மீதான முதலாவது சர்வதேச ஒப்பந்தம் இதுவாகும்.

## இரஷ்ய மொழி தினம் – ஜூன் 06

- ஐக்கிய நாடுகளானது இரஷ்ய மொழி தினத்தை அனுசரிக்கின்றது.
- இது 2010 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் ஏற்படுத்தப் பட்டது.
- இது அலெக்சாந்தர் புஸ்கின் என்பவரின் பிறந்த தினத்தன்று அனுசரிக்கப் படுகின்றது.
- இவர் ஒரு ரஷ்யக் கவிஞர் ஆவார். இவர் நவீன ரஷ்ய இலக்கியத்தின் தந்தையாகக் கருதப் படுகின்றார்.
- ஐக்கிய நாடுகள் மொழிகளுக்கான தினங்களானது கலாச்சாரப் பன்முகத்தன்மை மற்றும் பன்மொழிக் கலாச்சாரத்தை அனுசரிப்பதற்காக 2010 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஏற்படுத்தப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் மொழிகளுக்கான தினங்களானது இந்த அமைப்பின் 6 அதிகாரப் பூர்வ (அலுவல்) மொழிகளை ஊக்குவிக்கின்றது.
- ஆங்கிலம், அரபி, சீனம், ஸ்பானியம், ரஷ்யா மற்றும் பிரெஞ்சு ஆகியவை இந்த அமைப்பின் அலுவல் மொழிகளாகும்.




## உலக உணவுப் பாதுகாப்பு தினம் – ஜூன் 07

- இது 2019 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளால் தொடங்கப் பட்டது.
- இந்தத் தினமானது 2019 ஆம் ஆண்டில் "உணவுப் பாதுகாப்பின் எதிர்காலம்" என்பது குறித்த ஜெனீவா கருத்தரங்கு மற்றும் அடிஸ் அபாபா கருத்தரங்கு ஆகியவற்றினால் மேற்கொள்ளப்பட்ட அழைப்பிற்கு வலுசேர்ப்பதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "உணவுப் பாதுகாப்பு அனைவரது கடமை" என்பதாகும்.
- அடிஸ் அபாபா கருத்தரங்கானது உணவுப் பாதுகாப்பு குறித்த முதலாவது சர்வதேசக் கருத்தரங்காகும்.




## உலகப் பெருங்கடல் தினம் – ஜூன் 08

- இது ஐக்கிய நாடுகளால் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ஒரு நீடித்தப் பெருங்கடலுக்கான புத்தாக்கம்" என்பதாகும்.
- உலக நாடுகள் 1992 ஆம் ஆண்டில் ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி குறித்த ஐக்கிய நாடுகள் கருத்தரங்கைத் தொடர்ந்து இத்தினத்தை அனுசரித்து வருகின்றன.
- ஐக்கிய நாடுகள் 2009 ஆம் ஆண்டு முதல் இத்தினத்தை அனுசரிக்க முடிவு செய்தது.




## உலக மூளைக் கட்டி தினம் – ஜூன் 08

- 2000 ஆம் ஆண்டு முதல், உலக மூளைக் கட்டி தினமானது ஜூன் 08 ஆம் ஆண்டு தேதியன்று அனுசரிக்கப்படுகின்றது.
- இது ஜெர்மன் மூளைக் கட்டி மன்றத்தினால் முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.
- இந்திய அரசானது இந்நோயைத் தடுத்தல், சோதனை செய்தல், முன்கூட்டியே கண்டறிதல், பரிசோதித்து அறிதல், இறுதி நிலையில் வலி நிவாரண முறை உள்ளிட்ட சிகிச்சைகளுடன் தேசியப் புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

## பவளப் பாறை முக்கோணப் பகுதி தினம் – ஜுன் 09

- ❖ இது பவளப் பாறை முக்கோணப் பகுதியின் ஒரு மிகப்பெரிய அனுசரிப்பாகும்.
- ❖ இது உலகில் கடல்சார் பல்லுயிர்ப் பெருக்கத்தின் முக்கியமான மையமாகும்.
- ❖ இது காங்கோ படுகை மற்றும் அமேசான் மழைக் காடுகளுடன் இணைந்து நமது பூமியில் அமைந்த 3 மிகப்பெரிய சூழலியல் மண்டலங்களில் ஒன்றாக விளங்குகின்றது.
- ❖ இது ஆசிய – பசிபிக் பகுதிகளில் உள்ள இந்தோனேசியா, மலேசியா, பப்புவா நியூ கினியா, பிலிப்பைன்ஸ், சாலமன் தீவுகள் மற்றும் திமோர் லெஸ்டி ஆகிய 6 நாடுகளின் பெருங்கடல்களில் காணப்படுகின்றது.




## உலக அங்கீகார தினம் – ஜுன் 09

- ❖ இத்தினத்தை அனுசரிக்கும் ஒரு முன்னெடுப்பானது சர்வதேச அங்கீகார மன்றம் மற்றும் சர்வதேச ஆய்வக அங்கீகாரக் கூட்டிணைவு ஆகியவற்றினால் தொடங்கப் பட்டுள்ளது.
- ❖ இத்தினத்திற்கான இந்த ஆண்டின் கருத்துரு, “அங்கீகாரம், உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துதல்” என்பதாகும்.
- ❖ இந்தியாவில், இத்தினமானது இந்தியத் தர ஆணையத்தினால் அனுசரிக்கப் படுகின்றது.
- ❖ இந்தியத் தர ஆணையமானது 1997 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.



- இது நெதர்லாந்து நாட்டு மாதிரியை அடிப்படையாகக் கொண்டு பொதுத் தனியார் பங்களிப்பாக அமைக்கப்பட்டுள்ளது.
- இது மத்திய தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையினால் அமைக்கப் பட்டதாகும்.

## குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான உலக தினம் – ஜுன் 12




- இது 2002 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பான சர்வதேசத் தொழிலாளர் அமைப்பினால் (ILO - International Labour Organization) அனுசரிக்கப் படுவதற்கு வேண்டி தொடங்கப் பட்டது.
- ILOவின்படி, ஆப்பிரிக்கப் பிராந்தியமானது உலகில் அதிக எண்ணிக்கையிலான குழந்தைத் தொழிலாளர்களைக் கொண்டுள்ளது.
- தொழிற்பணியில் ஈடுபட்டுள்ள 10 குழந்தைகளில் 9 குழந்தைகள் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் பசிபிக் ஆகிய பிராந்தியங்களில் உள்ளனர்.
- இந்த ஆண்டில், இத்தினமானது "கோவிட் – 19/எப்பொழுதையும் விட தற்பொழுது குழந்தைத் தொழிலிருந்துக் குழந்தைகளைப் பாதுகாத்தல்" என்பதின் மீது கவனம் செலுத்துகின்றது.

## உலக இரத்த தான தினம் – ஜுன் 14

- இது ஏபிஓ என்ற ரத்தக் குழு வகை உள்ளிட்ட பல்வேறு இரத்தக் குழுக்களைக் கண்டுபிடித்தவரான கார்ல் லேண்ட்ஸ்டெய்னர் என்பவரது பிறந்த நாளில் அனுசரிக்கப் படுகின்றது.



- இந்தக் கண்டுபிடிப்பானது இவரை 1930 ஆம் ஆண்டில் நோபல் பரிசினை வெல்ல வைத்தது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "இரத்தத்தைப் பாதுகாத்தல் உயிரைப் பாதுகாத்தல்" என்பதாகும். இதன் முழக்கம் "இரத்தத்தைத் தானம் செய்து, உலகை ஆரோக்கியமான இடமாக்கு" என்பதாகும்.

## உலக முதியோர் கொடுமைப்படுத்தல் விழிப்புணர்வு தினம் – ஜுன் 15

- இது ஜுன் 15 அன்று ஐக்கிய நாடுகளால் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அவர்களின் குரலை உயர்த்துதல்" என்பதாகும்.
- இந்த ஆண்டு உலக சுகாதார நிறுவனமானது "கோவிட் – 19னின் போதும் அதற்குப் பிறகும் முதியோர்களைப் பாதுகாத்தல்" என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கி உள்ளது.

## உலகக் காற்று தினம் – ஜுன் 15

- இது 2009 ஆம் ஆண்டில் ஐரோப்பியக் காற்று ஆற்றல் மன்றம் (EWEA - European Wind Energy Association) மற்றும் உலகளாவியக் காற்று ஆற்றல் ஆணையம் (GWEC - Global Wind Energy Council) ஆகியவற்றினால் ஏற்படுத்தப்பட்டது.

## வெளிநாட்டிலிருந்து குடும்பத்திற்குப் பணத்தை அனுப்புதலுக்கான சர்வதேச தினம் – ஜுன் 16

- இது 2015 ஆம் ஆண்டு முதல் ஜுன் 16 அன்று ஐக்கிய நாடுகளினால் அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "வெளிநாட்டிலிருந்துத் தாய்நாட்டிற்கு பணத்தை அனுப்புதல் என்பது ஓர் உயிர்ப்பாதை" என்பதாகும்.
- வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு அனுப்பப் படும் பணமானது 2019 ஆம் ஆண்டில் 83 பில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது.

## பாலைவனமாக்கல் மற்றும் வறட்சியை எதிர்த்துப் போராடுவதற்கான உலக தினம் – ஜுன் 17

- பாலைவனமாக்கலை எதிர்த்துப் போராடுவதற்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தமானது வரைவு செய்யப்பட்ட பிறகு 1995 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளினால் இத்தினமானது பறை சாற்றப் பட்டது.



- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உணவு, நார்ப் பொருளை உட்கொள்தல் – நுகர்வு மற்றும் நிலத்திற்கிடையிலான தொடர்புகள்" என்பதாகும்.

## உலக முதலை தினம் – ஜுன் 17

- இந்தியா 3 முதலை இனங்களுக்கு வாழிடமாகத் திகழ்கின்றது. அவையாவன:
  - சதுப்பு நில முதலை
  - உவர் நீர் முதலை (அ) செம்மூக்கு முதலை மற்றும்
  - கரியால்
- சதுப்பு நில முதலையானது பெரும்பாலும் ஏரிகள், ஆறுகள் மற்றும் சதுப்பு நிலங்கள் ஆகியவற்றில் காணப்படும் ஒரு நன்னீர் வகை உயிர் இனமாகும்.
- இது இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் காணப்படுகின்றது.
- உவர்நீர் முதலையானது ஒடிசாவின் பித்தர்கனிகா தேசியப் பூங்கா, மேற்கு வங்காளத்தில் உள்ள சுந்தரவனக் காடுகள், அந்தமான் நிக்கோபர் தீவுகள் ஆகியவற்றில் காணப்படுகின்றது.
- கரியால் பெரும்பாலும் இமயமலையில் உற்பத்தியாகும் ஆறுகளில் காணப் படுகின்றது.
- இது "மிக அருகிய இனமாகப்" பட்டியலிடப் பட்டுள்ளது.
- தேசிய சம்பல் கரியால் வனவிலங்குச் சரணாலயம் என்றும் அழைக்கப்படும் தேசிய சம்பல் சரணாலயமானது வட இந்தியாவில் உள்ள ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதி ஆகும்.
- இது இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப்பிரதேசம் ஆகிய 3 மாநிலங்கள் சந்திக்கும் இடத்திற்கு அருகில் சம்பல் நதிக் கரையில் அமைந்து உள்ளது.
- முதலைப் பாதுகாப்புத் திட்டமானது 1975 ஆம் ஆண்டில் பல்வேறு மாநிலங்களில் தொடங்கப் பட்டுள்ளது.
- கரியால் மற்றும் உவர்நீர் முதலைப் பாதுகாப்புத் திட்டமானது 1975 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் முதன்முதலில் ஒடிசா மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டது. அதன் பிறகு சதுப்பு நில முதலைப் பாதுகாப்புத் திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது.
- "CrocBITE" என்பது மனிதர்களின் மீதான முதலைகளின் தாக்குதல்களைப் பதிவு செய்யும் ஒரு நிகழ்நேரத் தரவுத் தளமாகும்.

## நீடித்த அறுசுவை உணவியல் தினம் – ஜுன் 18

- இது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் (UNGA - United Nations General Assembly) தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- யுனெஸ்கோ, உணவு மற்றும் வேளாண் அமைப்பு மற்றும் UNGA ஆகியவை ஐக்கிய நாடுகள் அமைப்புகளுடன் இணைந்து இத்தினத்தை அனுசரிக்கின்றன.
- அறுசுவை உணவியலானது உணவுக் கலை என்றறியப் படுகின்றது. இது உள்ளூர் உணவு மற்றும் சமையற் கலைக்காகவும் குறிப்பிடப் படுகின்றது.

## ஜூன்டீன்த் நாள் - ஜூன் 19

- ஜூன் மற்றும் பத்தொன்பது (Nineteen) ஆகிய இரண்டும் சேர்ந்ததே ஜூன்டீன்த் என்பதாகும்.

- இந்த நாளானது அமெரிக்காவில் அடிமைத் தனத்தை முடிவிற்குக் கொண்டு வந்ததின் பொருட்டு தேசிய அளவில் கொண்டாடப்படும் ஒரு மிகப் பழமையான நினைவு நாளாகும். இது ஜூன் 19 அன்று அனுசரிக்கப் படுகிறது.
- 1865 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் தினத்தில் மேஜர் ஜெனரல் கார்டன் கிரான்கர் என்பவர் டெக்சாஸின் கால்வெஸ்டனுக்கு வந்து உள்நாட்டுப் போர் மற்றும் அடிமைத் தனம் ஆகிய இரண்டின் முடிவையும் அறிவித்தார்.
- அப்போதிலிருந்து, இது ஆப்பிரிக்க அமெரிக்கர்களுக்கான சுதந்திரத்தைப் பெருமளவில் குறிக்கும் ஒரு தினமாக மாறியுள்ளது.

## சச்சரவுகளின் போதான பாலியல் வன்கொடுமைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் – ஜூன் 19

- 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இத்தினத்தைப் பறைசாற்றியது.
- இந்தத் தினமானது 2008 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தைக் கொண்டாடுவதற்காக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இது முதன்முறையாக பாலியல் வன்கொடுமையை போரின் போதான திட்டமிடப் படாத ஒரு விளைவாக அல்லாமல் போரின் ஆயுதமாக அங்கீகரித்தது.

## உலக அரிவாள் உயிரணு (செல்) விழிப்புணர்வு தினம் – ஜூன் 19


- இந்த நோய் பெற்றோர்களிடமிருந்துக் குழந்தைகளுக்கு மரபணு ரீதியில் ஏற்படும் ஒரு இரத்தக் கோளாறு சார்ந்த பிரச்சினையாகும்.
- 2008 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது அரிவாள் உயிரணு நோயை ஒரு பொதுச் சுகாதாரப் பிரச்சினையாகவும் உலகின் முன்னணியில் உள்ள மரபு சார்ந்த நோய்களில் ஒன்றாகவும் அங்கீகரித்துள்ளது.
- இந்தியாவில், இந்நோயானது குஜராத், வடக்கு மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் மேற்கு ஒடிசா ஆகிய மாநிலங்களில் மிகப் பரவலாகக் காணப் படுகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “உயிரோடு இருப்போம் என்று நம்பிக்கை கொள்ளல்: அரிவாள் உயிரணு நோய் மற்றும் கோவிட் – 19” என்பதாகும்.

## பொழுதுபோக்கிற்காக நடத்தலுக்கான உலக தினம் – ஜூன் 19

- சாண்டர் (Saunter) என்பது நிதானமான (பதற்றமற்ற நிலையில்) முறையில் மெதுவாக நடத்தலைக் குறிக்கின்றது.
- நமது பரப்பரப்பான சூழ்நிலையிலிருந்து விடுபடுவதற்காக இத்தினமானது அனுசரிக்கப் படுகின்றது.

## உலக அகதிகள் தினம் – ஜூன் 20

- இது 2001 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகளால் அனுசரிக்கப்படும் ஒரு சர்வதேச அனுசரிப்பு தினமாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “ஒவ்வொரு நடவடிக்கையும் மதிப்பிடப் படுகின்றன” என்பதாகும்.




## சர்வதேச யோகா தினம் – ஜூன் 21

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ஆரோக்கியத்திற்கான யோகா : வீட்டிலேயே யோகாவை மேற்கொள்ளல்" என்பதாகும்.
- 2014 ஆம் ஆண்டில் சர்வதேச யோகா தினமானது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் வெளியிடப்பட்ட ஒரு தீர்மானத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இத்தினம் வட துருவத்தில் இந்த ஆண்டின் நீண்ட பகலைக் கொண்ட ஒரு தினம் ஆகும்.

## ஜூன் கதிர் திருப்பம்

- இது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21 அன்று பூமியின் மீது நிகழும் கதிர் திருப்ப நிலையாகும்.
- வட துருவ அரைக் கோளத்தில், ஜூன் கதிர் திருப்ப நிலை என்பது கோடைக்கால கதிர் திருப்ப நிலையாகும். அதே சமயத்தில் தென் துருவ அரைக் கோளத்தில் இது ஒரு குளிர்காலத் கதிர் திருப்ப நிலையாகும்.
- மேலும் இது வடதுருவக் கதிர் திருப்ப நிலை என்றும் அழைக்கப் படுகின்றது.

## தந்தையர் தினம்

- இத்தினமானது இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிறன்று (2020 – ஜூன் 21) அனுசரிக்கப் படுகின்றது.
- அமெரிக்காவில் தந்தையர் தினமானது சொனோரா ஸ்மார்ட் டாடு என்பவரால் ஏற்படுத்தப் பட்டது. இது 1910 ஆம் ஆண்டில் முதன்முறையாக ஜூன் மாதத்தின் 3வது ஞாயிறன்று அனுசரிக்கப் பட்டது

## உலக இசை தினம் – ஜூன் 21

- இது 1982 ஆம் ஆண்டில் பிரான்சில் ஒரு இசைத் திருவிழாவான "பெட்டி டி லா மியூசிக்" என்ற ஒரு நிகழ்ச்சியாக தொடங்கப் பட்டது.
- பிரான்சின் கலாச்சாரத் துறை அமைச்சரான ஜேக் லேங் என்பவர் இத்தினத்தை ஏற்படுத்துவதின் பின்னணியில் இருந்துள்ளார்.

## உலக நீர்நிலையியல் தினம் – ஜுன் 21

- இது சர்வதேச நீர்நிலை அமைப்பினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இத்தினமானது 1921 ஆம் ஆண்டில் சர்வதேச நீர்நிலையியல் அமைப்பு தொடங்கப் பட்டதின் நினைவு தினத்திற்காகத் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "நீர்நிலையியல் – தனிச்சுதந்திரத் தொழில்நுட்பங்களைத் தொடங்குதல்" என்பதாகும்.




## குதிரைலாட நண்டு தினம் – ஜுன் 20

- சமீபத்தில் பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றமானது முதன்முறையாக 2020 ஆம் ஆண்டு ஜுன் 20 ஆம் தேதியன்று சர்வதேச குதிரைலாட நண்டு தினத்தை அனுசரிக்க முடிவு செய்துள்ளது.
- இது ஒரு கடல்சார் "வாழும் புதைபடிவமாக" அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- பின்வரும் 3 இந்தோ-பசிபிக் இனங்கள் இந்தியா, தென்கிழக்கு ஆசியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய கடற்பகுதிகளில் காணப் படுகின்றன.
  - மூன்று முதுகெலும்பு கொண்ட குதிரைலாட நண்டு (IUCN - அருகிவரும் இனம்)
  - கடலோர குதிரைலாட நண்டு, (IUCN – பட்டியலிடப் படவில்லை)
  - சதுப்பு நில (மாங்குரோவ்) குதிரைலாட நண்டு (IUCN – பட்டியலிடப் படவில்லை)
- இந்தியாவில் உள்ள ஒடிசா மாநிலமானது இதன் மிகப்பெரிய வாழ்விடமாகத் திகழ்கின்றது.



## சர்வதேச ஒலிம்பிக் தினம் – ஜுன் 23

- 1894 ஆம் ஆண்டு ஜுன் 23 அன்று சர்வதேச ஒலிம்பிக் குழுவானது பிரான்சின் பாரிஸில் தொடங்கப் பட்டது.
- இத்தினம் 1948 ஆம் ஆண்டில் முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.




## ஐக்கிய நாடுகள் பொதுப் பணி தினம் – ஜுன் 23

- 2002 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஜுன் 23 ஆம் தேதியை ஐக்கிய நாடுகள் பொதுப் பணி தினமாக அனுசரிக்க முடிவு செய்தது.
- இது சமூகத்திற்கான பொதுப் பணியின் விழுமியங்கள் மற்றும் நல்லொழுக்கத்தை எடுத்துக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சர்வதேச விதவைகள் தினம் – ஜுன் 23

- இந்தத் தினமானது ஸ்ரீமதி புஷ்பா வாடி லோம்பா என்பவரின் நினைவாக லோம்பா நிறுவனத்தினால் நிறுவப் பட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2010 ஆம் ஆண்டில் இத்தினத்தை ஏற்றுக் கொண்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நான் ஒரு தலைமுறை சமத்துவம் : பெண்களின் உரிமைகளை உணர்தல்" என்பதாகும்.




## மாலுமிகளின் (கடற் பிரயாணி) தினம் – ஜுன் 25

- தற்பொழுது இது ஐக்கிய நாடுகள் அனுசரிப்பின் வருடாந்திரப் பட்டியலில் இணைக்கப் பட்டு உள்ளது.
- இது குறித்த ஒரு தீர்மானமானது 2010 ஆம் ஆண்டில் பிலிப்பைன்சின் மணிலாவில் நடத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டிற்கான மாலுமிகளுக்கான பயிற்சி, சான்றிதழளிப்பு மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றின் தரங்கள் குறித்த ஒரு சர்வதேச ஒப்பந்தத்திற்கான பங்காளர்கள் மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.




- சர்வதேசக் கடல்சார் அமைப்பானது இத்தினத்தை அனுசரிப்பதற்கான ஒரு தலைமை அமைப்பாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "மாலுமிகள் என்பவர்கள் முக்கியமான பணியாளர்கள்" என்பதாகும்.

## உலக வெண்புள்ளி தினம் – ஜுன் 25

- இந்தத் தினமானது அமெரிக்காவின் விஆர் நிறுவனம் மற்றும் நைஜீரியாவின் "VITSAF" நிறுவனம் ஆகிய இலாப நோக்கமற்ற அமைப்புகளினால் தொடங்கப் பட்டுள்ளது.
- முதலாவது உலக வெண்புள்ளி தினமானது 2011 ஆம் ஆண்டு ஜுன் 25 அன்று அனுசரிக்கப் பட்டது.

## போதை மருந்து முறைகேடு மற்றும் சட்ட விரோதக் கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் – ஜுன் 26

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது உலகம் முழுவதும் போதை மருந்து முறைகேடுகளற்றச் சமுதாயத்தை உருவாக்கும் பொருட்டு இத்தினத்தை அறிவித்து உள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "சிறந்த நலத்திற்கான சிறந்த அறிவு" என்பதாகும்.
- இந்த நிகழ்வின் போது, போதை மருந்துகள் மற்றும் குற்றங்கள் குறித்த ஐக்கிய நாடுகள் அலுவலகமானது உலக போதை மருந்து அறிக்கை – 2020 என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.




## சித்திரவதைக்கு உள்ளானவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான சர்வதேச தினம் – ஜுன் 26

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இத்தினத்தை 1997 ஆம் ஆண்டில் பறை சாற்றியது.




## தேசிய வாசிப்பு நாள் - ஜூன் 19

- ❖ கேரளாவின் நூலக இயக்கத்தின் தந்தையான புத்துவாயில் நாராயண பணிக்கரைக் கௌரவிப்பதற்காக வேண்டி இது கொண்டாடப் படுகிறது.
- ❖ அவரது குறிப்பிடத்தக்க பங்களிப்பானது கேரள மாநிலத்திற்கு அனைவருக்குமான கல்வியறிவு விகிதத்தை அடைய உதவியது.

## சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் (MSME) தினம் – ஜூன் 27

- ❖ 2017 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பானது இத்தினத்தை அனுசரிப்பதற்காக வேண்டி ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- ❖ இந்த ஆண்டானது 4வது MSME தினத்தைக் குறிக்கின்றது.
- ❖ இந்த ஆண்டில் இத்தினத்திற்கான உலகளாவியக் கருத்துரு, "MSME : சமூகத் தேவைகளுக்கு முதலில் எதிர்வினையாற்றுபவர்கள்" என்பதாகும்.
- ❖ இந்தியாவில் இந்தக் கருத்துரு "கோவிட் 19: மிகப்பெரும் ஊரடங்கும் சிறு வணிகத்தின் மீது அதன் தாக்கமும்" என்பதாகும்.




## தேசியப் புள்ளியியல் தினம் – ஜூன் 29

- ❖ இது பேராசிரியர் PC மஹலநோபிஸின் பிறந்த தினத்தன்று அனுசரிக்கப் படுகின்றது.
- ❖ உலக அங்கீகாரத்தைப் பெற்ற முதலாவது புள்ளியியல் அறிஞர் இவராவார். இவர் இந்தியப் புள்ளியியலின் தந்தை என்று அழைக்கப்படுகின்றார்.
- ❖ இவர் இந்தியப் புள்ளியியல் அமைப்பின் தலைமைக் கட்டமைப்பாளராகக் குறிப்பிடப் படுகின்றார்.

- இவர் 1931 ஆம் ஆண்டில் கொல்கத்தாவில் இந்தியப் புள்ளியியல் நிறுவனத்தை ஏற்படுத்தினார்.
- இவர் சுதந்திர இந்தியாவின் முதலாவது திட்டக் குழு ஆணையத்தின் (1951-56) உறுப்பினராகவும் பணியாற்றினார்.
- 2020 ஆம் ஆண்டிற்கான புள்ளியியல் தினத்தின் கருத்துரு, "நீடித்த வளர்ச்சி இலக்கு – 3 (அனைவருக்கும் அனைத்து வயதிலும் ஆரோக்கியமான வாழ்வு மற்றும் நலனை உறுதி செய்தல்) & நீடித்த வளர்ச்சி இலக்கு – 5 (பாலினச் சமத்துவத்தை உறுதி செய்தல் & பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரமளித்தல்)" என்பதாகும்.

## சர்வதேச வெப்பமண்டல தினம் – ஜூன் 29

- இது வெப்பமண்டலப் பகுதியின் மிகச் சிறப்பான பன்முகத் தன்மையை அனுசரிப்பதற்காகக் கொண்டாடப் படுகின்றது.
- 2016 ஆம் ஆண்டு ஜூன் 14 அன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இத்தினத்தை ஏற்றுக் கொண்டது.
- 2014 ஆம் ஆண்டில் இத்தினத்தன்று, நோபல் பரிசு பெற்றவரான ஆங் சான் சூகி முதலாவது வெப்பமண்டலப் பகுதியின் நிலைமை என்ற அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.
- வெப்பமண்டலப் பகுதி என்பது புவியில் உள்ள கடகரேகை (23° 27 வடக்கு) மற்றும் மகர ரேகை (23° 27 தெற்கு) ஆகியவற்றுக்கு இடைப்பட்ட பகுதி என்று வரையறுக்கப்படும் ஒரு பகுதியாகும்.

## சர்வதேசக் குறுங்கோள் தினம் – ஜூன் 30

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இது குறித்த ஒரு தீர்மானத்தை 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்றுக் கொண்டது.
- இது 1908 ஆம் ஆண்டு ஜூன் 30 அன்று ரஷ்யக் கூட்டமைப்புப் பகுதியான சைபீரியாவின் மீது ஏற்பட்ட துங்குஸ்கா என்ற தாக்கத்தின் நினைவாக அனுசரிக்கப் படுகின்றது.
- இது பூமியின் மீது குறுங்கோள் தொடர்பாக நிகழ்த்தப்பட்ட மிகவும் தீங்கு விளைவித்த ஒரு நிகழ்வாகும். இது உள்ளூர்த் தாவரங்கள் மற்றும் விலங்குகளை அழித்தது.

## சர்வதேச நாடாளுமன்றவாத தினம் – ஜூன் 30

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2018 ஆம் ஆண்டில் இத்தினத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- இந்தத் தினமானது 1889 ஆம் ஆண்டில் இதே தினத்தில் உலக நாடாளுமன்ற அமைப்பான நாடாளுமன்றங்களுக்கான ஒன்றியம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்ட தினத்தைக் குறிக்கின்றது.
- 930 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஐஸ்லாந்தின் நாடாளுமன்றமான "அல்திங்கி" ஆனது உலகின் மிகப் பழமையான நாடாளுமன்றமாக விளங்குகின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★